# இலக்கிய மலர்கள்

அ. திருமலைமுத்துசுவாமி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

## ஆசிரியரது பிற நூல்கள்

1. A B C of Library Science
2. A Bibliography on Thirukkural
3. An introduction to Tamil Literature
4. Essays on Library Science
5. Public Library System—Local Library Authority, Madras—A case study (in press)
6. அமெரிக்க நூலகங்கள்
7. அறிவியற் சோலை
8. இலக்கண வழிகாட்டி
9. இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும்
10. உயர்நிலைப் பள்ளி நூலகம்
11. உரிமைப்போர்
12. சைவ நன்னெறி
13. தமிழ் நாடும் மொழியும்
14. தமிழகப் பொது நூலக வளர்ச்சிக்கு மாதிரித் திட்டம்
15. நூல்நிலையம்
16. நூலக அமைப்பியல்
17. நூலக ஆட்சி
18. நூலக நாட்டில் நூற்றிருபது நாட்கள்
19. நூலகவியல் ஓர் அறிமுகம்
20. நூலகவியல் சிந்தனைகள்
21. மலைவாழ் மக்கள்
22. மறுமலர்ச்சிக் கவிஞர்கள்
23. முதலுதவி
24. முதற் பொது நூலக இயக்கம்
25. யாப்பிலக்கணச் சுருக்கம்
26. விஞ்ஞானத்தின் கதை

முதற் பதிப்பு — ஆகஸ்டு 1975

அருணாசலம் திருமலைமுத்துசுவாமி (1928)

© அ. திருமலைமுத்துசுவாமி

O31: g
N 75

விலை ரூ. 5-00

பரணி & பரணி அச்சகம், 3. அந்தோணி தெரு, சென்னை

# நூலைப் பற்றி

இலக்கிய மலர்கள் என்னும் இந்நூல் ஓர் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பு ஆகும். எனது தமிழ் இலக்கியச் சிந்தனைக் கோவையே இக்கட்டுரைத்தொகுப்பு. இத்தொகுப்பில் காணும் கட்டுரைகள் தமிழன் இளந்தமிழன், செந்தமிழ், நெல்லைச் செய்தி முதலிய இதழ்களில் ஏற்கெனவே வெளிவந்தவை. அவற்றை அவ்விதழ்களில் வெளியிட்ட ஆசிரியர்களுக்கு இதுகால் எனது நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் இலக்கியப் பூஞ்சோலையில் எனது மலர்களும் நறுமணம் வீசித்திகழும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. தமிழ் மக்கள் இம்மலர்களின் மணத்தை நுகர்ந்து மகிழ வேண்டுகின்றேன்.

தமிழ் புரக்கும் நமது தன்னேரில்லாத் தலைவர், தமிழ கவள், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்களது தலைசிறந்த தமிழ் மொழி, இலக்கியப் பணிகளைப் பாராட்டும் வகையில் இவ்விலக்கிய மலர்களை அவர்களுக்குச் சூட்டுகின்றேன்.

இந் நூலைப் பற்றி நான்கு அறிஞர்கள் தங்களது கருத்து மணிகளைத் தந்துள்ளனர். முதல்வர் வணக்கத்திற்குரிய எனது பேராசிரியர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், பேராசிரியர் திரு அன்பழகன் ஆவார்கள். இரண்டாமவர் கல்விப் பேரறிஞர், மதுரத் தமிழ் வளர்க்கும் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு சை. வே. சிட்டிபாபு ஆவார்கள். மூன்றுமவர் எனது மதிப்பிற்குரிய அண்ணன், பேராசிரியர் திரு. ம. ரா. போ. குருசாமி ஆவார் கள். அடுத்தவர் எனது அன்பிற்குரிய தம்பி, பேராசிரியர்

எட்டுத் தொகை—பட்டினப்பாலை—பாரிவள்ளல்—காப்பியத் தமிழ்—குறவஞ்சிப்புலவர்—திரு. வி.க.வின் 'இந்தியாவும் விடுதலையும்', டாக்டர் மு. வ. அவர்களின் நாவல் திறன்—ஆகிய தலைப்புக்களைக் கொண்டே—இந்த ஏடு பல்சுவையும் பயப்பது கண்டு கொள்ளலாம்.

இந்த இருபதாம் நூற்றுண்டில், கவிதை முக்கியத்துவம் உடையதே எனினும், கட்டுரையே கருத்துக்களைத் தெளிவுபடுத்தும் வல்லமையால்—பெரிதும் மேற்கொள்ளப்படுவதாகும். அத்தகைய கட்டுரைகளைத் திறம்பட வழங்கியது மூலம் தமிழ் மொழி ஆக்கத்திற்கு ஆசிரியர் ஆற்றியுள்ள பணியை நான் வரவேற்கின்றேன்.

முன்னரும் பல நூல்களை உருவாக்கியுள்ள—நூலகத் துறைப்பேராசிரியர், நூலகங்களின் அகப்பொருளாய் விளங்கும் இலக்கியச் செல்வத்தைப் பெருக்குவதை—பின்னரும் தொடருவார் என்னும் உறுதி எனக்குண்டு. அவரது தொண்டு வளர வாழ்த்துகிறேன்.

அன்பன்,

சென்னை,
24-7-75.

(ஒம்) க. அன்பழகன்

# சிறப்புரை

பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு எம்.ஏ., எல்.டி
துணைவேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம்
மதுரை

இன்றையத் தமிழில் இலக்கியக் கட்டுரைகள் எழுதுவது ஒரு புதிய முயற்சி. சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை இலக்கியக் கட்டுரைகளில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இவைகளில் எடுத்தாளப்படும் ஆய்வு இலக்கிய வரலாறு, இலக்கியத் திறனாய்வு, மொழி நடை ஆய்வு, வரலாற்று ஆய்வு போன்ற பிரிவுகளில் நடைபெற்று வருகிறது. திரு. அ. திருமலைமுத்துசுவாமி ஒரு சிறந்த இலக்கியக் கட்டுரையாளர். 'இலக்கிய மலர்கள்' என்னும் இந்தக் கட்டுரை நூலில், முதலில் இக்கால இலக்கியத்திலிருந்து தொடங்குகிறார்; அடுத்தடுத்து வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்துக்கொண்டே சென்று, சங்க இலக்கியத்தைப் பற்றி இறுதியில் சொல்லி முடிக்கிறார்.

இதிலுள்ள 'டாக்டர் மு. வ. அவர்களது நாவல்திறன்' ஒரு திறனாய்வுக் கட்டுரை. திரு. வி. க. வின் 'இந்தியாவும் விடுதலையும்' பற்றிய கட்டுரை புத்தகத்திறனாய்வு என்று கூறலாம். சங்க காலப் பாரி வள்ளலைப்பற்றிய கட்டுரை வரலாற்று ஆய்வாகச் சிறிதளவு அமைந்திருக்கிறது. மற்றக் கட்டுரைகள் இலக்கிய வரலாறு என்னும் பிரிவில் அடங்கும். டாக்டர் மு. வ. வின் மொழிநடையும் முதல் கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகிறது. இவ்வாறு பல ஆய்வுப் பிரிவுகளில் தமிழ் இலக்கியத்தில் கூறப்படும் கருத்துக்களையும் பண்பாட்டுக் குறிப்புக்களையும் இலக்கிய விளக்கக் கட்டுரை வடிவத்தில் தந்திருக்கிறார் திரு. திருமலைமுத்துசுவாமி.

இவரது இலக்கியப் புலமைச் சிறப்புப் பாராட்டுக் குரியதாகும். இந்நூல் இலக்கிய வரலாறு கற்கும் மாணவர்கட்குப் பெரிதும் பயன்தரக் கூடியது. இம்மலர்களின் இலக்கிய மணத்தை நுகர்ந்து அனைவரும் இன்புறுவாராக.

மதுரை-21,
நாள்: 24-7-75.

(ஒம்) சை. வே. சிட்டிபாபு

# பாராட்டுரை

பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி எம்.ஏ.,எம்.லிட்.
தமிழ்த்துறைத் தலைவர்
பீளமேடு, கோவை

தமிழ்ச் செல்வத்தைத் தம் மரபுவழி உரிமையாகப் பெற்றவர் அருங்கலைக்கோன் திரு. அ. திருமலைமுத்துசுவாமி அவர்கள். தமிழ் மொழியிலும் நூலக இயலிலும் நிறைகலைப் பட்டம் பெற்றவர் ; ஆசிரியப் பயிற்சியிலும் பட்டம் பெற்றுள்ளார். தமிழாய்வுத் திறத்தை நிலைநாட்டும் வகையில் ஒரு பட்டமும் (எம். லிட்.) அவருக்கு உண்டு. தமிழிலும் நூலக இயலிலும் தனித் தனியே டாக்டர் பட்டம் பெறுதற்குரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள தனிச் சிறப்பும் உடையவர் திரு. திருமலைமுத்துசுவாமி.

புலவர், அறிஞர், ஆய்வாளர், நூலாசிரியர், நூலகவியல் துறைப் பேராசிரியர் ......... பல திறம் உடைய நண்பர் எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்பாகிய இந்நூலினை முதலில் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றேன்.

தொல்காப்பியர் முதல் மு. வ. வரை [illegible] புலமைச் செல்வர்களை நண்பர் நமக்கு இந்த நூலிலே அறிமுகப்படுத்துகிறார். டாக்டர் தெ.பொ.மீ. அவர்கள் இலக்கிய வரலாற்றை இக்காலத்திலிருந்து தொடங்கிப் பழங்காலம் நோக்கி விளக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்வார். இந்த உத்தியினை இந்நூலில் காணுகின்றோம்.

டாக்டர் மு. வ. பல திறப்பட்ட துறைப் புலமைக் களஞ்சியமாகப் பொலிந்த பெருமான் ; அவர்தம் நாவல் திறனை முதல் கட்டுரை ஆய்வு முறையில் தெளிவுபடுத்துகின்றது. திரிகூடராசப்பரின் குற்றாலக் குறவஞ்சியை ஆசிரியர் அறி

முகப் படுத்துகிறார் அடுத்த கட்டுரையில். 'இந்தியாவும் விடுதலையும்' என்ற நூலினை அடிப்படையாகக் கொண்டு தமிழ் முனிவர் திரு. வி. க. வின் உரைநடைத் திறனை ஆராய்ந்து விளக்குகிறது மூன்றாவது கட்டுரை. நான்காவது கட்டுரை காப்பியத் தமிழ் காப்பியம் என்ற இலக்கிய வடிவினைச் சுருக்கமாக விளக்கித் தமிழிலுள்ள பண்டைப் பெருங் காப்பியங்களைப் பற்றிய குறிப்புகளை ஆசிரியர் இதில் வழங்கியுள்ளார்.

பாரி வள்ளல் பற்றியது ஐந்தாவது கட்டுரை. எட்டுத் தொகை பற்றிய அறிமுகமாக விரிகிறது ஆறாவது கட்டுரை. பட்டினப்பாலையை அறிமுகப்படுத்தும் ஏழாவது கட்டுரையுடன் நூல் முடிகிறது.

பாலையில் நூல் முடிகிறது; ஆனால், நூலிலே வறட்சி இல்லை; தமிழின் ஈரப் பசுஞ்சொல் வளம் இருக்கிறது.

ஆய்வு முறைக்கு மு. வ., திரு வி. க. ஆகியோர் பற்றிய கட்டுரைகள் நல்லணி நல்குவன. பாரி — மூவேந்தர் முரண்பற்றி ஆசிரியர் நுணுக்கமாக ஆய்ந்துள்ளார். ஏனைய கட்டுரைகளெல்லாம் உரிய நூல்களைத் திட்பமுறப் பயில்வதற்குப் பாயிரமனைய அறிமுகமாக அமைந்துள்ளன. எளிய நடையில் பொலிவுற எழுதியுள்ள ஆசிரியர் திறம் பாராட்டத் தக்கது. தமிழ் இளங்கலை, நிறைகலை வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்க்கு ஒராற்றான் இக்கட்டுரைகள் பயன்படக் கூடும் எனக் கருதுகிறேன்.

கோவை,
24-7-75.

(ஒம்) ம. ரா. போ. குருசாமி

# அணிந்துரை

பேராசிரியர் அ. சங்கரவள்ளி நாயகம்
எம்.ஏ., பி.டி.,
தமிழ் விரிவுரையாளர், கோ. வெ. நா. கல்லூரி
கோயில்பட்டி

மொழியின் முதிர்ந்த பயன் இலக்கியம் எனலாம். உயர்ந்த கருத்துக்களைத் தன்னுள் கொண்டிருப்பதே இலக்கியம் எனப்படும். இலக்கியமே மக்கள் வாழ்வினைச் சிறப்பிக்கும்; பண்படுத்தும்; இன்பமாக்கும்; உயர்நிலைக்குக் கொண்டு செல்லும். இலக்கியம் என்பது தூய தமிழ்ச் சொல். குறிக்கோளை இயம்புவது என்பதே அதன் பொருளாகும். இலக்கிய வரலாற்று அறிவு இன்று ஒவ்வொரு தமிழனுக்கும் இருத்தல் வேண்டும் என்ற உணர்வு முகிழ்த்து வருவது பாராட்டிற்குரியது. இவ்வுணர்வினை நிறைவு செய்யும் நிலையில் மலர்ந்ததே "இலக்கிய மலர்கள்" எனும் இந்நூலாகும்.

இந்நூலினைப் படைத்திருக்கும் பேராசிரியர் திருமிகு அ. திருமலைமுத்துசுவாமி நாடறிந்த நற்றமிழ்ப் புலமையாளர் ஆவார்கள். சென்னைப் பல்கலைக் கழகம் நடத்தும் நூலகவியல் குறுகிய காலப் பயிற்சியில் எனக்கு வாய்த்த நல்லாசான் ஆவார்கள். தமிழ்மொழியில் முதுகலைப் பட்டத்துடன் ஆய்வுப் பட்டமும் நூலகவியலில் முதுகலைப் பட்டமும் பெற்ற நன்முயற்சியாளரும் ஆவார்கள். இரு துறைப் புலமையுடன் இலங்கும் இவர்கள் எழுதிய இந்நூல் கற்றோர்க்கு மட்டுமின்றி, மற்றோர்க்கும் பயன்படும் பாங்கினைப் பெற்றுள்ளது. இலக்கியச் செல்வர்க்குரிய கருத்துச்

செறிவும், நூலக வல்லார்க்குரிய அணுகுமுறைச் சிறப்பும் இந்நூல் முழுவதிலும் இழைந்திருக்கக் காணலாம்.

புரிந்த ஒன்றைக் கொண்டு புரியாத ஒன்றை விளக்க வேண்டுமென்பது தருக்க நூலின் கோட்பாடாகும். அக்கோட்பாட்டைக் கையாள்வதில் இந்நூலாசிரியர் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியுள்ளார்கள். எளிமையாகப் புரியும் தன்மையதான இன்றைய புதின உலகத்திற்கு அறிமுகம் செய்து படிப்படியாகக் காலத்தைப் பின்னோக்கி இழுத்து முடிவில் சங்க காலச் சரக்கறைக்குள் நம்மை நிறுத்தி இறவா இலக்கிய இன்பத்தைத் துய்க்க வைத்திருக்கின்றார்கள்.

முதற் கட்டுரை இந்நூலாசிரியருக்கு உற்றுழி உதவி நின்ற இலக்கிய உலகின் இணையற்ற விடி வெள்ளியாய் விளங்கிய முனைவர் மு. வ. அவர்கட்கு வழங்கப்பட்டுள்ள நன்றிப் படையல் என நான் கருதுகின்றேன். அக்கட்டுரையில் புதின உலகத்தின் புரட்சி எழுத்தாளரான மு.வ. அவர்களின் புதினங்களைக் காய்தல் உவத்தலின்றி ஆய்வதின் மூலம் புதின இலக்கியத்திற்கு நல்லிலக்கணம் காட்டிச் சென்றுள்ளார்கள். குறவஞ்சி நாடகத் தமிழின் நயத்தை நன்முறையில் எடுத்துக் காட்டுவது இரண்டாம் கட்டுரையாகும். குற்றாலக் குறவஞ்சியின் கூறுபாடுகள் குறைவின்றி நிறை விளக்கம் செய்யப்பட்டுள்ளன. மூன்றாவது கட்டுரை தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் செந்தமிழ் நடையினை நமக்குக் காட்டி நிற்கும் தனித் தமிழ்ச் சுரங்கமாகும். எழுத்து நடை எங்ஙனம் அமைதல் வேண்டும் என்ற வரையறையும் ஆங்காங்கே சுட்டப்படுகின்றது. நான்காவது கட்டுரை நற்றமிழ்க் காப்பியங்களை அளவுடனும் அறுபடாத சுவையுடனும் நமக்கு அறிமுகப்படுத்துகின்றது. வானம் மாறினும் வண்மையின் மாறாப் பாரி பற்றிய கட்டுரை அருந்தமிழ் ஆய்வில் தோய்வார்க்கு நல்விருந்தாகும். பாரி முடிவு பற்றி இதுகாறும் ஒரு முடிவிற்கு வரமுடியாதிருக்கும் தமிழ்ப் புலவர்கட்கு அவன் முடிவு பற்றி ஆசிரியர் தரும்

செய்திகள் மேலும் சிந்தனைத் திறனை வளர்ப்பனவாக உள்ளன. எட்டுத் தொகை பற்றிய கட்டுரை நமது நெஞ்சைத் தொட்டுப் பார்க்கும் நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டுகின்றது. பட்டினப்பாலை பற்றிய இறுதிக் கட்டுரையில் அந்நூலின் பெயர்க் காரணத்தைக் குறிப்பிடுவதோடு நூல் நுவலும் செய்திகளை நிரல்படக் கூறியிருக்கும் ஆசிரியரின் திறன் எண்ணிப் போற்றுதற்குரியது. அனைத்திற்கும் மேலாக ஆசிரியரின் நடை இழுமென ஒலிக்கும் விழுமிய நடையாகும்.

சுருங்கக் கூறின், இம்மலரின் ஒவ்வொரு இதழும் மணமுடையது; அன்றலர்ந்து தேன் பிலிற்றும் வாடாத் தன்மையது. இலக்கிய வரலாற்றைப் பாடமாகக் கற்கும் மாணவர்கட்குக் கிடைத்த கருவூலமாகும். இதனைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு பயன்படுத்த வேண்டும் என்பதே எம் போன்றோரின் இதய விழைவாகும். ஆசிரியரின் தமிழ்த் தொண்டு மேலும் சிறக்க, தமிழ் அன்னையை வழுத்துகின்றேன்.

கோவில்பட்டி,
24-7-75. } (ஒம்) அ. சங்கரவள்ளிநாயகம்

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | டாக்டர் மு.வ. அவர்களது நாவல் திறன் | ... 1 |
| 2. | குறவஞ்சிப் புலவர் | ... 14 |
| 3. | இந்தியாவும் விடுதலையும் | ... 33 |
| 4. | காப்பியத் தமிழ் | ... 46 |
| 5. | பாரோர் கண்டிலாப் பாரிவள்ளல் | ... 69 |
| 6. | எட்டுத்தொகை | ... 79 |
| 7. | பட்டினப்பாலை | ... 107 |

# டாக்டர் மு.வ. அவர்களது நாவல் திறன்

தமிழ்ப் பண்பாட்டை, தமிழர்தம் நாகரிகத்தை, தமிழ் இலக்கியத்தின் இனிமையை, தமிழ் மொழியின் வளத்தை, தமிழ்ப் புலவர்கள் வாரி வழங்கிய வாழ்வியல் கருத்துக்களைத் தமது எழுத்தாலும், பேச்சாலும் தமிழ் மக்கள் அனைவருக்கும் எடுத்துக்கூறி, அவர்களைத் தமிழ் உணர்வுடையவர்களாக விளங்கச் செய்த தமிழ்ச் சான்றோர் களில் தலையாயவர் டாக்டர் மு.வ. அவர்கள். பைந்தமிழ் பரப்பும் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளரா கவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றிய அவர்கள், செந்தமிழ் வளர்க்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணி யாற்றி, சங்கத்தமிழ் வளர்த்த மதுரை மாநகரில்விளங்கும் மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பாங்குடன் பணியாற்றினர்கள். அவர்கள் தமது எழுத்துக்களால் தமிழ் நாட்டு இளையவர்களின் நெஞ்சங்களில் இனிது கொலு வீற்றிருக்கிறார்கள். அத்துடன் அவர்கள், "முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற் றுவ" தோடு, நாட்டுக்கு நலந்தரும் புதுநெறிகளையும், புது மைக் கருத்துக்களையும் போற்றும் புகழ்சால் அறிஞர்; நாடு போற்றும் நாவலாசிரியர்; நாடகாசிரியர்; ஆராய்ச்சியாளர்; ஈடும் இணையும் இல்லா எழுத்தாளர்; மொழியியல் அறிஞர்; உரையாசிரியர்; கவிஞர்; அரசியலறிஞர்; கற்றறிந்த கல்வி யாளர். இங்ஙனம் பலதுறை அறிஞராக விளங்கினாலும், டாக்டர் மு. வ. ஒரு நாவலாசிரியர் என்றே மக்களால் பெரிதும் போற்றப் படுகின்றார்.

தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவராக இன்று தமிழ் மக்கள் அனைவராலும் போற்றப் படுகின்ற டாக்டர் மு. வ. அவர்கள், 1970ஆம் ஆண்டு முடிய எழுதி வெளியிட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை74 ஆகும். அவற்றில்

நாவல்கள் 12. அவையாவன : அகல் விளக்கு, அந்தநாள், அல்லி, கரித்துண்டு, கள்ளோ காவியமோ, செந்தாமரை, நெஞ்சில் ஒரு முள், பாவை, பெற்ற மனம், மண்குடிசை, மலர்விழி, வாடாமலர்.

**சூழ்நிலை**

எத்தகைய சூழ்நிலையில் டாக்டர் மு. வ. வின் நாவல்கள் தோன்றின என்பதை முதலில் சற்றே சிந்தித்தல் நலம். கொலை, கொள்ளை, மர்மம் ஆகிய விறு விறுப்பூட்டும் நிகழ்சிகளைக் கொண்ட ஆங்கில நாவல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியாகிக்கொண்டு வந்தன. இவை எங்கும் காட்டுத்தீபோல் பரவி பரபரப்புச் சூழ்நிலை உண்டாக்கிக் கொண்டிருந்தன. இதைத் தொடர்ந்து பரபரப்பூட்டும் கீழ்த்தர உணர்ச்சியைத் தூண்டும் மூன்றாந்தர நாவல்களும் வெளிவந்தன. ஆனால் விரைவிலேயே இந்த நாவல்களைப் படிப்பதில் தமிழ் மக்களுக்கிருந்த ஆர்வம் குன்றிவிட்டது. நம் நாகரிகச் சிறப்பையும், நம் நாட்டின் மண்ணின் மணத்தையும் விளக்கும் இந்தி, வங்க நாவல்களின் தமிழ் மொழிபெயர்ப்புக்களைப் படிப்பதில் அவர்களின் ஆர்வம் திரும்பியது. வடநாட்டு மொழிகளிலிருந்து பெயர்த்த நாவல்கள் தமிழ் நாட்டில் மலர்ந்தன. ஒரு பத்திரிகையில் இரவீந்திரர் நாவலும், வேறொரு பத்திரிகையில் பங்கிம் சந்திரர் நாவலும், மற்றொன்றில் சரத்சந்திரர் நாவலும் போட்டி போட்டுக் கொண்டு தொடர் கதைகளாக வெளிவந்தன. அவற்றைத் தமிழ்மக்கள் ஆர்வத்துடன் படித்து இன்புற்று வந்தனர். இந்த இன்பத்திற்கிடையே அவர்கள் மனத்திலே ஓர் ஏக்கம் தோன்றியது. அது தமிழின் நன்மைக்காக ஏற்பட்ட ஏக்கம் ஆகும்.

தமிழில் சிறந்த சிறு கதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. அவற்றை எழுதிய எழுத்தாளர்களைத் தமிழ்மக்கள் போற்றி மகிழ்ந்தனர். அதே சமயத்தில் தொடர்கதைகள் மட்டும் மொழி பெயர்ப்பாக இருந்தன. இந்த வேற்றுமை

யைத் தமிழ்மக்கள் உணரத் தொடங்கினர். சிறு கதையைச் சொந்தமாக எழுதிக் குவிக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்குத் தமிழில் நாவல் எழுதும் திறமை இல்லையா? கற்பனை வளம் இல்லையா? எவ்வளவு நாளைக்கு இரவல் இலக்கியத்தைப் படித்து இன்புறுவது? இந்த எண்ணம் — ஏக்கம் — தமிழ் இலக்கிய அன்பர்களுக்கு உண்டாயிற்று. இந்த எண்ணம் சிறு காற்றாக உலவிப் புயலாக மோதியது. அதன் விளைவாகத் தமிழிலும் சொந்தமாக நாவல்கள் எழுதத் தமிழ் எழுத்தாளர்கள் முன் வந்தார்கள். அந்த முன்னோடி நாவலாசிரியர்களில் ஒருவர் டாக்டர் மு. வ. அவர்கள்.

## விதிவிலக்கு

இந்த முன்னோடி நாவலாசிரியர்களுள்ளும் டாக்டர் மு. வ. அவர்களுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. தமிழில் வெளிவரத் தொடங்கிய ஆரம்ப நாவல்களில் பெரும் பாலானவை, பத்திரிகைகளில் தொடர் கதைகளாகவே வெளிவந்தன. இதற்குக் காரணம் புனைகதை வளர்ச்சிக்குப் பெருந்துணையாக இருந்தவை இன்றும் இருப்பவை-பத்திரிகை களே. எழுத்தாளர்கள் மக்களிடையே அறிமுகம் ஆவதற் கும், புகழும் விளம்பரமும் பெறுவதற்கும் இப்பத்திரிகைகளே இன்றியமையாத கருவியாக விளங்குகின்றன. தமிழ் நாட்டின் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் பத்திரிகைகளின் வாயிலாகவே வெளி உலகிற்குத் தெரிய வந்தனர்.

"பரிசுக்காகவும் பத்திரிகையில் தொடர்கதை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்காகவும் நாவல்களைப் படைக் கிறவர்களையே என்றும் எங்கும் காண்கிறோம். வேறு எந்த விதமான தூண்டுதலும் இல்லாமல் படைப்புத்திறனைக் காட்டி நாவல் எழுதுகிறவர்கள் மிகமிகக் குறைவாகப் போய்விட்டார்கள்" என்று தமிழறிஞர்கள் வருந்துகின்ற நிலை தோன்றியது.

இதற்கு விதிவிலக்காக விளங்கியவர் டாக்டர் மு.வ. அவர்கள். பத்திரிகைகளின் பகட்டும் கவர்ச்சிகரமான விளம்

பரமும் இன்றியே நாவல் எழுத்துலகில் கா லூன்றி நிற்க முடியும் என்று மெய்ப்பித்துக் காட்டியவர் டாக்டர் மு.வ. அவர்களே ஆவார்கள். "இந்தப் பதினைந்து ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் வெளி வந்த நாவல்களில் நூற்றுக்கு 90 விழுக்காடு தொடர்கதைகளாகவே வந்தவை. டாக்டர் மு.வ. போன்றவர்கள் இதற்கு விதிவிலக்கு. அவரைப் போன்ற மிகச் சிலரே நாவலைத் தனியே எழுதி முடிக்கிறார்கள்" என்று திரு. கி.வா. ஜகன்னாதன் அவர்கள் "தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் தமது நூலில் பாராட்டியுள்ளார்கள் என்றால் அதற்குக் காரணம் உண்டு. டாக்டர் மு.வ. எழுதிய நாவல்களில் பெரும்பாலானவை நேரடியாகவே நூல் வடிவம் பெற்றவை. "பாவை" என்ற நாவல் 'லோகோபகாரி"யிலும், "அந்தநாள்" என்ற நாவல் "தமிழ்முரசு" ஏட்டிலும் தொடர்கதைகளாக வெளிவந்தன. இவற்றையும் டாக்டர் மு.வ. தொடர்கதையாக எழுதவில்லை. முழு நூலாகவே எழுதி முடித்தார். இதழாசிரியர்கள் தங்கள் வசதிக்காக அவற்றைத் தொடர்கதைகளாக வெளியிட்டுக் கொண்டார்கள்.

## அகத்தது காட்டும் நாவலாசிரியர்

நாவலாசிரியர்களைக் "கடிகார முகப்பு நாவலாசிரியர்கள்" (Dial-plate Novelists) என்றும், "அகத்தது காட்டும் நாவலாசிரியர்கள்" (Inner-working Novelists) என்றும் இருவகையாக அறிஞர்கள் பிரிப்பார்கள். வெளித் தோற்றங்களையும், ஆடையணிகளையும், சூழ்நிலைகளையும் மிகுதியாக வருணிப்பவர்கள் கடிகாரமுகப்பு நாவலாசிரியர்கள் ஆவார்கள். மனித மனத்தின் அலைகளையும் புயல்களையும் இன்பச் சுழிப்புக்களையும் வேதனைகளையும் மிகுதியாக வெளியிடுபவர்களே அகத்தது காட்டும் நாவலாசிரியர்கள் ஆவார்கள்; இவ்விரு வகை நாவலாசிரியர்களுள் டாக்டர் மு.வ. இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர் என்று துணிவாகக் கூறலாம். அவருடைய "செந்தாமரை", "கள்ளோ காவியமோ?" என்ற

நாவல்களில் வாழ்வின் செம்மையையும், காதலின் மாண்பினையும், பாத்திரங்களின் உள்ளப் போராட்டங்களையும், உணர்வின் எழுச்சி வீழ்ச்சிகளையும் அவர்கள் திறம்படச் சித்திரித்து உள்ளார்கள். தாய்மையின் ஆற்றலையும், தாய் உள்ளத்தின் வேதனைகளையும் வெளிப்படுத்துகிறது "பெற்ற மனம்". உணர்ச்சிக்கும் அறிவுக்கும் இடையே நடக்கும் இடையறாத போராட்டத்தை "அகல் விளக்கு" சித்திரிக்கிறது: கலை உள்ளத்தை நுணுகி ஆராய்ந்து கூறுவதாகக் "கரித்துண்டு" அமைந்துள்ளது. ஆண் பெண் உறவுச் சிக்கல்களையும், அதனால் குடும்பத்தில் உண்டாகும் குழப்பங்களையும் நுட்பமாகப் படம் பிடித்துக் காட்டும் வகையில் "மலர்விழி" "அல்லி", நெஞ்சில் ஒரு முள்" என்னும் நாவல்கள் விளங்குகின்றன. அவருடைய நாவல்கள் யாவும் படிப்போரின் நெஞ்சில் ஆயிரமாயிரம் சிந்தனைக் கிளர்ச்சிகளையும், வினாக் குறிகளையும் எழுப்பி அவர்களைத் தூண்டும் ஆற்றலுடையனவாகத் திகழ்கின்றன. மனிதப் பண்புகளையும், மனித மனத்தின் ஆழ்ந்த இயல்புகளையும், உண்மைக் காதலையும், நுட்பமான உணர்ச்சிகளையும், அவை காட்டுகின்றன; நம் நாகரிகச் சிறப்பையும், நம் நாட்டு மண்ணின் மணத்தையும் விளக்குகின்றன. அவருடைய படைப்புக்கள் அனைத்திலும் நல்ல குடும்ப வாழ்க்கையும் பண்பட்ட சமுதாயமும் உருவாக வேண்டுமென்ற விழுமிய நோக்கம் முனைப்பாகத் தெரிகிறது. அறன் வலியுறுத்தல் நோக்கில் எழுந்த நீதி நாவல்களாக அவை அமைந்துள்ளன. அவருடைய நாவல்களைப் படித்தால், ஒரு காவியத்தைப் படித்த பிறகு உண்டாகும் நிறைவு தோன்றுகிறது. செய்யுளில் அமைந்த காவியத்தைப் பொருள் அறிந்து படித்து இன்புறுவது எல்லோராலும் இயலாத காரியம். அதற்குத் தகுதியும் பயிற்சியும் வேண்டும்; ஆனால் டாக்டர் மு.வ. வின் நாவல்களோ உரைநடையில் அமைந்த காவியங்களாக நமக்கு விளங்கும். தெளிவான நடையில், இயல்பாக அலையோடும் அந்த நடையின் அழகோடு, மாசுமறுவற்ற கண்ணாடியில் காணும் காட்சிகளைப் போன்ற நிகழ்ச்சிகளோடு மகிழ்ச்சியை ஊட்டுகின்றன;

காவியங்களில் இருப்பதைப் போலவே இவற்றிலும் வருணனை கள் உண்டு. ஆனால், காவிய வருணனைகளில் 'உயர்வு நவிற்சி' இருக்கிறது; 'இவற்றில் தன்மை நவிற்சி'யைக் காண்கிறோம்; இவருடைய நாவலை முற்றும் படித்த பிறகு உண்டாகும் நிறைவில், இலக்கிய இன்பத்தில், சுவையில் நாம் அமிழ்ந்து போகிறோம். எளிதில் அதனின்றும் மீள முடிவதில்லை. இது தானே இலக்கிய இன்பம்? இதனை இவருடைய நாவல்களில் முழுமையாகக் காண்கிறோம். "நல்ல நாவல் என்பது உரை நடையில் அமைந்த காப்பியம்" என்ற மேல் நாட்டு ஆசிரியர் அனா லேக்டீசியா பார்போல்டு (Anna Lactitia Barbould) அவர்களின் கூற்று டாக்டர் மு.வ. அவர்களின் நாவல்களைப் பொறுத்தவரையில் முற்றிலும் பொருந்தும்.

**கதை கூறும் உத்தி**

நாவலாசிரியர் தன் பாத்திரங்களின் குணாதிசயங்களை யும் செயல்களையும் விளக்க இருபெரும் முறைகளைக் கையாள் வார். தன்மைக் கூற்றாகக் கதையைச் சொல்லுவது ஒரு முறை. இதில் கதாபாத்திரங்கள் தம் அந்தரங்க உணர்வுகளையும் விருப்பங்களையும் தெளிவாக எடுத்துச் சொல்ல முடியும். படர்க்கைக் கூற்றாகக் கதையைக் கூறுவது இரண்டாவது முறை. இதில் ஆசிரியர் படர்க்கையில் நின்று தன் பாத்திரங் களைச் செயல் செய்யவிடுத்து அச்செயல்களின் கருத்துக் களையும், அப்பாத்திரங்களின் உணர்ச்சி, தூண்டுதல், எண்ணம் முதலியவற்றையும் தாமே எடுத்துக் கூறுவார். ஒவ்வொரு நாவலாசிரியரும் இவ்விரண்டு முறைகளில் ஒன்றைப் பெரும் பான்மையாகக் கையாள்வார். டாக்டர் மு.வ. தமது நாவல் களில் தன்மைக் கூற்றாகக் கதையைக் கூறும் பாணியினையே பெரும்பான்மையாகக் கையாள்கிறார். அவருடைய முதல் நாவலாகிய "செந்தாமரை"யில் கதாபாத்திரங்களாகிய திலகம், இளங்கோ, மருதப்பன், செந்தாமரை, திருநாதன் ஆகியோரின் வாயிலாகவே கதையைச் சொல்ல வைக்கிறார். அதே போன்று, அவருடைய நாவல்களுள் சிறந்ததெனக்

கொண்டதும், அரசின் பரிசு பெற்றதுமாகிய "கள்ளோ காவியமோ" என்ற நாவலிலும் மங்கை, அருளப்பன் ஆகிய இருவருமே மாறிமாறிக் கதையைக் கூறுகிருர்கள், "அல்லி" என்னும் நாவலில் சோமுவின் நாட்குறிப்பு வாயிலாகக் கதையை இயக்கிச் செல்கிருர். நாட்குறிப்பும் ஒரு வகையில் தன்மைக் கூற்ருகவே அமைவதைக் காண்கிறேம்.

தன்மைக் கூற்ருக அமையும் நாவல்கள் அத்துணை சிறந்தவை அல்ல என்பது மேல் நாட்டு ஆசிரியர்கள் சிலரின் கருத்தாகும்.

"கதையில் வரும் செயல்கள் நிகழ்ந்த காலத்தில் கதாபாத்திரங்களுக்கு இருந்த மனநிலைக்கும், கதை முழுதும் நிகழ்ந்த பிறகு எல்லாவற்றையும் மீண்டும் நினைந்து சொல்லும் பிற்கால மன நிலைக்கும் வேறுபாடு இருக்கும். அப்போது நிகழ்ந்த உரையாடல்களை நினைவு கூர்ந்து எழுதுவதில் உண்மையை அவ்வப்போது சொல்லும் சுவை இராது. ஆதலின் இந்த முறை (தன்மைக் கூற்று முறை) ஆசிரியனே கதை சொல்வதாக உள்ள பாணியை விடச் சிறந்ததன்று" என்பது ஆஞ லேக்டீசியா பார் போல்டு அவர்களது கூற்று ஆகும். ஆனல் இக் கூற்றை மேல் நாட்டு எழுத்தாளர்களே இன்று ஏற்றுக் கொள்வதில்லை.

சுய சரிதை முறையில் நாவல்களை சுவைபட எழுதும் நாவலாசிரியர்கள் இப்பொழுது மிகுந்து விட்டார்கள். கதையைத் தன்மைக் கூற்றுகச் சொல்வதில் கதாபாத்திரங்கள் தம் அந்தரங்க உணர்வுகளையும் விருப்பங்களையும் தெளிவாக எடுத்துச் சொல்ல முடியும் என்பதை டாக்டர் மு. வ. "செந்தாமரை", "கள்ளோ காவியமோ", "அல்லி" முதலிய நாவல்களில் மெய்ப்பித்துள்ளார். கதா பாத்திரங்களிடம் குடி கொண்டுள்ள மனிதப் பண்புகளையும், அவர்கள் உள்ளத்தின் ஆழ்ந்த இயல்புகளையும், உண்மைக் காதலையும் நுட்பமான உணர்வுகளையும் சிறந்த முறையில் சித்திரிப்பதற்

குத் தன்மைக் கூற்று முறையே அவருக்குக் கைவந்த உத்தி யாகப் பயன்படுவதைக் காண்கிறோம்.

பாத்திரப் படைப்பு

நாவல்களைப் படைக்கும் பொழுது, நாவலாசிரியர் முதலில் கவனிக்க வேண்டிய கூறு பாத்திரங்களின் படைப்புக் களேயாகும். பாத்திரங்களை உயிர்த் துடிப்பு உடையனவா சச் செய்து, வெவ்வேறு நடையும் பேச்சும் எண்ணமும் பெற வைத்து, கதையின் வளர்ச்சியிலேயே அவை இணைந்து இழையுமாறு ஆக்கி, கதைப் பின்னலில் தொய்வு விழாதபடி இறுக்கமும், ஓட்டமும் நிலவச் செய்வது ஆசிரியரின் கடமை யாகும். கதைப் பின்னல், பாத்திரங்கள் இரண்டும் ஒன்று பட்டுப் பொருத்தி நடக்கும் வகையில் டாக்டர் மு. வ. வின் நாவல்கள் அமைந்துள்ளன. "தமிழ் மொழியளவில் உள்ள நாவல்களை நோக்குமிடத்துக் கதைப் பின்னலை அடிப்படை யாகக் கொண்ட நாவல்களே மலிந்துள்ளன. பாத்திரங் களைக் கொண்டு நாவல்கள் அமைக்கப்படும் இயல்பு இன்னும் தமிழ் நாட்டில் நன்கு அமையவில்லை. பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் இத் துறையில் முதல் முயற்சி செய்து, "செந்தாமரை" என்றதொரு நாவல் அமைத்தார்" என்று பேராசிரியர் அ. ச. ஞான சம்பந்தம் "இலக்கியக் கலை என் னும் தமது நூலில் கூறி இருப்பதைக் கொண்டு டாக்டர் மு.வ. நாவல்களில் பாத்திரங்களைப் படைக்கும் தன்மையை நாம் ஒருவாறு உணரலாம். டிக்கன்ஸ், தேக்கரே, ஸ்காட் போன்றவர்களுடைய நாவல்கள் தம் சிறப்பில் சிறிதும் குறையாமல், அதே சமயத்தில் முழுதும் பாத்திரங்களால் சிறப்புப் பெற்ற நாவல்களாக விளங்குவது போன்று, டாக்டர் மு. வ. வின் நாவல்களும் அவற்றின் பாத்திரங்களி ளுல் சிறப்புடையனவாகத் திகழ்கின்றன. "பாத்திரங்கள். கதையின் கட்டுக் கோப்பு என்று வேருகப் பிரித்துச் சொல்ல வேண்டியதில்லை. பாத்திரங்களின் இயக்கத்தில் கதைப் பின்னல் உருவாகிறது. கதைப் பின்னலிஞல் பாத்திரங்கள்

உருவாகின்றன. இரண்டும் ஒன்றினை ஒன்று சார்ந்தவை" என்று ராபர்ட் லிடல் (Robert Lidel) கூறுகிறார். டாக்டர் மு.வ.வும் பாத்திரங்களின் இயக்கத்திலேயே கதைப் பின்னலை உருவாக்கிச் செல்கின்றார்.

டாக்டர் மு. வ. படைத்துள்ள பாத்திரங்கள் அன்றாடம் நம்முடன் வாழும் உலகத்து மக்களேயாவர். குற்றங் குறையே இல்லாத அசாதாரண மனிதர்களை அவர் காட்டவில்லை. உயிரும் உடம்பும் கையும் காலும் அகமும் முகமும் படைத்து உலவும் சாதாரண மனிதர்களையே காட்டுகிறார். அறிவு நுட்பம் பெற்றுள்ள பாத்திரங்களைக் கூட உலகத்தாரிடம் பொதுவாகக் காணப்படும் பலவீனங்களையும் குறைபாடுகளையும் உடையவர்களாகவே அவர் படைத்துள்ளார். அதனால் அவருடைய நாவலைப் படிக்கும்போது நாம் அதில் வரும் பாத்திரங்களில் ஒருவராகி விடுகிறோம். நம் இதயத்தோடு இதயம் ஒட்டி அவர்களை உணர்கிறோம். அவர்கள் விடும் மூச்சு நமக்குக் கேட்கிறது. அவர்களுடைய கோபதாபங்களைப் பரிவுடன் நாம் அறிந்து கொள்கிறோம். "செந்தாமரை"யில் வரும் செய்தி இதழ்த் துணையாசிரியனாகிய மருதப்பன் நல்லவன்; மனச் சான்றைக் கொல்லாதவன். மனச் சான்று பண்படும் முறையில் வாழ்க்கை நடத்தியவன்; சிறந்த அறிஞன். எனினும், தனக்குத் திருமணமாகி, குழந்தை இருந்தும் திலகத்தைத் தனியாகக் கண்டதும், அவள் அழகினால் மன மயக்கமடையும் பலவீனமுடையவனாக இருக்கிறான். "கள்ளோ காவியமோ" என்னும் நாவலின் கதாநாயகன் அருளப்பன் படித்தவன்; பட்டம் பெற்றவன்; கல்லூரிப் பேராசிரியராகப் பணி புரிபவன்; வேலைக்காரியைக் காதலித்து மணந்து கொண்ட சீர்திருத்தவாதி. எனினும் ஒருகண நேரத்தில் ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில் விட்டுக் கொடுக்கும் மனப்பண்பை இழந்ததால், மனைவியைப் பிரிந்து மனம் வருந்தும் நிலைமைக்கு ஆளாகிறான்.

முரண்பட்ட பண்பு வாய்ந்த - கொள்கை கொண்ட - பல மாந்தர்களை டாக்டர் மு. வ. வின் படைப்புக்களிலே

காணலாம். அவர் படைத்துள்ள பாத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதைக் காண்கிறோம். "கரித்துண்டில்" வரும் பேராசிரியர் கமலக் கண்ணனை முதலாளித்துவக் கொள்கையின் பிரதிநிதியாகக் காட்டியுள்ளார். அதே நாவலில் வரும் குமரேசனை முதலாளித்துவத்திற்கு நேர் எதிரிடையான சமதர்மக் கொள்கையின் சின்னமாகச் சித்திரிக்கிறார். புத்தகத்தை மூடினதும் கதையின் நிகழ்ச்சிகள் மறந்து போனாலும் அதில் வரும் கதை மாந்தர்கள் நம் கண்முன் நடமாடுகிறார்கள்.

## நடையழகு

நாவலின் சிறப்புக் கூறுகளுள் ஒன்று அதில் வரும் உரையாடலாகும். "உரையாடல்தான் ஒரு நாவலில் மிகவும் மகிழ்ச்சியை யளிக்கும் பகுதியாகும். உரையாடல்தான் நாவலில் தோன்றும் பல பாத்திரங்களுடைய மனம், பண்பு, குறிக்கோள், உணர்ச்சிகள் முதலியவற்றை நமக்கு எடுத்துக் காட்டும் கண்ணாடி. "நாவலாசிரியன் நாடகத் தன்மையை எட்டிப் பிடிப்பது உரையாடலின் மூலம்தான்" என்கிறார் அறிஞர் ஹட்சன் (Hudson). சிறந்த நாவலாசிரியன் கையில் இவ்வுரையாடல் சிறந்த பயனை அளிக்கும். டாக்டர் மு. வ. தமது நாவல்களில் உரையாடலை மிகவும் நளினமாகக் கையாண்டிருப்பதைக் காண்கிறோம். கதைப் போக்கிற்கும், பாத்திரங்களுக்கும் ஏற்றவாறு உரையாடல்களை அமைத்துள்ளார். கதாபாத்திரங்களின் உணர்ச்சிகள், கருத்துக்கள் ஆசாபாசங்கள் இவைகளைக் காட்டக் கூடிய வகையில் அவர் உரையாடல்களைப் புகுத்தியுள்ளார். "கள்ளோ காவியமோ" நாவலில் அருளப்பனுக்கும் அவன் நண்பன் வேங்கடசாமிக்குமிடையே நடைபெறும் உரையாடல் ஆழ்ந்தகன்ற சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக உள்ளன. சிறந்த சீர்திருத்தக் கருத்துக்களையும், புரட்சிக் கொள்கைகளையும் அவர் தம் பாத்திரங்களின் உரையாடல் வாயிலாகப் பேச வைக்கிறார்-எனினும் அது பிரசாரமாக நமக்குத் தோன்றுவதில்லை.

காரணம், அக் கருத்துக்கள் அவற்றைப் பேசும் பாத்திரங்களின் குணச்சித்திரத்தோடு இழைந்து நிற்கின்றன; ஏதோ ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, ஒரு சொற்பொழிவு மேடையை இடையில் உண்டாக்கும் தவற்றை டாக்டர் மு.வ. செய்யவில்லை. பாத்திரங்களின் இயல்பை உணர்த்தவும் கதையின் வளர்ச்சிக்கு உதவவும் பயன்படும் வகையில் அவர் உரையாடலில் இலைமறை காய்போல் நீதிக் கருத்துக்களையும், சீர்திருத்தக் கொள்கைகளையும் புகுத்தியிருக்கிறார். "கள்ளோ காவியமோ" நாவலில் அருளப்பன் வாயிலாகக் காதலுக்கும், காமத்திற்குமுள்ள வேறுபாட்டை நுட்பமாக விளக்குகிறார் :

"காமம் தன்னலமானது; காதல் தன்னலமற்றது. காமுகன் கயவன். அறிஞனும் சில வேளை காமுகனாய்க் கெடுவதுண்டு. கீழ்மகன் ஒருவன் அழகிய மாந்தோப்பைக் கண்டால், அதில் உள்ள கனிகள் பலவற்றையும் கவர்ந்து கொள்ள எண்ணுவான், கற்றுணர்ந்த அறிஞனும் பசித் துன்பம் பொறுக்க முடியாதபோது இரண்டொரு கனிகள் மட்டும் கவர எண்ணுவான். கீழ்மகன் தோப்பின் காவலாளியைக் கொல்லவும் துணிவான்; அறிஞனோ காவலாளி உறங்கிக் கிடப்பினும் எழுப்பிக் கேட்க முயலுவான். இவ்வளவே இருவகையார்க்கும் வேறுபாடு. இருவகையார் உணர்வும் தன்னலமானதே. காமம் இதுதான். காதலோ பிறருடைய இன்ப துன்பத்தையே பொருளாகக் கருதுவது; தன்னை மறந்து பிறர் இன்பத்தில் இன்புறுவது; பிறர் துன்பத்தில் துன்புறுவது. காதல் உலகத்தில் காதலன் பாரி ஆவான்; பேகன் ஆவான். முல்லைக் கொடியைக் கண்ட பாரி அதனை வேரோடு பறித்துத் தன் வீட்டிற்கு எடுத்துச் செல்ல எண்ணவில்லை; அல்லது அதன் பூக்களைப் பறித்து முகர்ந்து இன்புறவும் எண்ணவில்லை. பேகனும் ஆடும் மயிலைக் கண்ட போது வலை போட்டுப் பிடிக்க எண்ணவில்லை. அதைத் துரத்திப் பிடித்து அதன் பீலியைக் கவர எண்ணவில்லை. அசையும் கொடிக்கு அழகிய தேரை விட்டுக் காலால் நடக்கத் துணிந்

ந்தது ஒரு மனம். ஆடும் பறவைக்குச் சிறந்த போர்வையை விட்டுக் குளிரால் நடுங்கிச் செல்லத் துணிந்தது ஒரு மனம். இந்த நல்ல மனத்திற்குத் தன் இன்ப துன்பம் நினைவே இல்லை அல்லவா? காதல் இப்படிப்பட்ட நல்ல வெறி. தான் அன்பு கொண்ட துணைவியின் மனம் நோகத் தவறு செய்யாத பெருந்தகைமை காதல் நெஞ்சிற்கு உண்டு. அவள் இன்பம் அடையும் பொருட்டு அனைத்தும் துறக்கும் பேராண்மை காதல் நெஞ்சிற்கு உண்டு. அவள் துன்பத்தில் தானும் கலந்து கரைவதே பேரின்பம் என்னும் கொள்கை காதல் நெஞ்சிற்கு உண்டு. காதலர் தாய் மனம் உடையவர். ஒருவர் மற்றவர்க்குக் குழந்தை. காதல் வாழ்வும் குழந்தை விளையாட்டே''.

இவ்வாறு மிக உயர்ந்த கருத்தை வெகு எளிதாக, நயமாக விளக்குகிறார் டாக்டர் மு, வ. தனியாகப் பார்க்கும் பொழுது இப்பகுதி நீண்டதாகத் தென்றினாலும், அதை அவர் புகுத்தியிருக்கும் சூழலில் அதைப் படிக்கும் போதும், அப்பகுதியைப் பேசும் கதாபாத்திரத்தின் மிக உயர்ந்த குணச்சித்திரம் நம்முன் காட்சியளிக்கிறது. இவ்வுரையாடல்களை நல்ல நடையில், அதைப்பேசும் பாத்திரங்களின் நிலைக்கு ஏற்ற நடையில், டாக்டர் மு. வ. அமைத்திருப்பதையும் நாம் காண்கிறோம்.

டாக்டர் மு. வ. தலைசிறந்த தமிழறிஞர். தமிழ் இலக்கியங்களையெல்லாம் ஆழ்ந்து கற்று அவற்றின் நயங்களில் தோய்ந்தவர். தமிழில் தங்குதடையின்றி அழகாக எழுதும் வன்மை நிரம்பியவர். எனவே அவருடைய தமிழ் நடையில் தமிழிலக்கியக் கருத்துகள் மின்னிமிளிர்வதைக் காண்கிறோம். கதையென்றால் நாவலென்றால் கொச்சைத்தமிழில் எழுதுவதுதான் முறை என எண்ணிக்கொண்டிருந்த காலத்தில், இனிய, எளிய இலக்கிய நடையிலும் நாவல்களை எழுதலாம்; சாதாரண மக்களும் அவற்றை விரும்பிப் படிப்பார்கள் என உலகுக்குக் காட்டியவர் டாக்டர் மு.வ. அவர்களே என்றால் அது

மிகையாகாது. இதுவே, டாக்டர் மு.வ. நாவல் உலகில் தமக்கென்று வகுத்துக் கொண்ட தனிப்பாதை ஆகும். வேறெதற்காக இல்லா விட்டாலும், இந்த ஒன்றுக்காகவாவது டாக்டர் மு. வ. தமிழ் நாவல் உலகில் தனியிடம் பெற்றுத் திகழ்வார் என்பது திண்ணம். டாக்டர் மு. வ. காட்டிய இந்த வழியைப் பின்பற்றும் ஓர் எழுத்தாளர் பரம்பரையே இன்று உண்டு.

மனித இயல்பை மிக நன்ருகத் தெளிந்த தெளிவு, பல்வேறு மனித இயல்புகளை இனிமையாகச் சித்திரிக்கும் பண்பு, சாதுரியமும் நகைச்சுவையும் இணைந்த இணைப்பு, பொறுக்கு மணிகளாகிய சிறந்த சொற்கள் அடங்கிய அழகியநடையால் அவற்றை வெளியிடும் தன்மை ஆகியவற்றினுல் தமிழ் நாவலுக்கு இலக்கிய வடிவம் தந்த பெருமை டாக்டர் மு. வ. அவர்களையே சாரும். சுருங்கக் கூறின், தமிழ்மக்கள் நாவலின் இலக்கிய மதிப்பை உணர்ந்து அதைப் பாராட்டத் தொடங்கியதற்குக் காரணமாக அமைந்தவை டாக்டர் மு. வ. அவர்களின் நாவல்களே என்பதில் ஐயமில்லே.

# 2. குறவஞ்சிப் புலவர்

## குறவஞ்சி இலக்கியம்

தன்னேரில்லாத் தமிழ் மொழியில் தோன்றிய சீரிய சிற்றிலக்கியங்களைச் செந்தமிழ் மக்கள் தொன்று தொட்டு தொண்ணூற்றாறு வகையாகப் பிரித்துப் பேணிக் காத்து வருகின்றனர். அவை இனிய தமிழில் இயன்ற "இரட்டை மணி மாலை", முத்தமிழ்பாடும் "மும்மணிக்கோவை", நாவவர் போற்றும் "நான்மணிமாலை", கன்னித் தமிழின் கனிச்சுவை காட்டும் "கலம்பகம்", அன்னைத் தமிழின் அருமையை உணர்த்தும் "அந்தாதி", பைந்தமிழின் பாங்கினைப் பார் அறியச் செய்யும் "பள்ளு", புகழ் குன்றாத்தமிழின் வளம் கொழிக்கும் "குறம்" முதலியனவாம். இவற்றுள், பள்ளு, குறம் ஆகியன முறையே நாட்டின் நிலபுலன்களைத் தம் உழைப்பால் உயரச் செய்யும் பள்ளர், நாடெங்கணும் திரிந்து ஆடிப்பாடி, அல்லலை மறந்து, இன்பமுடன் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தும் குறவர் ஆகியோரது வாழ்க்கை ஓவியங்களைத் தீந்தமிழில் தீட்டித் தருவனவாகும். எனவே இவை நாம் அனைவரும் விரும்பும் நாடக இலக்கியங்களாக இலங்குவதில் வியப்பொன்றுமில்லை. அத்துடன் அவை நாட்டு மக்கள் நடித்து மகிழ்வதற்கு ஏற்ற பெற்றியினையும் பெற்று விளங்குகின்றன.

மேற்கூறியவற்றுள் குறம் எனப்படுவதே குறவஞ்சி இலக்கியமாகும். குறவஞ்சி என்ற சொல்லுக்குப் பொருள் குறத்தி அல்லது குறப்பெண் என்பது ஆகும். மலைவாழ் மக்களில் ஒரு சிலர் மலைவாணர் அல்லது குறவர் ஆவர். அக்குடியில் தோன்றியவள் குறவஞ்சி ஆவாள், மேலும் வஞ்சி என்பது வஞ்சிக் கொடியை ஒத்த அழகிய பெண் என்று பொருள்படும். குறவஞ்சியினது சிறப்பியல் புகளை அழகுற விரித்துரைப்பது குறவஞ்சி நூலாகும்.

அஃதாவது குறவஞ்சியினது இயல்பு, எழில், பண்பு நலன்கள், அவள் வாழும் மலையின் மாண்பு, அம்மலையைச்சார்ந்த நாட்டின் நலம், நாட்டில் இருக்கும் நகரின் சிறப்பு, குறவஞ்சி பிறந்த குறக்குடியின் இயல்பு, குறவர்தம் தொழில்கள், குறத்தியின் தலையாய பணியாகிய குறிசொல்லுதல் முதலியன குறவஞ்சி நூலில் பேசப்படும் பொருள்கள் ஆகும்.

பொதுவாக, குறவஞ்சி இலக்கியத்தில் ஒரு தலைவனோ' அன்றிக் கடவுளரோ, உலா வருவதாகப் பாடுவது மரபாகும். அதுகால், பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் ஆகிய எழுவகைப் பருவ மகளிர், உலாவரும் தலைவனைக் கண்டு, கருத்தை இழந்து, நாணைத் துறந்து, அவனிடத்துத் தம் நெஞ்சத்தை இழந்து நிற்பார்கள். அத்துடன் எழிலும், ஏற்றமும், தோற்றப் பொலிவும் மிக்க இளமங்கை ஒருத்தி தலைவனது அழகிலே, ஆண்மை, அன்பு, அருள் ஆகிய பண்பு நலன்களிலே தன் உள்ளத்தை முற்றிலும் ஈடுபடுத்தி, செயல் இழந்து, செதுக்கிய கற்சிலை போல் நிற்பாள்.

அனைவர்க்கும் கிட்டாதவனாய்த் தலைவன் உலாப்போந்து தன் இருக்கையை அடைவான். தன் எண்ணம் நிறைவேறாத கன்னியோ, காதல் நோயால் அலைகடல் துரும்பென அலைக்கழிக்கப் பட்டு, ஆவி சோர்ந்து, அல்லற்பட்டு, அவனையே எண்ணி, எண்ணி, இளைத்து, என்ன செய்வது என்றறியாது ஏங்கித் தவிப்பாள். அந்நிலையில், கோல் கொண்டு குறி சொல்லும் குறத்தி வந்து மயங்கி நிற்கும் மட நல்லாளின், காந்தள் மலரொத்த கையினைப் பார்த்து, "நீ காதலித்தவனே நின் கணவனாக வருவான்" என்று கூற, கன்னியும் களிபேருவகை அடைவாள். பொன்னும் மணியும், ஆடையும் அணிகலனும் குறி சொல்லிய குறத்திக்கு அவள் கொடுத்து மகிழ்வாள். இப்பகுதியே குறவஞ்சி இலக்கியத்

தின் முடியாகத் திகழ்வது ஆகும். எனவே, இச்சிறப்புக் கருதியே, 'குறவஞ்சி' என இந்நூல் அழைக்கப்பட்டது போலும். நூலின் இறுதியில் பாட்டுடைத் தலைவனின் சிறப்புக் கூறப்பட்டிருக்கும்.

குறவஞ்சி நூல்களிலே குறிப்பிடத்தக்கன, "மீனாட்சியம்மை குறம்", "கொடுமளூர்க் குறவஞ்சி", "சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம்", "கும்பேசர் குறவஞ்சி நாடகம்", "அர்த்த நாரீசுவரக் குறவஞ்சி", "திருவாரூர்க் குறவஞ்சி", "திருக் குற்றாலக் குறவஞ்சி", "விராலிமலைக் குறவஞ்சி", "இராச மோகனக் குறவஞ்சி", "வாதசயக் குறவஞ்சி", "சிற்றம்பலக் குறவஞ்சி", "கண்ணப்பர் குறவஞ்சி", "கபாலீசுவரர் குறவஞ்சி", "இரகுநாதராய குறவஞ்சி", "செந்தில் குறவஞ்சி", "ஆதி முதலீசர் குறவஞ்சி", "தத்துவக் குறவஞ்சி", "ஞான ரத்தினக் குறவஞ்சி", "அழகர் குறவஞ்சி", "பெத்லகாம் குறவஞ்சி", "நகுலமலைக் குறவஞ்சி", "மண்ணிப் பாடிக்கரை திருநீலகண்டர் குறவஞ்சி", "வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி" முதலியனவாகும். ஆசிரியப்பா, வெண்பா, கலித் துறை, ஆசிரிய விருத்தம், கலி விருத்தம் முதலிய இயற்றமிழ்ச் செய்யுட்களுடன் சிந்து, புகழ்ப்பா, கண்ணிகள் போன்ற இசைப்பாடல்களும் விரவிவருமாறு குறவஞ்சி நூல்கள் பாடப் பெறும். "சோழக் குறவஞ்சி", "விதுரன் குறம்" போன்ற பழமையான குறவஞ்சி நூல்கள் இன்று நமக்குக் கிடைக்கவில்லை.

### குறவஞ்சிப் புலவர்

பிற்காலத்தில் எழுந்த குறவஞ்சி நூல்களில் காலத்தால் முற்பட்டது திக்கும் தீந்தமிழால் ஆன "திருக்குற்றாலக் குறவஞ்சி" ஆகும். அத்துடன் அது, தனக்குப் பின்னர் தோன்றிய குறவஞ்சிகளுக்கு வழிகாட்டியாகவும் விளங்குகின்றது. இத்தகைய சிறப்பு மிக்க குற்றாலக் குறவஞ்சியின் நூலாசிரியர் திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி

மாவட்டத்தில், தென்றல் இசைபாடும் தென்காசிக்கருகிலிருக்கும், குன்று அழகுடைய குற்றால நீர்வீழ்ச்சிக்கு அருகமைந்த, கோடையிலும் மென்காற்று வீசும் மேலகரம் ஊரில் பிறந்த, தேனினுமினிய தென் மொழிப் பாவலர் திரிகூடராசப்பக் கவிராயர் ஆவார். இவர் விருந்தோம்பி வேளாண்மை செய்யும் பெருங்குடிப் பெருமகன் ஆவார். இவர் இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார். மதுரத்தமிழ் வாழும் மதுரை மாமன்னர் முத்து விசயரங்கர் சொக்கநாத நாயக்கர் நம்புலவருக்கு "திருக்குற்றால நாதர் கோயில் புலவர்" என்ற பட்டத்தை அளித்துப் பாராட்டியதோடு, குறவஞ்சியின் சிறப்புக் கருதி, குறவஞ்சிப் புலவருக்கு, குறவஞ்சி மேடு என்னும் பெயருடைய எஞ்சா வளமுடைய நஞ்சை நிலத்தை முற்றூட்டாக அளித்து அவரது சீரிய புலமைக்குச் சிறப்புச் செய்தார். இவர் மரபில் வந்தவர் குடும்பம் இன்றும் 'கவிராயர் குடும்பம்' என்றே வழங்கப்படுகின்றது. சென்னை மாநிலக் கல்லூரியில் கணிதவியல் இணைப் பேராசிரியராக விளங்கும் திரு. சிவசுப்பிரமணியம், தமிழ் ஆசிரியரும், முதுநிலைப் பள்ளித் தணிக்கை அலுவலருமான திரு. திரிகூடராசப்ப பிள்ளை, காவல் துறையில் சென்னை நகர் துணை ஆணையராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு வை. பாலசுப்பிரமணியம் ஆகியோர் குறவஞ்சி ஆசிரியர் வழியில் வந்தோர் ஆவர்.

தேனருவித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும் உயர்ந்த மலையாகிய குற்றாலத் திரிகூடமலையில் குறும்பலா மரத்தினடியில் வீற்றிருக்கும் இறைவனிடத்து இடையறாத பேரன்பு செலுத்திய குறவஞ்சிப் புலவர், இறைவனது புகழைப் போற்றி, "திருக்குற்றாலத் தலபுராணம்," "திருக்குற்றால மாலை", "திருக்குற்றாலச் சிலேடை வெண்பா", "திருக்குற்றால யமக அந்தாதி", "திருக்குற்றால உலா", "திருக்குற்றால ஊடல்", "திருக்குற்றாலப் பரம்பொருள் மாலை", "திருக்குற்றாலக் கோவை", "திருக்குற்றாலக் குழல் வாய்

மொழி மாலை", "திருக்குற்றாலக் கோமளமாலை", "திருக் குற்றால வெண்பா அந்தாதி", "திருக்குற்றாலப் பிள்ளைத் தமிழ்", "திருக்குற்றால நன்னகர் வெண்பா", "திருக்குற்றாலக் குறவஞ்சி" ஆகிய பதினான்கு மணியாரங்களைச் செய்து அவ் விறைவர்க்குச் சூட்டி மகிழ்ந்தார். இவற்றுள்ளே, "வம்பார் குன்றந்நீடுயர் சாரல் வளர் வேங்கைக் கொம்பார் சோலைக் கோல வண்டியாழ் செய் குற்றால" நாதராகிய திரிசடை திகழ் திரிகூட நாதரைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்ற திருக்குற்றாலக் குறவஞ்சி, சொல்லழகும், பொருளழகும், கருத்தாழமும், ஒலி நயமும், உவமைச் சிறப்பும், இனிய எளிய நடையும், அத்துடன் இசை நயமுங்கொண்டு இலங்கு வதோடு குறிஞ்சிநிலக் குன்றாஅழகைக் குறையாது கூறும் குறவஞ்சி நூலாகும். எனவே இப்புலவரை "குறவஞ்சிப் புலவர்" என்று கூறுவது முற்றிலும் பொருத்தமாகும். இனி அந்நூலின் துணைகொண்டு குறவஞ்சிப் புலவர்தம் பாத் திறனை நாம் காண்போம்.

## கனியெலாம் சிவலிங்கம்

நூலின் முதலில் காணும் பகுதி தற்சிறப்புப் பாயிரம் ஆகும். அப்பகுதியில் பாட்டுடைத் தலைவராகிய திரிகூட நாதரை ஆசிரியர் நமக்கெல்லாம் அறிமுகப்படுத்தும் முறை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. திரிகூடநாதர் "குறும்பலா ஈசர்" என நாம் முன்பு கண்டோம். அவரது வடிவம் 'சிவலிங்க' வடிவமாகும். அவர் உறையும் இடம் பலா மரத் தடி. குற்றால இடத்தின் மரம் (தலவிருட்சம்) பலாவாகும். பருவத்தில் பலா மரங்கள், பச்சை நிறக் காய்களோடு, பசு மஞ்சள் நிறக்கனிகளோடு காட்சி தருவது நமது கண்களுக்குப் பெருவிருந்தாகும். மேலும் பலா மரங்களின் கிளைகளில் காணும் வளாரெல்லாம் காய்களும் கனிகளும் காணப் பெறுவது நமக்கு பெருவியப்பையே தரும். எனவே குறவஞ்சி ஆசிரியரது கண்ணையும் கருத்தையும் இக்காட்சி ஈர்க்காமல் இருக்குமா? அவரும் இக்காட்சியைக் கண்டார்.

ஆனால் அவர் கண்ட காட்சியிலே பலாக் கனிகள் சிவலிங்கங்களாகத் தோற்றமளிக்கின்றன. அத்துடன் பலாக்கனிகளின் உள்ளே இருக்கும் சுளைகளும், சுளைகளுக்கு உள்ளே இருக்கும் கொட்டைகளும் அவருக்கு நினைவில் வராமல் போகவில்லை. அவைகளும் சிவலிங்கங்களாகவே தோன்றுகின்றன: இதோ! அவர் கண்ட காட்சி:

"கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாஞ்
சதுர்வேதம் கிளைகள் ஈன்ற
சுளையெலாம் சிவலிங்கம் கனியெலாம்
சிவலிங்கம் கனிகள் ஈன்ற
சுளையெலாம் சிவலிங்கம் வித்தெலாம்
சிவலிங்க சொரூபம் ஆக
விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை ..............."

களமும் காட்சியும் :

குறவஞ்சி நூல் சிறந்த நாடக இலக்கியமாகவும் விளங்குகின்றது என்று முன்னர் கூறப்பட்டது, அஃதாவது அந்நூல் இலக்கிய அமைப்போடு நாடக அமைப்பும் கொண்டு விளங்குகின்றது.

எந்த நாடகமும் கடவுள் வாழ்த்தோடுதான் தொடங்கப் பெறும் என்பதை நாம் அறிவோம். அதற்கேற்ப இந்நூலில் கடவுள் வாழ்த்து அமைந்திருப்பதை நாம் கண்டோம்.

நாடகம் பல களங்களைக் கொண்டிருக்கும் என்பதை நாம் அறிவோம். ஒவ்வொருகளமும் பல காட்சிகளைக் கொண்டிருக்கும். காட்சிகள் தடையேதுமின்றி, விறுவிறுப்பாக நடைபெறுதல் நல்ல நாடகத்தின் நலன்களில் ஒன்றாகும். அதற்கேற்ப நாடகமாந்தர் சுறுசுறுப்பாக இயங்கின் நாடகம் சுவையுள்ளதாக விளங்கும். இப்பண்பு நலன்களை எல்லாம் இக்குறவஞ்சி நாடகத்திலே நாம் காணலாம். இந்நூலினை

நாம் படித்துப் பார்ப்பின், அது பின்வரும் பகுதிகளைக் கொண்டிருப்பதை அறிய முடியும்.

1. தலைவராகிய குற்றாலநாதர் உலாவருதல்;

2. தலைவனைக் கண்டு தன் மனதைப் பறிகொடுத்த தலைவி வசந்தவல்லி காதல் நெருப்பால் கலங்கித் தவித்துத் தன் நிலையினைத் தோழியிடம் எடுத்துக்கூறி அவளை உதவ வேண்டல்;

3. தலைவி குறத்தியினிடம் குறிகேட்டல்;

4. குறத்தியின் தலைவன் சிங்கன் தன் தோழனோடு வேட்டைக்கு வருதலும், குறத்தி சிங்கியைக் காணாமல் வருந்தி, அதனைத் தோழனுக்குக் கழறலும்;

5. சிங்கன் சிங்கியைக்கண்டு இன்புறுதல்.

மேலே காணப்படுகின்ற ஒவ்வொரு பகுதியும் ஒரு களமாக விளங்குகின்றதுஎன்பதை நாடகப்புலவர் நன்குணர்வர்.

ஒவ்வொரு பகுதியும், அதாவது களமும் பல காட்சிகளைக் கொண்டு இயங்குகின்றது. அவை வருமாறு:

பகுதி 1:

1. கட்டியங்காரன் வரவு; 2. அவன் தலைவர் உலா வருதலை அறிவித்தல்; 3. தலைவன் உலா வருதல்; 4. உலாக் காண வந்த பெண்டிர் தம்முள் பேசிக் கொள்ளல்; 5. தலைவி வசந்தவல்லி வந்து தலைவனைக் காணல்.

பகுதி 2:

1. தலைவனது சிறப்பைத் தோழியர் கூற, அதனைக் கேட்டு தலைவி மயங்கல்; 2. தலைவி காதல் நோயால் கலங்குதல்; 3. தலைவி காமன், நிலவு, தென்றல் முதலியவற்றைப் பழித்துக் கூறல்; 4. தலைவி தோழிக்குச் சொல்லுதல்; 5. தலைவி கூடலிழைத்தல்.

பகுதி 3 :

1. குறத்தி வருதல்; 2. குறத்தி மலைவளம், நாட்டு வளம் முதலியன கூறல்; 3. குறத்தி திரிகூட நாதர் சிறப்புக் கூறி, குறியின் திறமும் கூறல். 4. குறத்தி குறி சொல்லல்; 5. தலைவி குறத்திக்குப் பரிசளித்தல்.

பகுதி 4 :

1. சிங்கன் குளுவனோடு வேட்டைக்கு வருதல்; 2. சிங்கியைப் பிரிந்துச் சிங்கன் வருந்துதல்; 3. அதனைத் தன் நண்பனிடம் கழறல்; 4. சிங்கியைத் தேடிக் காணாமல் வருந்துதல்; 5. மீண்டும் தன் நண்பனுக்குக் கழறல்.

பகுதி 5 :

1. சிங்கன் சிங்கியைக் காணுதல்;
2. சிங்கன் சிங்கியை மகிழ்வித்தல்;
3. சிங்கனும் சிங்கியும் எதிர்த்துரையாடல்.

நாடக உறுப்பினர்கள்

சுருங்கிய காலஎல்லையில் நாடக ஆசிரியன் கதைப் போக்கு முழுவதையும் நாம் காணுமாறு செய்ய வேண்டியுள்ளது என்பதை நாம் நன்கு அறிவோம். எனவே நாடக ஆசிரியன் இன்றியமையாத பகுதிகளை மட்டும் நாடகத்தில் இடம் பெற வைக்கிறான். எத்துணை சிறந்த நாடகமாயினும் அது நாடகத்தின் எழுத்துகளுக்கும் அப்பாற்பட்ட, நடிகர், உறுப்பு, காட்சி அல்லது களம் என்பவற்றின் கூட்டுறவாலே தான் முழுமை பெற முடியும். உறுப்பு, காட்சி, ஆகியன குறவஞ்சியில் இயற்கையாக அமைந்திருப்பதை நாம் முன்னர் கண்டோம். அடுத்து நாடக மாந்தர்களை ஆசிரியர் எவ்வாறு படைத்துள்ளார் என்பதை நாம் காணுவோம்.

நாடகத்திற்குத் தலைவனும், துணைத் தலைவனும், தலைவியும், தோழனும், தோழியும், பிற உறுப்பினர்களும் வேண்

டும். பண்டு நாடகங்கள் அனைத்தும் அரசர்களையே தலைவர்களாகக் கொண்டிருந்தன. அதற்குக் காரணம் நாடகத்திற்குத் தலைவனாக இருப்பவன் தன்னேரில்லாத் தலைவனாக இருத்தல் வேண்டும் என்று நாடக ஆசிரியர்கள் கருதினமையே ஆகும். அதன் பின்னர் இயல்பான மாந்தனைத் தலைவனாகக் கொண்டு நாடகங்கள் தோன்றின. எடுத்துக்காட்டாக, ''நந்தனார் சரித்திரக் கீர்த்தனை''யைக் கூறலாம். அந் நாடகத்தில்கூட நந்தனாரைவிட வேதியர் பெருமைப்படுத்தப் படுகின்றார். அதற்குரிய காரணம் நாடகத் தலைவர் உயர்ந்த குலத்தவராக இருத்தல் வேண்டும் என்று எண்ணியதே ஆகும். அடுத்து, பள்ளு, குறவஞ்சி நாடகங்கள் எழுந்தன. அவற்றில் தாழ்ந்த குல மக்கள் பேசப்பட்டனர். தற்காலத்தில் இவை ஒன்றினும் சேராத சமுதாய நாடகமொன்றே சிறப்படைந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

### தன்னேரில்லாத் தலைவன்

தொடக்கத்தில் இறைவனைத் தலைவனாகக் கொண்டுதான் குறவஞ்சி இலக்கியம் பாடப்பட்டது. பின்னர் அரசர், வீரர், செல்வந்தர் முதலியோர் குறவஞ்சியின் தலைவராக வைத்துப் பாடப்பட்டனர். குற்றாலக் குறவஞ்சியின் தலைவர் திருக்குற்றாலத் துறையும் திரிகூடநாதரே ஆவார். அவர் எத்தகையவர்? அவர் நான்முகன் ஆவார். அதற்குக் காரணம், அவர் முப்புரி நூலை அணிந்துள்ளமையே ஆகும். ஆனால் பாம்பணியும், குண்டலமும் இவர் அணிந்துள்ளாரே? இவையிரண்டும் நான்முகனுக்குக் கிடையாதே! இல்லை, இல்லை. இவர் அருளுடைய திருமாலே ஆவார். ஆனால் இவரிடம் காணுகின்ற நெற்றிக் கண்ணும் திரிசடையும் திருமாலுக்குக் கிடையாதே! அதோ! வலப்பக்கத்தில் நான்முகனும் இடப் பக்கத்தில் திருமாலும் வருகின்றனரே! எனவே 'திரிகூட நாதர்' வருகின்றார். இவ்வாறு, திரிகூடநாதர் உலாவைக் கண்ட இளமங்கையர்கள் பேசுவது போல், ஆசிரியர் புதியவர் ஒருவரைக் கண்டவர் அவரைப் பற்றி பற்பலவாறும்

வண்ணாறுவதைப் போல், இயற்கையாக இறைவனை, தலைவனை நமக்கு அறிமுகப்படுத்துதல் மிகவும் சுவை பயப்பதாக உள்ளது. அது வருமாறு :

"புரிநூலின் மார்பனிவன் அயனென்பார் அயனாகில்
பொங்கரவ மேதுதனிச் சங்கமேதென்பார்
விரிகருணை மாலென்பார் மாலாகில் விழியின் மேல்
விழியுண்டோ முடியின்மேல் முடியுண்டோ என்பார்
இருபாலும் நான்முகனுந் திருமாலும் வருகையால்
ஈசனிவன் திரிகூட ராசனே யென்பார்."

அந்நுடன் ஆசிரியர் நிற்கவில்லை. மானினம் வருவதைப் போன்றும், மயில் இனம் திரிவதைப் போன்றும், வானில் மீனினம் மிளிர்வதைப் போன்றும், மின்னற் கூட்டம் ஒளிர் வதைப் போன்றும், தேன் இனமாகிய வண்டுக் கூட்டம் ஒலித்து ஆரவாரம் செய்தலைப் போன்றும் கால்களில் அணிந்த சிலம்புகள் ஒலிக்கும்படி, எங்கும் தலையில் மலர்சூடிய மங்கை நல்லார் உலா வருகின்ற தலைவனது அழகைப் பருகுவதற் காக விரைந்து கூடினார்கள். தலைவன் அவர்களுக்கு மயக்கத் தைத் தரும் அழகுடையவனாக விளங்கியமையால் அவர்கள் வியர்த்து, உடல் தளர்ந்து, உயிர் விம்மி, கருத் தழிந்து நின் றார்கள். ஒரு சிலர், ஒரு கையில் வளையணிந்து, மற்றொரு கையில் வளையணிய மறந்து உலாக்காண ஓடி வந்தனர். இதனைக் கண்டு ஒரு சிலர் நகைக்க, அவர்கள் நாணி நின்ற னர். ஒரு சிலர், மயக்கத்தின் காரணமாக மார்பில் அணி கின்ற கச்சினை ஆடையென இடுப்பில் அணிந்து, பின்னர் மயக்கம் தெளிந்து அதனைத் தங்கள் மார்பிற்கு அணிவார்கள். மற்றுஞ்சிலர், ஒரு கண்ணுக்கு மைதீட்ட, மையை எடுத் துள்ள கையுமாக, ஒரு கண்ணுக்கு எழுதிய மை கொண்ட கண்ணுமாக விரைந்தோடி வந்தனர். பலர், "நம் உள்ளத் தையெல்லாம் கொள்ளை கொண்ட இவன் நெடுநேரம் நிற்க மாட்டானோ? ஒரு சொல் கூற மாட்டானோ?" என்று ஏங்கித் தவித்தனர். இக்காட்சிகளை யெல்லாம்,

"ஒரு கைவளை பூண்ட பெண்கள் ஒருகைவளை பூணமறந்
தோடுவார் நகைப்பவரை நாடுவார் கவிழ்வார்
இருதனத்து ரவிக்கைதனை அரையிலுடை தொடுவார்பின்
இந்தவுடை ரவிக்கை யெனச் சந்த...கிடுவார்
கருதுமனம் புறம் போக ஒரு கண்ணுக்கு மையெடுத்த
கையுமாய் ஒரு கண்ணிட்ட மையுமாய் வருவார்
நிருபனிவன் நன்னகரத் தெருவிலே நெடுநேரம்
நில்லானோ மதனை இன்னம் வெல்லானோ என்பார்"

என்று ஆசிரியர் மாட்சியுற அமைத்துள்ளார். மேலும் அவர் தொடர்ந்து அப்பெண்களாக விளங்கி வருந்திக் கூறு வதைக் கேட்போம்.

"வளையணிந்த நம் கைகள் இவனது அழகிய தோள்களில் பதியும்படி நாம் அவனைத் தழுவாமல் இருப்பதால் என்ன பயன்? மேகத்தைப் பழிக்கும் நம் கூந்தல் அவிழ்ந்து தொங்கவும், நம் கைகளில் அணிந்த வளைகளைக் கவர்ந்து கொண்டான். இச்செயல் மாயமாகவன்றோ உள்ளது? சடை வளர்த்த முறை இது தானோ?" இதனை ஆசிரியர்,

"இவ்வளைக்கை தோளழுந்த இவன் மார்பில்
அழுந்தாமல்
என்ன......நமக்கெழுந்த வன்ன......யென்பார்
மைவளையும் குழல் சோரக் கைவளை கொண்டான்
இதென்ன
மாயமோ சடை தரித்த ஞாயமோ என்பார்"

என்று இதனைப் படிப்பவர் இன்புறும் வண்ணம் எடுத்தியம்பி உள்ளார்.

**வன்ன மோகினி வசந்தவல்லி**

தன்னேரில்லாத தலைவனுக்கேற்ற தகுதி மிக்க தலைவி வேண்டுமல்லவா? குற்றாலக் குறவஞ்சி நூலில் காட்டப்

பெறும் தலைவி, வன்ன மோகினியை ஒத்த வசந்தவல்லி ஆவாள். வசந்த மோகினியாகவும் விளங்கிய அவள் கண்டவர் உயிரை வருத்தும் பேரழகுடன் கூடிய மோகினிப் பெண்ணாகை, தெய்வப் பெண்ணாகத் தோற்றம் அளித்தாள். அவள் பொன் அணித்திலகம் தீட்டி, மணமிகு மலர்மாலை சூட்டி, மாறனைக் கண்ணாலே மருட்டி, அத்துடன் கையாரச் சூடகம் (வளையல்) இட்டு, தன் போன்ற மின்னாரை வெல்லும்படியாகக் கண்ணில் ஒரு நாடகமிட்டு, பெண்களே அவளைப் பார்த்து மயங்கும்படியான பேரெழில் மங்கையாகக் காட்டி தந்தாள். அத்துடன் அவள் தெய்வ அரம்பை போல விளங்கியெதோடு வீதியிலே ஒய்யாரமாக நடந்து ஓவியம் போலவே வந்தாள்; பேடை அன்னம் தோற்கும்படியாக அவள் நடை பயின்று வந்தாள். இதோ அவ் ஓவியம்:

கருமுகில் சுற்றிச் சுருண்டு சுழியெறிவது போன்ற கொண்டை; குழை ஏறியாடி நெஞ்சைச் சூறையாடும் விழிக் கெண்டை; அழகுள்ள முள் முருக்கின் அரும்பை யொத்த இதழ்; சிலையைப் போல் (வில்லைப் போல்) வளைந்து மூன்றாம் பிறையைப் போல் இலங்கும் நுதல்; அரம்பை நாட்டு வானவரும் விரும்பி கன்னல்மொழி பேசும்படி அமைந்த கண்ணின் புருவம்; பிறர் அறிவை மயக்கும் மங்கைப் பருவம்; கடல் கொழித்த முத்து நிரை பதித்த பல்; அப்பல்லின் அழகை எட்டி எட்டிப் பார்க்கும் எழில்மிகு முத்தை உடைய மூக்கு; முழுநிலவு பழகும் வடிவு தங்கி அழகு குடிகொள்ளும் முகம்; கமுகை வென்ற கழுத்து; கல்லுப்பதித்த பொற்கடகம் இட்ட செங்கை; கச்சணிந்த மார்பு; அடுக்கு வண்ணச்சேலை உடை; அன்ன நடை. சுருங்கக் கூறின், இறைவனது அன்பில் திளைத்திருக்கும் முனிவரது மனமாகிய கல்லையும் கரைந்துருகும்படிச் செய்கின்ற உருவத்தைக் கொண்டு விளங்கினாள். அத்துடன் அவள் அழகெலாம் ஒருருக் கொண்டு வந்தது போல் அருள் வழங்கும் தெய்வத் தலைவருக்கு ஏற்ற அழகுத் தெய்வமாக விளங்கினாள்.

மேலும் அவள் வெடித்த கடலமுதை எடுத்து வடிவு செய்த மேனியை உடையவள். வீமனால் செய்யப்படும் உணவு போல் சுவை மிக்க இன்பப் பாலுக்கு இனிமை ஊட்டும் சீனியைப் போன்றவள்; மணம் பொருந்திய வல்லிக் கொடியை ஒத்தவள். அத்துடன் திரி கூடராசர் உள்ளத்தினையும் உருக்கும் உருவமும் ஒளியும் உடையவள். இதனை நூலாசிரியர்,

"வெடித்த கடலமுதை எடுத்து வடிவு செய்த
மேனியாள் ஒரு
வீமப் பாகம் பெற்ற காமப் பாலுக்கொத்த
சீனியாள்
பிடித்த சுகந்தவல்லிக் கொடிப்போல் வசந்தவல்லி
பெருக்கமே சத்தி
பீட வாசர்திரி கூட ராசர்சித்தம்
உருக்குமே"

என்று இன்னோசை பொருந்த இனிமையுறப் பாடியுள்ளார்.

அடுத்து அழகு மங்கையாகிய வசந்த வல்லி அழகிய பந்தைக் கையிற் கொண்டு பந்தாடி நின்றாள். தாவுகின்ற விளையாட்டினாலோ அன்றி மார்பின் பளுவினாலோ, சங்கு வளையல்களை அணிந்துள்ள தனது கைகள் மிகுதியாகச் சிவந்து விளங்கும்படி, நாலடி முன்னே ஓங்கிப் பத்தடி பின்னே வாங்கிப் பந்தடித்து விளையாடினாள். அக்காட்சியினைத் தன் கற்பனையிலே கண்ட கவிராயர் அதனை நமக்கு சிறந்த தொடு படமாக்கிக் காட்டியுள்ளார். அப்படக் காட்சியினை நாமும் காணலாம்.

"செங்கையில் வண்டு கலின்கலின் என்று செயஞ்செயம்
என்றாட இடை
சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு தண்டை
கலந்தாட இரு

கொங்கை கொடும்பகை வென்றனம் என்று குழைந்து
குழைந்தாட மலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றாளே!"

"சூடக முன்கையில் வால்வளை கண்டிரு தோள்வளை
நின்றாடப் புனை
பாடக முஞ்சிறு பாதமும் அங்கொரு பாவனை
கொண்டாட நய
நாடகம் ஆடிய தோகை மயிலென நன்னகர்
வீதியிலே அணி
ஆடக வல்லி வசந்த ஒய்யாரி
அடர்ந்துபந் தாடினளே!"

"இந்திரை யோஇவள் சுந்தரி யோதெய்வ ரம்பையோ
மோகினியோ மன
முந்திய தோவிழி முந்திய தோகர முந்திய
தோவெவேன உயர்
சந்திர சூடர் குறும் பல ஈசுரர் சங்கணி
வீதியிலே மணிப்
பைந்தொடி நாரி வசந்தஒய் யாரி பொற்
பந்துகொண் டாடினளே!"

மேற்கூறிய பாடல்களை உரத்து படிப்போம். தாளத்தோடு படிப்போம்; முடிந்தால், சிறிது இசையோடு படிப்போம். இசை அறிவு இருப்பின் 'பைரவிப்' பண்ணில் சாப்புத் தாளத்தோடு படிப்போம். அவ்வாறு படிப்பின், ஆசிரியர் தம் பாடல் இனிமையினையும் இசை அறிவையும் நம்மால் நன்கு உணர இயலும். அத்துடன் பாவை ஒருத்தி பந்தடிக்கும் படக்காட்சியினைப் பார்க்கும் உணர்வினையும் நாம் பெறுவோம். ஏன்? பந்தடிக்கும் ஒலியினையும், சிலம்பு, தண்டை, வளை ஆகியவை எழுப்புகின்ற ஒலியினையும் நாம் கேட்டு மகிழ்வோம். இத்தகைய ஆட்டத்தின் சிறப்பினை ஆசிரியர்,

பூங்குழல் சரிய, தோழியர் தன்னைச் சுற்றி நிற்க, முன்னும் பின்னும் எங்கும் சுழன்று, மூன்றடி நாலடி நடந்து, விரைந்து, தோழியர் கூட்டத்தில் திரும்பி, இடசாரி, வல சாரி சுற்றி, மந்தர மலை போன்ற மார்பகம் ஏசலாடவும், மகரக் குழைகள் ஊசலாடவும், சுந்தர விழிகள் பூசலிடவும், தொங்கத் தொங்கத் தொங்கத் தொம் என்னும் ஒலி எழும்படி வசந்த வல்லி பந்தடிக்கும் காட்சியினைப் பார்க்க 'அயன் ஆயிரங்கண் படைத்திலானே' என்று இரங்கிக் கூறியுள்ளார்.

குறவஞ்சி நூலில், உலாவருகின்ற தலைவனைக் கண்ட தலைவி, தன் உள்ளத்தைத் தலைவனது அழகிலே பறி கொடுத்து, காதல் நோயால் கலங்கித் தவித்து அலைகடல் துரும்பென அல்லற்படுவதாகப் பாடுதல் மரபாகும். ஆனால் அவ்வுலாக் காட்சி மேடையில் காட்டப் படுவதில்லை என்பது இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

உலாக் காட்சியைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்த தலைவி, சங்க வீதி தன்னில், குதிகால்களாகிய இரண்டு பந்துகளும் குதி கொண்டாட குதித்துக் குதித்து அசைந்தாடி, தன் ஒரு கையில் ஒரு பந்தைக் கொண்டு ஆடி விளையாடிய வசந்த வல்லி, மாயை என்னும் ஒரு சிமிழின் உள்ளே ஒன்றிற் கொன்று தொடர்புடையனவாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் ஆகிய ஐந்து பந்துகளையும் மறைத்தும் வெளிப்படுத்தியும் வித்தை ஆடும் சித்தராகிய குற்றால நாதரை எதிர் கொண்டாள். இதனை ஆசிரியர்,

> "வருசங்க வீதி தன்னில் வசந்தபூங் கோதை காலில்
> இருபந்து குதிகொண்டாட இருபந்து ... கொண் டாட
> ஒருபந்து கைகொண் டாட ஒருசெப்பில் ஐந்து பந்தும்
> தெரிகொண்டு வித்தை ஆடுஞ் சித்தரை யெதிர்
> கண்டாளே'

என்று சுவைபடக் கூறியுள்ளார்.

குற்ருலநாதரின் குன்ரு அழகைக் கண்ட குறவஞ்சித் தலைவியின் உள்ளத்தில் எத்தனையோ எண்ண அலைகள் எழுந்தன. "விடையில் ஏறி வந்த இவர் விந்தைக்காரரே! இவர் எந்தச் சித்தரோ? நாகத்தைப் புயத்தில் கட்டி, நஞ்சினைக் கழுத்திலே கொண்டு தனது பாகத்தில் பச்சைக்கிளி போல் ஒரு பெண்ணை (உமை) வைத்ததோடு, பெரு விருப்பத்தின் காரணமாக மற்ருெரு பெண்ணை (கங்கை) முடியில் வைத்துள்ள இந்தச் சித்தர் யாரோ? இவரது மெய்யின் சிவப்பழகினையும், வலக்கையில் கொண்டுள்ள மழுப்படையினது அழகையும் மையார் விழியால் கண்டால் மயங்காரோ என்றெல்லாம் எண்ணிய தலைவி தன் உள்ளத்தைக் கவர்ந்த சித்தர் குற்ருலநாதராகத்தான் இருக்க வேண்டுமென்று முடிவு செய்கின்ருள். இதனை,

"அருட்கண் பார்வை யாலென் அங்கந் தங்கமாக
உருக்கிப் போட்டார் கண்ட உடனே தான்
பெருக்கம் பார்க்கில் எங்கள் திருக் குற்ருலர்போலே
இருக்கு திவர்செய் மாயம் ஒருக்காலே"

என்று கவிராயர் கரும்பனைய தமிழில் சுட்டிக் காட்டியுள்ளார். "அருட்கண் பார்வையாலென் அங்கந் தங்கமாக உருக்கிப் போட்டார்" என்று ஆசிரியர், காமநோயால் துன்புறுவோரது உடலில் காணும் வெப்பினையும், அதன் காரணமாக உடல் நிறத்தில் காணும் மாறுதலையும் இயற்கையாகச் சொல்வது போல் பாடியிருப்பது உண்மையிலேயே இன்புறத்தக்கதாகும்.

அடுத்து தோழியர் குற்ருலநாதரது புகழைக் கூறக் கேட்டு வசந்தவல்லி, "முனி பரவும் இனியானே, வேத முழுப்பலவின் கனி தானே, கனியில் வைத்த செந்தேனே" என்று பலவாறு இறைவனைப்பற்றி எண்ணி வியந்து அவனிடத்து தனது கருத்து அழிந்து நின்ருள்; தன்னை மறந்தாள். இதனைக் கண்ட தோழியர் புலம்பி அவளுக்காக

வருந்தினர். பின்னர் அவர்கள் அவளுக்குச் சந்தனக் குழம்பு பூசியதோடு அவளது அருகிருந்து கதைகளும் கூறினர். ஆனால் வசந்தவல்லியோ அதுகால் காய்ந்து கொண்டிருந்த நிலவைப் பலவாறு பழித்துரைத்தனள். இப்பகுதி மிகவும் சுவை பயப்பதொன்றாகும்.

குளிர்ந்த அமுதத்துடன் திருப்பாற் கடலில் தோன்றிய நிலா கடலின் குளிர்ச்சியை மறந்தது ஏனோ என்றும், திருமகளாகிய பெண்ணுடன் பிறந்த நிலா, வசந்தவல்லி ஒரு பெண்ணாக இருந்தும் அவளைச் சுடுவது ஏனோ என்றும் வசந்தவல்லி வெண்ணிலாவைப் பார்த்துக் கேட்டதும் உள்ளத்தை உருக்குவது ஆகும். இதனை ஆசிரியர்,

> "தண்ணமுதுடன்பிறந்தாய் வெண்ணிலாவே அந்தத்
> தண்ணளியை ஏன்மறந்தாய் வெண்ணிலாவே
> பெண்ணுடன் பிறந்ததுண்டே வெண்ணிலாவே
> என்றன்
> பெண்மைகண்டுங் காயலாமோ வெண்ணிலாவே"

என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

வெண்ணிலாவைப் பழித்துக்கூறிய வசந்தவல்லி மன்மதனையும் பழித்துரைக்க, அதுகால் பண்புடைய பாங்கி வந்து வினவ, அவள் தான் வெள்ளி விடையில் வந்த பெம்மானைக் கண்டு உணவும் உறக்கமும் அற்றுவிட்டதாகக் கூறினாள். அதனைக் கேட்ட பாங்கி வசந்தவல்லியைப் பழித்துரைக்க அவள் திரிகூடநாதரைப் புகழ்ந்து பாங்கிக்குக்கூற, பின்னர் பாங்கி அவளுக்கு அறிவுரை கூற, இறுதியாக வசந்தவல்லி பாங்கியைத் திருக்குற்றால நாதரிடத்துத் தூது செல்ல வேண்டினாள். இஃது இவ்வாறிருக்க, குறி சொல்லும் குறத்தி, கையிலே மாத்திரைக்கோல் ஏந்தி, அத்துடன் மணிக்கூடையும் தாங்கி வீதியிலே வந்தனள்.

**குறவஞ்சியின் சிறப்பு**

குறவஞ்சியின் சிறப்பை, தோற்றத்தை, அவள் வரும் காட்சியை ஆசிரியர் மிக மிகச் சுவை பயப்பதாகப் பாடி

ஆசிரியர்: அப்பாடல்களைப் படிக்குங்கால் குறவஞ்சி நேரில் தோன்றி நிற்பதுபோன்ற உணர்வையே படிப்போர் பெறுவர்:

குற்றாலக் குறவஞ்சி, குற்றாலநாதரது திருவருளைப் பாடிக் கொண்டு, திருநீற்றை நெற்றியில் அணிந்து, அத்துடன் பொட்டும் இட்டு, சிறந்த பாசி மணி மாலையும், குன்றி மணி மாலையும் அணிந்து, வெண்ணிற ஆடை பொருந்திய இடுப்பில் தாங்கியிருக்கின்ற கூடையும், வலது கையில் பிடித்திருக்கின்ற குறி சொல்லும் மாத்திரைக் கோலும் கொண்டு, பசப்பும், குலுக்கும், கண் சிமிட்டும், பகட்டும் உடையவளாக, உருவசி, அரம்பை ஆகியோரது செருக்கு அடங்கவும், தன் புன்சிரிப்பின் குறும்பால் முனிவர்களும் அடங்கவும், பேச்சுத்திறத்தால் அவையெலாம் அடங்கவும், தான் வழியாகச் செல்லுகின்ற சித்தர்களும் தன் கடைக்கண் பார்வையால் அடங்கவும் மற்றோர் அழகோவியமாகத் தோன்றினள். இதோ! அவ்வோவியம்:

"பூவளர் செண்பகக் காவளர் தம்பிரான்
தேவர்கள் தம்பிரான் திருவருள் பாடி
இலகுநீ றணிந்து திலகமும் எழுதிக்
குலமணிப் பாசியும் குன்றியும் புனைந்து
கலைவைசேர் மருங்கிற் சாத்திய கூடையும்
வலதுகைப் பிடித்த மாத்திரைக் கோலும்
மொழிக்கொரு பசப்பும் ... கொரு குலுக்கும்
விழிக்கொரு சிமிட்டும் வெளிக்கொரு பகட்டுமாய்
உருவசி அரம்பை கருவமும் அடங்க
முறுவலின் குறும்பால் முனிவரும் அடங்கச்
சமனிக்கும் உரையாற் சபையெலாம் அடங்கக்
கமனிக்கு மவரும் கடைக்கணால் அடங்க..."

அவளது குறி சொல்லும் திறமையைப் பற்றிக் கூறவந்த ஆசிரியர், ஆண்களுக்கு அவர்களது வலது

கை பார்த்தும், பெண்களுக்கு அவர்களது இடது கை பார்த்தும், சென்ற காலத்தின் குறி, தற்போது பலிக்கும் குறி, இனிமேல் வரும் குறி, வேண்டுவார் மனக் குறி, உடற் குறி, கைக் குறி, விழிக் குறி, சொற்குறி இவற்றில் எந்தக் குறியான போதிலும் இமைப் பொழுதில் உரைக்கும் திறம் அவளிடம் உண்டு என்று பாராட்டுகின்றார்.

மற்றொரு சுவையான பகுதி குறத்தி மலை வளம் கூறும் பகுதியாகும், தமிழின் இனிமையை, சுவையை, இசையை, நாம் இப்பகுதியைப் படிக்குங்கால் நன்கு உணர முடியும். எல்லா வளங்களுமுடைய திருக்குற்றாலமென்னப் படும் திரிகூட மலை குறவஞ்சி வாழும் மலையாகும். அங்கு ஆண் குரங்குகள் கனிகளைப் பறித்துப் பெண் குரங்குகளுக்குக் கொடுத்து மகிழும். அக் குரங்குகளால் சிதறி எறியப் படு கின்ற கனிகளுக்காக வானுலகில் வாழும் தேவர்கள் கெஞ்சி நிற்பர். கானவர்கள் வானவரை தம் விழிகளால் அழைப் பர். வானின் வழியாகச் செல்லும் சித்தர்கள் கீழிறங்கி வந்து காயசித்தி மூலிகைகளை இங்கு வளர்ப்பார்கள். தேனரு வித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும். அதனால் ஞாயிற் றின் தேரை இழுத்துச் செல்லும் குதிரைக் கால்கள் வழுக்கி விழும். அத்துடன் தேர்க் காலும் வழுகும். இதனை ஆசிரியர்,

"வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே"

எனப் பேசுகிறார்.

○⊙○

# ௫. இந்தியாவும் விடுதலையும்

இருபதாம் நூற்றாண்டு ஓர் எழில் மிக்க காலம்; தமிழ் உரைநடையில் புதுமை பல புகுந்த காலம்; மாற்றம் பல மலர்ந்த காலம்; வளர்ச்சி ஏற்பட்ட காலம். இக்காலத்திலே தான் மறைமலையடிகள் பிறமொழிச் சொற்களை விலக்கித் தூய செந்தமிழ்ச் சொற்களை உரைநடையிற் புகுத்தினார். தமிழ் உரைநடை களங்கமற்ற முழுநிலவெனப் பொலிந்தது. அடுத்து திரு. வி. க. வந்தார். மேடைகளில் அழகுத் தமிழில் முழங்கினார். அத்துடன் தனது தமிழ் முழக்கத்தை உரை நடையில் புகுத்தினார். அதாவது உரை நடையிலே – எழுத்து நடையிலே – பேச்சுப் புகுந்தது. எனவே தமிழிலே முழுக்க முழுக்கப் பேச்சாகவே அமைந்த உரைநடை, புத்தம் புதிதாகத் தோன்றியது. தமிழன்னை புத்தாரம் ஒன்றைப் பெற்றாள். அதனைத் தன் முத்தாரங்களுக்கிடையே அவள் அணிந்து கொண்டாள்.

திரு. வி. க. வின் உரைநடையை ஆங்கிலேயர் காணின், அதனைப் பேச்சு உரைநடை (Spoken Prose) என்று பாராட்டுவர்; இதனை முதன் முதலில் தமிழில் ஏற்படுத்திய பெருமை திரு. வி. க. அவர்களையே சாரும்.

"இந்தியாவும் விடுதலையும்" என்பது திரு. வி. க. அவர்கள் நமக்கு அளித்துச் சென்றுள்ள அரிய நூல்களில் ஒன்று. அந் நூலினை உரைகல்லாகக் கொண்டு அவர்தம் உரைநடைச் சிறப்பினை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"இந்தியாவும் விடுதலையும்" என்ற நூல் முழுதும் உணர்ச்சியும் உரமும் ஊட்டும் உரையாகவே, பேச்சாகவே காணப்படுகிறது. எனவே இதனை நாம் படிக்குங்கால் திரு. வி. க. அவர்களே நம் முன் வந்து அழகுத் தமிழில் பேசுவது போலத் தோன்றும். திரு. வி. க. அவர்களுக்கு முன்னரும்

பின்னரும் தோன்றிய உரைநடைகளை ஒப்பு நோக்கின், அவர்தம் பேச்சு நடையின் செழுமையும் கொழுமையும் நன்கு விளங்கும். திரு. வி. க. அவர்களுக்கு முன்னுள்ள உரை நடைகள், ஒன்று வடசொற்கள் நிரம்பி இருக்கும்; அல்லது செய்யுள் வரிகளை நிரம்பிக் காட்சியளிக்கும். திரு. வி. க. அவர்கள் கூடத் தொடக்கத்தில் அவ்வாறே எழுதினார். இதற்கு அவர்தம் "கதிரைவேற் பிள்ளை வரலாறு" என்ற நூலே சான்று கூறும். ஆனால் நாளடைவிலே அவர் பேச்சு நடையிலேயே எழுதலானார். பேச்சிலே நீண்ட சொற்றொடர்களுக்கோ அன்றி, திரிசொற்களுக்கோ இடமிராது. மேலும் திரு. வி. க. அவர்களது பேச்சிலே உணர்ச்சி பொங்கிப் பொங்கி வழியும். உணர்ச்சிப் பேச்சிலே வெளிவருகின்ற சொற்றொடர்கள் சிறு சொற்றொடர்களாகவே இருக்கும்; சொற்களும் செஞ்சொற்களாகவே யிருக்கும். அவை எழுத்திலே புகும் போதும் அவ்வாறே இருக்கும். "இந்தியாவும் விடுதலையும்" என்ற நூல் பேச்சு நடையில் அமைந்த ஒன்று. எனவே அந்நூலில் சிறுசிறு சொற்றொடர்களே நிரம்பியுள்ளன. பேச்சு நடை என்பதால் ஒரு சில கொச்சைச் சொற்களும் இருக்குமோ என்று எண்ணலாம். ஆனால் திரு. வி. க. அவர்களது பேச்சு நடையில் உள்ள சொற்கள் நம் உள்ளத்திற்கு விருந்தளிக்கும் செந்தமிழ்ச் சொற்கள் ஆகும். விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் அவர்தம் உரைநடையில் பிறமொழிச் சொற்கள் காணப்படுகின்றன.

கம்பியின் பருமன் குறையக்குறைய மின் ஓட்டம் மிக விரைவாகச் செல்லும். அது போன்று, சொற்றொடர்களின் நீளம் குறையக்குறைய அவற்றின் விரைவு மிகும். இவ்வுண்மையினை இந்நூலில் நாம் நன்கு காணலாம். இந்நூலில் காணும் ஒவ்வொரு சொல்லும் கயல் போலத் துள்ளும். நூலின் நடை குதித்து விரைந்தோடும் மான்போலவும், துள்ளும் கன்று போலவும், குமிழியிட்டுச் செல்லும் ஆறு போலவும், துள்ளித் துள்ளிச் செல்லுகிறது. அத்துடன்

அந்நடையிலே உணர்ச்சி ஊடுருவி நின்று மின்னலெனப் பளிச்சிடுகிறது.

திரு. வி. க. அவர்களது நடை பேச்சு நடை என்று முன்னரே கண்டோம். பேச்சு நடை வேறு; எழுத்து நடை வேறு. பேச்சு நடையிலே உணர்ச்சியும், அழுத்தமும், கருத்தும் மிக்கு விளங்கும். உணர்ச்சி பொங்குகையில், பேச்சில் சில சொற்கள் சுருங்குதலும் உண்டு; மற்றுஞ் சில விடுபட்டுப் போதலும் உண்டு. சொற்றொடர்கள் மிகவும் சுருக்கமாகவே இருக்கும். மேலும் பேச்சிலே, எழுவாய் பயனிலை முதலியன தம் இடம் மாறி நிற்றலும் உண்டு. இத்தகைய குறைபட்ட இலக்கண விதி முறைகள் எழுத்து நடையில் ஏற்கப் படமாட்டா. பேச்சு நடை இக் குறைபாட்டை உடையது என்பதை நாம் நன்கு அறிவோம். இதன் காரணமாக ஒரு சிலர் அஃது உரைநடையன்று என்று உரைப்பர். ஆனால் உரை நடை பற்றி ஆராய்ந்த பௌல்டன் என்னும் அம்மையார் அவ்வாறு பேச்சு நடையினை ஒதுக்குவது மிகவும் கண்டிக்கத் தக்கதாகும் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இலக்கணத்தை அளவு கோலாக வைத்துக் கொண்டு பேச்சு நடையின் தன்மையினை, சிறப்பினை மதிப்பிடுதல் பொருத்தம் இல்லாதது ஆகும். மாறாக அதனை, உள்ளுணர்வினை உள்ளவாறே எடுத்துக் கூறுகின்ற உயிர்ப் பண்பு எனக் கொண்டு உரக்கப் படிப்பின் அந்நடையின் உணர்ச்சிக் கனிவினை, உண்மை ஒளியினை, உயர்ந்த பண்பினை, உள்ளத்தினை ஈர்க்கும் இயல்பினை அறியலாம் என்பது அவர் கருத்தாகும். அது வருமாறு:

"If spoken prose is judged by the standards of a grammarian, it is trash; but when it is taken as an expression of inner experience and read aloud the elegiac pathos becomes real and dignified."

திரு. வி. க. அவர்களது பேச்சு நடையே அவர்தம் உரை நடை. ஆகையால், இந்நூலிலே பெரும்பாலும் சிறு சிறு

சொற்றொடர்களே நிரம்பியுள்ளன. அத்தகைய சிறு சொற்றொடர்களைச் செம்மையாகப் படைப்பதில் திரு. வி. க. அவர்களை விஞ்சுவார் எவருமிலர் என்று நாம் துணிந்து கூறலாம். அதற்கு ஓர் எடுத்துக் காட்டு வருமாறு:

"போர் இருவகை. ஒன்று அறப்போர்; மற்றொன்று மறப்போர். அறப்போர் தன்னலமற்றது; மற்றையது தன்னலமுடையது. தன்னலமற்ற, உயிர்வதையற்ற அறப்போர் கொலையாகாது. மறப்போர் கொலையின்பாற்படும். விளக்கம் பகவத் கீதையிலும் திருக்குறளிலும் பார்க்க".

மாத்யூ அர்னல்டு (Mathew Arnold) என்னும் மேலை நாட்டு அறிஞர் உரை நடைக்குத் தெளிவும், சுருக்கமும், இனிமையும் இருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். இத்தகை பண்புகளும் மேலே தரப்பட்டுள்ள உரைப் பகுதியிலே செறிந்துள்ளமையினை நாம் நன்கு காணலாம்.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச் சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

என்பது பொய்யில் புலவர்தம் பொன் மொழியாகும். ஒத்த சொல்லும், மிக்க சொல்லும் உளவாகாமல் தக்க சொல்லை ஒருவன் எடுத்தாள வேண்டும் என்பது இப் பொன் மொழியின் பொருளாகும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக மேற்கூறிய உரைநடைப்பகுதி விளங்குகிற தன்றோ! அந் நடையிலே நடை அழகினைக் காண்கிறோம். சொற் சுருக்கத்தினைப் பார்க்கின்றோம். தெளிவும் இனிமையும் போட்டியிடுகின்றன.

வேறு சில சொற்றொடர்களிலே எழுவாய் ஒன்றுதான் இருக்கும்; பயனிலைகளோ பல இருக்கும். அதற்கோர் எடுத்துகாட்டு வருமாறு:

"மாந்தனது கூடி வாழும் இயல்பு வாழ்க்கையாக விரிகிறது; குடும்பமாக விரிகிறது; சிற்றூராக விரிகிறது; நாடாக விரிகிறது; உலகமாக விரிகிறது."

நீண்ட சொற்றொடர்கள் ஓரிரு இடங்களில்தான் காணப்படுகின்றன. அதுவும் முடிவுரையில்தான் காணப்படுகின்றன. ஓர் எடுத்துக்காட்டு வருமாறு :

"இந்நூலில் மூவகை இந்தியாவும் மூவகை நாடும் பேசப்பட்டுள்ளன; முற்கால இந்தியாவும், இடைக்கால இந்தியாவும், இந்து நாடும் மகம்மதிய நாடும் எப்படி வளர்ந்து தேய்ந்தன என்பதும், இக்கால இந்தியாவில் எக்கட்சி வழங்குகிறது என்பதும், இந்தியாவில் ஆங்கில ஆட்சி எவ்வாறு நுழைந்தது என்பதும் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன."

இங்கே "என்பதும்" என்ற சொல், "என்பதூஉம்" என்பதன் திரிபாம். இந்தச் சொல்லைக் கண்டதும் நம் நினைவில் இளம்பூரணரின் "முறைமை சிறத்தலாவது; யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் வரின், முதற்பொருளால் திணையாகும் என்பதூஉம், அவை இரண்டும் வரின் கருப் பொருளால் திணையாகும் என்பதூஉம், உரிப் பொருள் தானேவரின் அதனால் திணையாகும் என்பதூஉம் ஆம்" என்ற பகுதி நம் நினைவிற்கு வரும் அத்துடன்,

"அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவ தூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்த லும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்"

என்ற சிலப்பதிகார வரிகளும் நினைவிற்கு வராமல் போகா.

நூல் முழுவதும் பேச்சு நடைதான் அமைந்துள்ளது என்றாலும், சிற்சில இடங்களில் பேச்சு நடையும், இனிய சுவை

யும், உணர்ச்சி வெள்ளமும், விரைவும் கொண்டு நம் உள்ளத்தைக் கவருகின்றது.

"இளைஞர்களே! தாயின் விடுதலையைக் குறிக்கொண்டு எழுங்கள்; அஞ்சா நெஞ்சுடன் எழுங்கள்; கலப்பு மண உள்ளங்கொண்டு எழுங்கள்; திரளுங்கள்; படைகளாகத் திரளுங்கள்; திரண்டு எழுங்கள்; சாதிப் பேய் தலைவிரிந்து ஓடும்; சாதிப் பேயை ஓட்டுந்திறன், ஆற்றல், வல்லமை உங்களிடத்திலிருக்கிறது; மனம் வேண்டும்; மனமே கொள்ளுங்கள்."

இதனைப் படிக்கும்பொழுது திரு. வி. க. வே. நம்முன் தோன்றி முழக்கமிடுவது போலத் தோன்றவில்லையா? இதன் மூலம் அவர் உள்ளம் நன்கு புலப்படுகிறதன்றோ?

இக்காலச் சொற்றொடர்களிலே தல்லீற்றுத் தொழிற் பெயர்ச் சொற்களிலே பெரும்பாலும் "தல்" என்ற விகுதி வருதல் இல்லை. ஆனால் திரு. வி. க. அவர்களது சொற்றொடர்களிலே "தல்" ஈறு இன்றிப் பெரும்பாலும் தொழிற் பெயர்ச் சொற்கள் வரா.

ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

"ஆதலின், உண்மை இதுதான் என்று அறுதியிட்டுக் கூறுதல் இயலாது....... அவர்களிடை காங்கிரஸ் கொள்கையில் சிறு மாறுதல் நிகழ்தல் வேண்டுமென்ற வேட்கை எழுந்தது."

**சொற்கள்**

"இதில் திசைச் சொற்கள் சிலவும், வடநாட்டுப் பெயர்கள் சிலவும், இன்ன பிறவும் உலகிடை மருவி வழங்கும் முறையிலேயே பெய்யப் பட்டுள்ளன" என்று திரு. வி. க. அவர்களே தம் முன்னுரையில் கூறியுள்ளார். அவர் கையாண்டுள்ள பிறமொழிச் சொற்களில் பெரும்பாலானவை இடுகுறிப் பெயர்களாகும். அஃதாவது தனிப்பட்டவர்களின்

[illegible]யர்களாகும். ஆங்கிலேயர் பெயர்களை அவ்வாறுதான் குறிப்பிட முடியும். ஆனல் அவற்றைக் குறிப்பிடுகையில் 'கிரந்த' எழுத்துக்களைப் பயன்படுத்தி இருக்க வேண்டா. [illegible] மற்றும் சில சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றுள் சில வருமாறு: அஹிம்சை, சூந்யம், பிராணி, [illegible]யம், கர்மம், பிரசாரம், ஜீரணம், இராஜ்யம், சாம்ராஜ்யம், [illegible]பொடி, ஜில்லா, இராஜப்பிரதிநிதி, சுதேசி, விதேசி, [illegible]ங்கள், உத்யோகஸ்தன், பிரதிஷ்டை, அநாவசியம், [illegible]ணம், வர்க்கம், சுராஜ்யம், பகிஷ்காரம். இவற்றுள் பல சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தியிருக்கலாம். அல்லது தமிழ்ச் சொற்கள் கிடைக்காவிடின், தமிழாக்கமாவது செய்திருக்கலாம். ஆனல் பிறமொழிச் சொற்கள் இருப்பதால் நூலின் பெருமைக்குக் குறை எதுவும் ஏற்படவில்லை. ஆயினும், இத்தகைய சொற்கள், தவிர்க்கப் பெற்றிருந்தால் நூல் தூய்மையும் தனிச் சிறப்பும் பெற்றிருக்கும். நானூறு பக்கங்களுக்கு மேலே உள்ள ஒரு நூலில், அதுவும், 'வடமொழி "தமிழின் தாய்" என்று சொல்லப்பட்ட காலத்தில், ஐம்பது, அறுபது வடசொற்கள் கலந்தமை வியப்பன்று: இவை தவிர, ஏனைய சொற்கள் எல்லாம் தூய செந்தமிழ்ச் சொற்கள்; உயிருடைய சொற்கள்; உணர்வூட்டும் சொற்கள்; [illegible] சொற்கள்; சுவைபொழுகும் சொற்கள்; 'அகக்கண்ணாடி,' 'குடிக்கோனாட்சி' என்பன போன்ற மொழிபெயர்ப்புச் சொற்கள்கூட சுவை மிக்குத் தோன்றுகின்றன.

**பல்வகை உரைநடைகள்**

முன்னர்க் கூறியபடி, நூல் முழுவதும் பேச்சுநடையில் அமைந்துள்ளது என்றாலும், நூலாசிரியர் வேறு உரைநடைகளையும் கையாளாமல் இல்லை.

நூலின்கண் ஆசிரியர் பல கருத்துக்களை வற்புறுத்து கின்றார். அவர் வற்புறுத்தும் கருத்துக்களுள் பழமையின் [illegible] புதுமையை வளர்க்கவல்லது என்பதாகும். அதனை

நிறுவ ஆசிரியர் விஞவும் விடையுமாகக் கூறி வழக்காடி இறுதியிலே தங்கோள் நிறுவுகிறுர். இத்தகைய இடங்களில் அவர் கையாண்டுள்ள நடை, வழக்காடு நடையாகும் (Argumentative Prose).

"புதுமை இளைஞரே! புதுமை எது? புதுமைக்குத் தோற்றுவாய் உண்டா? இல்லையா? புதுமை வெறும் பாழினின்றும்-சூந்யத்தினின்றும் தோன்றுமா? தாயின்றிச் சேய் பிறக்குமா? வித்தின்றி முளை உண்டாகுமா? ஓர்க.

பழமையின்றிப் புதுமை இல்லை. புதுமைக்குத் தாய் பழமையே. புதுமையின் ஆக்கத்துக்கு ஊக்கமூட்டுவதும் பழமையே. பழமையின் உயிர்ப்பே புதுமையை வளர்க்க வல்லது. பழமையற்ற நாடும் சமூகமும் பிறவும் விரைவில் எளிதில் புத்துணர்வு பெறுதல் அரிது...... கண்ணகி நின்ற இடம் இது—மணிமேகலை சிறைப்பட்ட இடம் அது என்று அறிஞர் உணர்த்தும் போது உள்ளக் கவர்ச்சியும், கிளர்ச்சியும் உறுகின்றனவா? இல்லையா? இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நமது நாடு பாபிலோனுடன் வாணிகஞ் செய்தது என்றும்,இன்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்தியப் பிணங்கட்கு நமது நாட்டு மெல்லிய துணிகள் புனையப்பட்டன என்றும் பழைய வரலாறு சாற்றுவதை உணரும்போது நமக்குள் உணர்ச்சி எழுந்து ததும்பி வழிகிறதா இல்லையா?... அனுபவத்திற் பார்க்க, இம் மன்னன் இப்படி நடந்ததால் தீமை விளைந்தது என்றும் அம்மன்னன் அப்படி நடந்ததால் தீமை விளைந்தது என்றும் பழைய வரலாறு சொல்லுகிறது: அக்குறிப்புக்கள் ஒருவனது வாழ்வுக்குத் துணை செய்யுமா? செய்யாவா? ஆராய்க."

மேற்கூறிய பகுதியினை நாம் படிப்போமாயின், இறுதியிலே, "பழமை பல வழியிலும் வேண்டற்பாலதே" என்று

திரு. வி. க. அவர்களின் கருத்தை ஏற்றுக் கொள்வோம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இதற்குக் காரணம் வழக்காடு நடையின் ஆற்றலே ஆகும். அஃதாவது வழக்காடு நடை படிப்போரது உள்ளத்தை ஈர்ப்பது ஆகும். நூலாசிரியருடைய கருத்தைப் படிப்போர் ஏற்றுக் கொள்ளச் செய்வது இந்நடையின் தனித்த ஆற்றலாகும். அத்துடன் நூலாசிரியருடைய கருத்தைச் சிறந்த உண்மை என்று படிப்போர் உவந்து போற்றி மகிழும்படித் தூண்டும். அதற்குக் காரண காரியச் செயல்முறைகளைக்காட்டி, தம்முடைய கருத்துக்களை ஆசிரியர் கூறுவதற்கு இந்நடை வழிவகுப்பது ஆகும். இக் கருத்தினை நாம்,

"The function of argumentative prose is to pursuade the reader to believe something. Good argumentative prose contains sound reasoning and may also include an appeal to emotion"

என்ற ஆங்கில உரைப் பகுதியால் அறியலாம்.

நூலின் ஒரு சில இடங்களில் நாம் வருணனை அல்லது விளக்க உரை நடையினைக் (Descriptive Prose) காண்கிறோம். நாடு, சமுதாயம், சிற்றூர் ஆகியவை பற்றி அவர் கூறுங்கால் வருணனை உரை நடையினையே கையாண்டுள்ளார். அதற்குக் கீழ்க்காணும் பகுதியினைச் சான்றாகக் காட்டலாம் :

> "தலைவர் நடை கிளத்தினார். திலகர் தடைக்கு அடங்கவில்லை. 'அகலேன்' என்று மகாராஷ்டிரச் சிங்கம் கர்ச்சித்தது. அதிர்ந்தது பந்தர்; வீசியது சூறாவளி; பொங்கியது கடல்; மோதின அலைகள்; சுழன்றன தடிகள்; எழும்பின செருப்புகள்; பறந்தன நாற்காலிகள்; ஒரே குழப்பம்; திலகர் சிலைபோல் நின்றார். தலைவரால் ஒன்றுஞ் செய்தற்கில்லை."

இடைக்கால இந்தியா, தற்கால இந்தியா, அரசியல் பொருளாதாரம் என்ற மூன்று இயல்களிலே இந்திய நாட்டு

வரலாறே பேசப்படுகிறது. வேறு ஒன்றும் பேசப்படவில்லை: அங்கு ஆசிரியர் நமக்கு அறிவிப்பதெல்லாம் இந்திய வரலாறே. என்றாலும் பிறர் எழுதிய இந்திய வரலாற்றுக்கும், திரு. வி. க. அவர்கள் எழுதிய இந்திய வரலாற்றுக்கும் வேற்றுமை இருக்கத்தான் செய்கிறது. அந்த வேற்றுமைக்குக் காரணம் என்ன ? அதற்குக் காரணம் அவரது நடைதான்—பேச்சு நடைதான். பிற இந்திய வரலாற்று நூல்களுக்கும், இந்நூலுக்கும் உரிய பொருள்—கருத்துக்கள் ஒன்றே (Common Objects). ஆனால் திரு. வி. க. வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறுவதோடு நிறுத்தாமல், ஆங்காங்கே தம்முடைய கருத்துக்களையும் கூறுகிறார். அவர் கூறும் கருத்துக்களுக்கு அரண்போல் வரலாற்று நிகழ்ச்சிகள் அமைகின்றன. அதனால் நூலின் நடை வேறுபடுகின்றது. அதற்கோர் எடுத்துக்காட்டு வருமாறு :

> " அவுரங்கசீப்பை எதிர்த்துப் போராடியவர் சிலர். அவருள் சிறந்தவர் சிவாசி. அவுரங்கசீபின் மனத்தில் முசுலீம் உலகே நின்றது; சிவாசி மனத்தில் இந்து உலகே நின்றது; இருவர் மனத்திலும் இந்தியா என்னும் தாய்நாடு நிற்கவில்லை. தமது பிணக்கால் அயலவர் நாட்டிற் பெருகி, முடிவில் சுய ஆட்சியை வீழ்த்தும் என்பதை இருவரும் உணர்ந்தாரிலர். அவர் தம் உணர்வை மதவெறி விழுங்கி விட்டது. சுதேசிய ஆட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம் அவுரங்கசீபு மட்டுமல்லர்; சிவாசியும் ஆவார்; உள்ளூர்ப் பிணக்கு வெளியூரை அழைத்தல் இயல்பன்றோ."

மற்றொரு வகை உரை நடை, அறிவிப்பு நடையாகும். (Informative Prose). இவ்வறிவிப்பு நடையில் நடைச்சிறப்பு ஒன்றும் தேவையில்லை என்றும், இருக்கவும் செய்யாது என்றும் மேலைநாட்டார் கூறுவர். ஆனால் அக்கூற்று திரு. வி. க. அவர்களைப் பொருத்தவரை முற்றிலும் பொருந்தாது. இவ்

[illegible]மையினைப் பின்வரும் எடுத்துக் காட்டுப் பகுதியால் அறியலாம் :

"முசுலீம் அல்லாதார்க்கென்று பிறப்பிக்கப் பெற்ற சட்டங்கள் எல்லாம் அக்பரால் ஒழிக்கப்பட்டன; அவரால் குழந்தை மணம் விலக்கப்பட்டது; கைம்மையார் கொடுமை ஒருவாறு அகற்றப்பட்டது; கட்டாய உடன்கட்டையேறுதல் நிறுத்தப்பட்டது; அடிமை முறை அழிக்கப்பட்டது."

ஒரு சில இடங்களில் அவர் உணர்பொருள் நடையினை[illegible] (Abstract Prose) கையாண்டுள்ளார். அதற்கோர் எடுத்துக்காட்டு :

"தத்துவம் என்பது மாயா காரியம். மாயையே இயற்கை. இயற்கை இறைவனது உடல்—போர்வை. இறைவனுக்கு இருவகை நிலையுண்டு. ஒன்று இயற்கையை உடலாகக் கொண்டது; மற்றொன்று இயற்கையைக் கடந்து நிற்பது. இயற்கையின் கூறுகளாகிய தத்துவங்கள் முப்பத்தாறு... இசை நாதத்தின் வாயிலாக எல்லாத் தத்துவங்களிலும் கலந்து நிற்பது. அவ்வத் தத்துவத்தில் நின்று இசை எழும்போது, அஃது அவ்வத் தத்துவ சொரூபமாகவே பயன் விளைக்கும். அதன் சுய சொரூபம் நாதத்திலேயே விளங்கும். நாதம் வரை சென்ற மக்களே இசையின் முழு நுட்பமுணர்ந்தவர்களாவார்கள்."

நூலாசிரியர் உணர்பொருள் உரை நடையைக் கையாண்டிருப்பது போலவே பருப் பொருள் உரை நடையினையும் (Concrete Prose) கையாளாமல் இல்லை. ஓர் எடுத்துக்காட்டு வருமாறு :

"ஒவ்வொரு வீட்டின் புறக் கடையில் நெல்லி, அத்தி, விளா, முருங்கை...... முதலிய மரங்கள் பொலிந்து கொண்டிருக்கும்; காய்கறிச் செடிகள்

வைக்கப் பட்டிருக்கும்; முன் புறத்தில் ஆல், அரசு, வேம்பு முதலிய மரங்கள் நிழல் செய்யும்; தெருக்கள் அழகாக அமைக்கப்பட்டிருக்கும்."

பத்தி பிரித்தல்

உரைநடையைப் படிப்பதிலே வெறுப்புத் தோன்றுமா திருக்க, சொற்றொடர்களும், பத்திப் பிரிப்புகளும் செவ்வனே அமைதல் வேண்டும். எல்லாமே சிறு பத்திகளாய் இருப்பினும், பெரிய பத்திகளாய் இருப்பினும் சலிப்புத் தட்டி விடும். இரண்டும் கலந்து வரல் வேண்டும். அப்பொழுது தான் படிப்போர்க்கு அலுப்புத் தட்டாது. மேலும் படிக்க விருப்பம் எழுந்து கொண்டு இருக்கும். பத்தி பிரித்து எழுது வதிலே திரு. வி. க. அவர்கள் தமக்கெனத் தனிமுறை ஒன்றைக் கைக்கொண்டுள்ளார்.

> "சாதிக் கொடுமை ஒரு பக்கம்! சம்பிரதாயக் கொடுமை இன்னொரு பக்கம்! சாமியார் கொடுமை மற்றொரு பக்கம்! பாரதமாதா எரிகிறாள்."

இஃது ஒரு பத்தி.

> "இந்தியாவில் பழைய மலைகள் சில நிற்கின்றன. அவற்றுட் சிறந்தன இமயம், விந்தியம், பொதிகை. இமயம் கடலிடை மூழ்கிக் கிடந்ததை விந்தியமும், பொதிகையுங் கண்ட காலமுண்டு. அவ்வம் மலைப் பாறைகளின்வயதை ஆராய்ந்தால் அதன தன் தொன்மை நனி விளங்கும். விளக்கம் சில நூற்களிற் காண்க."

இஃது ஒரு பத்தி.

மேற்கூறிய இரண்டு பத்திகளையும் பார்க்கப் பார்க்க, திரு. வி. க. அவர்களது சிறந்த பத்தி அமைப்பு முறையினை நாம் நன்கு உணரலாம். முதற் பத்தி முன்னுள்ள கருத்துக் களின் தொகுப்பாய் இலங்குகின்றது. இரண்டாவது பத்தி

தன்னளவில் முடிந்து நின்று இனிமை பயக்கின்றது. என்ன அழகு! என்ன அருமை! என்ன தெளிவு! தம் கருத்துக்களை, உணர்ச்சிகளை, தெளிவாகவும், இனிமையாகவும், திட்ட வட்டமாகவும், படிப்போர் இடர்ப்படாது இருப்பதற்கு எளிமையாகவும் கூறுவதற்கேற்ற நிலையில் திரு. வி. க. அவர்கள் பத்தி அமைப்பினைக் கையாண்டிருப்பது வியத்தற்குரியது ஆகும்.

இதுகாறும் கூறியவற்றால், திரு. வி. க. அவர்கள் தமக்கென ஒரு தமிழ் நடையினை வகுத்துக் கொண்டவர் என்பதும், அவ்வாறு வகுத்துக் கொண்ட நடையிலே பேச்சு நடைக்குச் சிறந்ததோர் இடத்தை அளித்து, தமிழ் உரை நடையினை உலகம் போற்றும் வண்ணம் உயர்த்தியவர் என்பதும், அவர்தம் உரை நடையிலே பத்திப் பகுப்பும், தெளிவும், இனிமையும், சுருக்கமும், விளக்கமும் செம்மையும் அமைந்துள்ளன என்பதும், பலவகை உரை நடைகள் அவர்தம் தமிழ் உரைநடையிலே பின்னிக் கிடக்கின்றன என்பதும், அது காரணமாக அவரது உரைநடை மின்னிச் சுடர் விடுகின்றது என்பதும், அத்துடன் அவர்தம் உரைநடையினை நாம் படிக்குங்கால் — உரத்துப் படிக்குங்கால் — தமிழ்த் தென்றல், தமிழ் முனிவர், தமிழ்ப் பெரியார், திரு. வி. க. அவர்களே நேரில் வந்து முழங்குவது போன்ற உணர்வினைப் பெறுகிறோம் என்பதும் இனிது பெறப்படும். இன்று தமிழ் அறிஞர் பலர், இளைஞர்கள் அவரது நடையைப் பின்பற்றி, தங்கள் உரைநடைப் புலமையை வளர்த்துக் கொண்டுள்ளனர் என்று நாம் துணிந்து கூறலாம். எனினும், திரு. வி. க. அவர்களது உரைநடை போல முன்னும் தோன்றியது இல்லை; இன்றும் தோன்றவில்லை; பின்னும் தோன்றுதல் அருமை. எனவே, தமிழ் உரைநடை வரலாற்றிலே திரு. வி.க. அவர்களுக்கு சீரிய, நேரிய ஓர் இடம் உண்டு என்பதில் ஐயமில்லை.

# 4. காப்பியத் தமிழ்

## காப்பியச் சிறப்பு

காலம் மாற மாற மக்களுடைய கருத்துக்கள் மாறும்; எண்ணங்கள் மாறும்; அவர்தம் அறிவும் வளர்ச்சி பெறும்; அதுபோல இலக்கியங்களும் காலத்திற்கேற்ற முறையில் மாறிப் பிறக்கும். ஒரு காலத்திலே கவிதைக்கு அதிக மதிப்பு இருந்தது. ஆனால் இன்றோ கவிதையைவிட உரை நடைக்கு அதிக வரவேற்பளிக்கப்படுகிறது. உரைநடை நூல்கள் ஆயிரக்கணக்காகப் பெருகி வருகின்றன. இது காலத்தினால் ஏற்படும் கருத்து மாற்றம் ஆகும்.

சங்க காலத்திலே தனிப் பாடல்களுக்கு அதிக மதிப்பு இருந்தது. அஃதாவது சங்ககால மக்கள் மலரை மட்டும் தனித்தனியே வைத்துக் கொண்டு நுகர்ந்து நுகர்ந்து மகிழ்ந்தனர். ஆனால் சங்க காலத்திற்குப்பின் மக்களுடைய எண்ணப் போக்கு வேறுவிதமாக வளரலாயிற்று. மலரை நுகர்வதோடு அவர்களது உள்ளம் அமையவில்லை. மலர்கள் பல கொண்டு மாலையாக்கி மகிழ விரும்பினர். சங்ககால மக்கள் தனி மலரை நுகர்ந்தனர். எனவே தனிப் பாடல்களைப் பாடினர். பிற்கால மக்கள் மாலையைப் பெரிதும் விரும்பினர். எனவே பல காப்பியங்கள் எழுந்தன.

ஒரு மொழியின் செழுமைக்குக் காரணமாக அமைந்தவை இலக்கியங்களாகும். இலக்கியங்களுள்ளும் காப்பியங்களே மொழியின் வளத்தைத் தெளிவாகக் காட்டுவனவாகும். உயர் தனிச் செம்மொழிகள் என அழைக்கப்படுகின்ற மொழிகளுக்குள்ள பெருமையெல்லாம் அந்த மொழிகளிலுள்ள பெருங்காப்பியங்களால்தான் என்பது நாமறிந்ததொன்றே. இலத்தீன், கிரீக், சீனம், தமிழ், வடமொழி ஆகியவை உயர் தனிச் செம்மொழிகளாகும். இவற்றுள் இலத்தீனுக்குப் பெருமையளிப்பது தாந்தே எழுதிய 'டிவைன் காமெடி' (Divine Comedy) என்ற காப்பியமாகும். அதுபோலவே தமிழ்மொழி

செழிப்பையும், அதன் இலக்கிய வளத்தையும் நமக்குக் காட்டுவன தமிழ்க் காப்பியங்களாகும்.

ஒரு கவிஞனின் உண்மையான புலமையைக் காண்பதற்குப் பெரிதும் உதவுவது காப்பியமே. காப்பியந்தான் கவிஞனது களமாகும்; கவிஞனுடைய விரிந்த கற்பனைக்கும், காவிரிபோல், கங்கைபோல் ஊறுகின்ற கருத்து வெள்ளத்துக்கும் இடமாக அமையவல்லது காப்பியமே. காப்பியத்தை தனி உலகம் என்று கூடச் சொல்லலாம். அந்த அருமை யான உலகிலே மஞ்சு கண் துஞ்சும் மாமலைகள், அவற்றி லிருந்து இழுமெனும் ஓசையுடன் ஒழுகுறும் அருவிகள், புரண்டோடி வரும் மணி ஆறுகள், அவற்றின் கரைக ளிலே கன்னலும், செந்நெலும், கனி குலுங்குந் தோப்புக் களும் சூழ்ந்த ஊர்கள், நிரை நிரையாகத் திரைபெழுப்பி வரும் கடல், கடலுக்கு மேலே வானம், அங்கே கண் சிமிட்டும் விண் மீன்கள், தண்ணொளி பொழியும் வெண் ணிலவு, செங்கதிர் முதலிய அத்தனை காட்சிகளையும் காண லாம்; கவலையை மறக்கலாம்; களிப்பு வெள்ளத்திலே மிதக்கலாம்.

காப்பிய இலக்கணம்

காப்பிய இலக்கணத்தைக் கூறுகின்ற நூல்கள் தமிழில் அதிகம் இல்லை. இருப்பனவற்றுள் கற்று வல்ல புலவர் மக்க ளால் பெரிதும் குறிக்கப்படுவன இரண்டு. அவை தண்டியலங் காரமும், மாறனலங்காரமுமாம். இவ்விரண்டு நூல்களும் காப்பிய இலக்கணத்தை மட்டும் உணர்த்துவன அன்று; அவற்றுள்ளே கூறப்படும் செய்திகளுள் காப்பிய இலக்கண மும் ஒன்றாகும். இவ்விரு நூல்களும் மிகவும் பிற்காலத்தில் தோன்றியவையாகும். இவற்றிற்கு முன்பே அருமையும், சீர்மிச் செழுமையும், பொருள் வளமும் உடைய காப்பி யங்கள் பல தோன்றின. எனவே இவ்விரு நூல்களும் கூறு கின்ற காப்பிய இலக்கணம் முழுவதும் இவற்றிற்கு முந்தித் தோன்றிய செந்தமிழ்க் காப்பியங்களில் அமைந்திருக்க

வேண்டுமென எதிர் பார்ப்பது பொருத்தமுடையதன்று; மேலும் அவை வடமொழிக் காப்பிய இலக்கணத்தையும் உடன் சேர்த்துக் கூறுகின்றன.

காப்பியத்தின் இலக்கணத்தைக் கூறவந்த தண்டியலங்கார ஆசிரியர், "பெருங்காப்பிய மென்பது பலவகை உறுப்புக்களை உடையது; வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் என்பனவற்றுள் ஒன்று அதில் முதலில் வரவேண்டும். அது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருட்களையும் பயப்பதாக இருக்க வேண்டும். அதன் பின் தன்னிகரில்லாத் தலைவன், மலை, கடல், நாடு, தலைநகர், பருவம், தண்மதி, செங்கதிர் ஆகியவற்றின் வருணனை, பின் தலைவன் திருமணம், முடிசூடல், தலைவனும் தலைவியும் பொழிலாடல், புனலாடல், மக்களைப் பெறுதல், புலத்தல், கலத்தல் ஆகியவற்றிலே இன்பம் காணுதல், அதன் பின் அமைச்சரோடு சூழ்ந்து ஆராய்தல், தூது போக்குதல், போர் செய்தல், வெற்றி பெறுதல், சந்து செய்தல், ஆகியவற்றைச் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் ஆகிய பல பகுதிகள் மூலம் விளக்கிச் சுவையும், உணர்வும் ஒழுகுமாறு கற்றுவல்ல நல்லோரால் புனையப்படுவது பெருங்காப்பியமாகும்'' என்று தெளிவுறக் கூறுகின்றார்.

காப்பியம் என்ற சொல் தொடர்நிலைச் செய்யுளைக் குறிக்கப் பண்டைய நூல்களில் கையாளப் படவில்லை; பிற்கால நூல்களில் தொடர்நிலைச் செய்யுளைக் குறிக்க அச்சொல் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று பிற்கால இலக்கண நூல்களும் தொடர்நிலைச் செய்யுளைக் காப்பியம் எனக் கொண்டன. காப்பியம், தொடர்நிலைச் செய்யுள் இவற்றின் இலக்கணம் பற்றித் தொல்காப்பியம் ஒன்றும் குறிப்பிடவில்லை. ஏனெனில் காப்பியம் அதன் காலத்திற்குப் பின்னர் தோன்றியதாகும். காப்பியம் என்பது வடமொழிக் காவியத்தின் திரிபாகும். வடமொழியில், கவியால் செய்த எந்த நூலும் முதலில் காவியம் எனப்பட்டது. நாடகங்களையும்.

சிறு செய்யுட் கோவைகளையும் கூட அவ்வாறு அவர்கள் குறித்தனர். பின்னர் பரந்து கிடக்கும் இலக்கிய வகையை மாத்திரம் அச்சொல் குறித்தது. இதனை மகா காவியம் என்றும், பெருங் காவியம் என்றும் சொல்வர்.

மேனாட்டாரும் பரந்து கிடக்கும் பாட்டு வகையை 'எபிக்' (Epic) என்றனர். கிரேக்க மொழியில் ஓமர் செய்த 'இலியட்', 'ஒடிசி' என்பவற்றை முன்மாதிரியாகக் கொண்டு காப்பியங்களை அளவிட்டனர். அரிச்டாடிலும் இதைத் தொட்டியே பின்வருமாறு காப்பிய இலக்கணம் வகுத்துள்ளார். "காப்பியத்தில் சிறந்த ஒரு பொருள் கதையாக அமைதல் வேண்டும். அது, முதல் இடை கடை நிலைகளை உடையதாய் இருக்க வேண்டும். உறுப்பினர்களைப் பெருமை உடையவர்களாய் அமைத்தல் வேண்டும். கதை அமைப்பிலும் சொல்வதிலும் முன்பின் மாறுபாடு இருத்தல் கூடாது. நிலைபேறுடைய உண்மைகளைச் சொல்ல வேண்டும்."

## ஐம்பெருங்காப்பியங்கள்

இனி தமிழ்க் காப்பியங்களைப்பற்றிக் கூறுவாம்: கற்றுத் துறைபோய அறிஞர்களால் ஐம்பெருங்காப்பியங்கள் எனக் கூறப் பட்டவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பனவாகும். இவ்வைந்து நூல்களையும் ஒருசேரவைத்து ஐம்பெருங் காப்பியங்கள் என்று வழங்கும் வழக்கு எப்பொழுது தமிழ் நாட்டில் ஏற்பட்டதென்று திட்டவட்டமாகத் தெரியவில்லை.

## சிலப்பதிகாரம்

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" ஐம்பெருங் காப்பியங்களிலே காலத்தால் முந்தியது. இக் காப்பியம், சோழ நாட்டிற் பிறந்து, பாண்டிய நாட்டிற்

புகுந்து, கணவனை இழந்து, சேர நாட்டில் நுழைந்து தெய்வமான தமிழ் நாடு பெற்ற தவக் கொழுந்தை, கற்பின் செல்வியை, கண்ணகியை வண்ணத் தமிழால் பாடுவது ஆகும். அத்துடன் அது மூன்று நாட்டையும் இணைத்துக் கூறும் முத்தமிழ்க் காப்பியமாகும். இந்நூல் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூன்று காண்டங்களையும், அவற்றுள்ளடங்கிய மங்கல வாழ்த்து முதல் வரந்தரு காதை ஈறாக உள்ள முப்பது காதைகளையும் உடையது. வெண்பா, அகவல், கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய இயற்றமிழ்ப்பாக்களையும், வரிப் பாடலாகிய இசைப் பாடல்களையும் கொண்டு நாடகப் பேரிலக்கியமாக விளங்கும் ஒரேநூல் சிலப்பதிகாரமாகும். பண்டைத் தமிழரின் பண்பாடு, தமிழர் நாகரிகம், அவர்கள் வளர்த்த அழகுக் கலைகள், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை, அவர்களின் செல்வச் செழிப்பு, அக்காலத் தமிழகத்தின் வளம், தமிழர்கள் பிற நாட்டவரோடு செய்த கடல் வாணிகம், செய்த போர் முதலியவற்றை உள்ளங்கை நெல்லிக்கனி போல விளக்கும் சீரிய நூல் சிலப்பதிகாரமாகும். மேலும் தமிழரின் கலை வளத்தையும் தமிழ் மொழியின் செழுமையையும் அதிற்காணும் சொற்செறிவையும் சிலப்பதிகாரத்திலே காணலாம். இந்நூல் 5108 வரிகளாலாயது.

காப்பிய வரிசையில் முதலிடம் பெறும் இச்சீரிய நூலை இயற்றியவர் தமிழ்ப் பெருவேந்தன் செங்குட்டுவனின் இளவலாகிய இளங்கோவடிகள் ஆவார். இவரது காலம் கி. பி. 200-க்கு உட்பட்டதாகும்.

அடுத்து இந்நூல் நுதலும் கதையைச்சிறிது காண்போம். கோதிலாத் திருவினள் கண்ணகிக்கும் கண்டோர் கொண்டேத்தும் செவ்வேள் கோவலனுக்கும் திருமணம் நடந்தேறியது. காதற்காம அன்பில் சில ஆண்டுகள் அவர்கள் திளைத்திருந்தனர். நாடக நூல் திறம் நன்குணர்ந்த பொற்கொடியாள் மாதவி அரங்கு ஏறினள். பொது அரங்கு ஏறி

கோவலன் தன் மன அரங்கிலும் ஏறினாள். அதனால் கோவலன் விடுதல் அறியாவிருப்பினனாகித் தன் மனையகம் மறந்து மாதவி நல்லாளின் மனையகத்தே உறைந்தான். இந்திர விழா ஊரெங்கும் நடைபெற்றது. கலைஞர்கள் இரு வரும் கடலாடச் சென்றனர். கானல் வரிப்பாணி பாடி மகிழ்ந் தனர். மகிழ்ச்சி அவலக் கவலையைவற நிலையில்கொண்டுசேர்த் தது. கூடிய இரு நெஞ்சங்கள் ஊடிய மனத்தோடு பிரிந்தன. அன்பும், பரிவும் கண்ணகியை, கோவலனது விருப்பத்தை நிறைவு செய்து, இருவரையும் மதுரைக்குக் கொண்டு வந்து சேர்த்தன. மதுரையில் பொற் கொல்லனின் சூழ்ச்சிக்குப் பலியாகி கோவலன் மாண்டான். கண்ணகி பொங்கி எழுந்தாள்; விழுந்தாள்; கோநகர்ச் சீறினாள். கோவலனைக் கொன்ற காவலன் இறந்தான்; கோப்பெருந்தேவியும் உயிர் துறந்தாள். வளைந்த செங்கோல் நிமிர்ந்தது. மதுரை எரிந்தது. கண்ணகி தெய்வமானாள். தெய்வக் கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் சிலை வடித்தான். சிலை யின் கல் இமயத்துக்குச் சொந்தம். கல் சுமந்தவர்கள் வட நாட்டு மன்னர்கள். சிலை வடிவு கொண்ட செந்தமிழ்ப் பெண் தோன்றி வரந்தந்து மறைந்தாள். மக்கள் தொழுது வணங்கினர்.

மேலை நாட்டார் நாடக இலக்கியத்தை இன்பியல், துன்பியல் என இருவகைப் படுத்துவர். அம்முறைப்படி நோக்கின், சிலப்பதிகாரம் துன்பியல் (Tragedy) என்ற நாடக வகையைச் சேர்ந்ததாகும். சிலப்பதிகாரம் நாடகத்திற்கு வேண்டிய இன்றியமையாத சிறப்புக்கள் அத்தனையும் பெரும் பாலும் கொண்டிருப்பதாகும். அதனை விஞ்சாவிடினும் அதனோடு ஒப்பான ஒரு நாடக இலக்கியம் இதுவரை தமிழில் தோன்றாதது ஒன்றே சிலப்பதிகாரத்தின் பெருமைக்கு தக்க சான்றாகும். சுருங்கக் கூறின், இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றமிழையும் இந்நூலிலே காணலாம். நாடக இயலைப் பற்றி இந்நூலின் அரங்கேற்று காதை, ஆய்ச்சியர் குரவை இரண்டும் சில கருத்துக்களைத் தெரிவிக்கின்றன.

இந்நூலின் பிறிதொரு சிறப்பு இடையிடையே உரை நடை விரவி வந்திருப்பதேயாகும். காதைக்குக் காதை, கதை தொடர்பு கொண்டு செல்வது மற்றொரு குறிப்பிடத் தகுந்த சிறப்பாகும். இந்நூலில் இடம் பெற்றுள்ள பல வரிப் பாடல்கள், குரவைப் பாடல்கள், இசைப் பாடல்கள், ஆகிய அனைத்தும் செவிக்கு இன்பம் பயப்பனவாகும். உவகை, அவலம், பெருமிதம் ஆகிய மூன்று சுவைகளுக்கும் உரிய நிலைக்களமாக அந்நூல் விளங்குகின்றது.

சிலப்பதிகாரம் நுதலும் பொருள் மூன்றாகும். அவை யாவன:

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றுவதூஉம் உரை சால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும் ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பதூஉம்" ஆகும். இக் காவியத்தின் தலைவியாகிய கற்புடைச் செல்வி கண்ணகி தன் கணவன் கோவலனுடன் காற்சிலம்பு காரணமாக மதுரை சென்றதும், ஆங்கு கோவலன் கொலையுண்டு இறந்ததும், பாண்டியன் தவறிழைத்த காரணத்தால் உயிர் நீங்கியதும், அது கண்டு அவனது மனைவி கோப்பெருந்தேவி மாண்டதும், மதுரை எரியால் அழிந்ததும், கண்ணகி விண்ணகம் சேர்ந்ததும் ஆகியஅத்தனையும் நிகழ்ந்தனவாதலால் ஆசிரியர் இதற்குச் சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம் எனப் பெயர் சூட்டினார்.

மேலை நாட்டுப் புலவர் மாத்யூ அர்னால்டு என்பவர் இலக்கியம் என்பது உணர்ச்சி வெள்ளத்தின் இருப்பிடம் என்கிறார். அதனை மனையறம் படுத்த காதையில் கண்ணகியை நோக்கிக் கோவலன் கூறுகின்ற,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ"

ஆகிய வரிகளிலே உணரலாம். ஒவ்வொரு சொல்லும் கோவலனது உணர்ச்சி வெள்ளத்திலே மிதப்பதாகும். இது மட்டுமன்று. அங்கங்கே காணப்படும் மலைவருணனை, காலை மாலை வருணனைகள், சோலை வருணனை, ஆற்று வருணனை முதலியவை கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிப்பன வாகும். இனி அவற்றைக் காண்போம். சேய்மையில் தோன்றும் சேரநாட்டு மலைகளின் நிறம் நீலமாய் நெடிய திருமாலைப் போல் விளங்க, ஒன்றன் மேல் ஒன்றாய், படிப்படியாய் உயர்ந்து நிற்கின்ற முகட்டிலே தோன்றி குறுக்காக ஓடிவரும் பேரியாறு மாலின் மார்பில் குறுக்கே கிடந்து அணி செய்யும் முத்து மாலையைப்போல் காட்சிதர, அவ்வாற்றின் இரு கரைகளிலும் கோங்கம், வேங்கை, கொன்றை, நாகம், திலகம் முதலிய மரங்கள்நிரம்பப் பூத்து உதிர்த்தபூக்கள் ஆற்றின் நீர்வெளியைத் தெரியாதபடி மூடிவிடுகின்றன, இக்கண்ணுக்கு இனிய காட்சியினை நம் கவிஞர்,

"கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை
நாகந் திலக நறுங்கா ழாரம்
உதிர்பூம் பரப்பி னொழுகுபுன லொளித்து
மதுகர ஞிமிறொடு வண்டினம் பாட
நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாறு"

என்று கற்பார் பாராட்டும் வண்ணம் பாடியுள்ளார்.

ஆசிரியரது காலை மாலை வருணனைகள் படிக்கப் படிக்கத் தெவிட்டா இன்பம் பயப்பனவாகும். அலைகடலை ஆடையாகவும், மலையை மார்பாகவும், மேகங்களைக் கூந்தலாகவும் ஆறுகளை முத்து மாலைகளாகவும், இருளைப் போர்வையாகவும் கொண்டு உறங்கும் நிலமாகிய செல்வமகளை, போர்வை அகலுமாறு தன் கதிர்களாகிய கைகளால் நீக்கி ஞாயிற்றுச் செல்வன் கண்டான் என்று கூறவந்த ஆசிரியர்,

"அலைநீ ராடை மலைமுலை யாகத்
தாரப் பேரியாற்று மாரிக் கூந்தற்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதையிருட் படாஅம் போக நீக்கி
உதைய மால்வரை யுச்சித் தோன்றி
உலகுவிளங் கவிரொளி மலர்கதிர் பரப்பி"

என்று பாடியிருக்கும் பகுதியும், மனத்திற்கு மகிழ்ச்சியூட்டும் மாலைக் காட்சிகளை,

"குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத
அறுகாற் குறும்பெறிந் தரும்புபொதி வாசம்
சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற
எல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப
மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தது"

என்று கூறியிருப்பதுவும் படித்து இன்புறுதற்குரியனவாகும்.

"சீரிய கருத்துக்களின் தொகுதியே இலக்கியம்" என்பது எமர்சன் என்பவர் கருத்தாகும். இதன்படி பார்ப்பின் சிலப்பதிகாரம் பல அரும் பெரும் கருத்துக்கள் உடைய நூலாகும். ஒவ்வொரு கருத்தும் நம்மை நன்னெறிப் படுத்தும் பொன்னனைய கருத்தாகும். பொன் எழுத்துக்களால் பொறித்து வைக்கப்பட வேண்டிய கருத்துக்கள் சிலம்பில் நிறைய உள. சில வருமாறு:

"பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் டுறமி னுயிர்க்கொலை நீங்குமின்,"

இத்தகைய தலைசிறந்த காப்பியத்தின் நலன்களை நுகர்வது தமிழர்தம் தலையாய கடமையாகும். இதனோடு தொடர்புடைய பிறிதொரு தலை சிறந்த காப்பியம் மணிமேகலையாகும். அதனை அடுத்து ஆராய்வோம்.

## மணிமேகலை

சிலப்பதிகார காலத்தை ஒட்டித் தோன்றிய நூல் மணிமேகலையாகும். இது கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிப் பூங்கொடியாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறுகிறது. மணிமேகலை மாபெரும் பத்தினி மகளாவாள்; அவள் ஊழ் தருதவத்தள்; சாபசரத்தி; காமற் கடந்த வாய்மையள்; கற்பின் கொழுந்து; பொற்பின் செல்வி. மேலும் அவள் அன்ன நடையினள்; மயிலின் சாயலள்; பண்ணுங்கிளியும் பழித்த தீஞ்சொலாள். இத்தகைய பெண்மையும் விரும்பிப் போற்றும் பேரழகு மிக்க மணிமேகலை பூண்ட துறவினைப் பற்றி இந்நூல் கூறுவதால் இதனை "மணிமேகலை துறவு" எனக் கூறுவாருமுளர். பண்பால் இந்நூல் சிலப்பதிகாரத்திற்கு இணையகுடமாக விளங்குகின்றது, இரு காப்பியங்களும் ஒரே இணை காப்பியம் என்று தமிழ் மரபு கருதுகிறது. அம்முறையிலே சிலம்பு அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலுக்கும், மேகலை மூன்றும் அடக்கிய முழுப் பாலாகிய வீட்டுப் பாலுக்கும் உரியதெனக் கொள்பவரும் உண்டு. எனவேதான் இரண்டினையும் "இரட்டைக் காப்பியங்கள்" என்று நாம் வழங்கி வருகிறோம். சிலப்பதிகாரத்தில் காணப்படும் முக்காண்டப் பாகுபாடு இக்காப்பியத்தில் இல்லையெனினும் சிலம்பைப் போலவே முப்பது காதைகளில் தன் கதையை விரித்துச்

செல்லுகிறது. காதைக்குக் காதை கதைத் தொடர்பு நெறியே செல்லுகிறது. இந்நூல் ஆசிரிய நடையாற் செல்வது. 4626 வரிகளால் ஆயது. இதன் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவார். இவரின் சொந்த ஊர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சீத்தலை; இவர் மதுரையம் பதியிலே கூலவாணிகம் செய்தார். எனினும் இவர் தமிழில் பழுத்த புலமையும், புத்த சமயத்தில் ஆழ்ந்த பற்றும் உடையவர். எனவே கடைச் சங்கப் புலவர்களில் ஒருவராய் இவர் விளங்கியதில் வியப்பொன்று மில்லை. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஒரே காலத்தில் எழுந்தன என்பது ஒரு சிலர் கருத்து; மற்றுஞ் சிலர் இரண்டும் வெவ்வேறு காலத்தைச் சேர்ந்தவை என்பர். ஆனால் பின்வரும் பதிகங்களின் துணை கொண்டு சாத்தனாரும் இளங்கோவடிகளும் ஒரே காலத்தவர் எனக் கூறலாம்.

"இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ட
வளங் கெழு கூல வாணிகன் சாத்தன்
ஆறைம் பாட்டில் அறிய வைத்தான்".

(மணிமேகலை)

"இவ் வாறைந்தும்
உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசா லடிக ளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்."

(சிலம்பு)

சிலப்பதிகாரம் பலவகைப் பாவும் இசையும் கலந்த இன்பம் பயக்கும் நூலாகும். மணிமேகலையோ அகவலால் ஆனது. அது மட்டுமன்று; நூல் முழுதும் சமயக் கருத்துக்களே நிறைந்துள்ளன; சமயப் பிரசாரமே நூலின் முழு நோக்கமாகத் தெரிகிறது. எனவே பிற சமயத்தார் நூலைப் படிக்கப் போதிய விருப்பங் கொள்ளார். ஆனால் இந் நூலி

றுள் நாம் புகுந்தால் அறமே வடிவாய்த்திகழும் அறவண அடிகளையும், தன் மகளுடைய நல்வாழ்விற்கு அடிகோலிய மங்கை நல்லாள் மாதவியையும், உணர்வுக்கும் அழகுக்கும் முதலில் அடிமையாகிப் பின் திருந்தி மக்களுக்கு அறிவுரை பகரும் நங்கை சுதமதியையும், ஐயக் கடிஞை கையிலேந்தி ஆற்ரு மாக்கள் அரும்பசி களைந்த பசிப்பிணி மருத்துவன் ஆபுத்திரனையும், ஆண்மையும் அழகும் கொண்டு, காமத்துக்கு அடிமையாகி, அறம் பிறழ்ந்து மடிந்த உதய குமாரனையும், மகன் என்னும் காரணத்தால் உதய குமாரனிடம் கொண்ட அன்பால் மணிமேகலையைக் கொடுமைப் படுத்திப் பின் திருந்திய அரசமாதேவியையும், செங்கோல் திறம்பா மாவண் கிள்ளியையும், பெண்மையைப் போற்றும் இளங்கிள்ளியை யும், கற்புத் தெய்வம் கண்ணகியை ஒத்த கற்பின் செல்வி ஆதிரையையும், விலங்கு வாழ்வு வாழ்ந்து வந்த மக்களை மக்களாக வாழச் செய்த செம்மல் சாதுவனையும், குறுகிய உள்ளம் கொண்ட சித்ராபதியையும் காணலாம். இவற்றிற் கெல்லாம் மேலாய் வற்ருது வளம் சொரிந்த அமுதசுரபி யினை மலர்க் கையில் ஏந்தி மனைதோறும் புகுந்து புனையா ஓவியம் போல நின்று பிச்சை ஏற்று, காணர், கேளார், கால் முடமாஞேர், பேசார், பேணு மக்கள், படிவ நோன்பியர், பசி நோயுற்ருர், பிணித்தோர் ஆகிய அனைவருடைய பசிப் பிணியையும் தீர்த்து, சிறைக் கோட்டத்தை அறக் கோட்ட மாக்கி, அன்புக்கும் அருளுக்கும் அமைதிக்கும் நிலைக்களமாக விளங்கும், பற்றறுத்து நற்றவம் புரிந்த நங்கை நல்லாளாகிய மணிமேகலையைக் காணலாம். மணிமேகலை நூலின் சிறப்பைப் பற்றித் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள், "மணி மேகலை சொல்லெலாம் அறம்; பொருளெலாம் அறம்; மணி மேகலை நாடெலாம் அறம்; காடெலாம் அறம். புத்தர் பெரு மானைத் தமிழிற் காட்டும் ஒரு மணி நிலையம் மணிமேகலை" எனக் கூறியுள்ளார்.

இலக்கியம் என்பது உள்ளத்து உணர்ச்சியைச் சொற் களால் தீட்டுவது என்பர் பேராசிரியர் மு. வரதராசஞர்.

அவலச் சுவையினை அடிப்படையாகக் கொண்டு தமது காப்பியத்தைப் பாடிய சாத்தனார் தமது நூலில் பல இடங்களில் இயற்கையின் எழிலைச் சொற்களால் என்றென்றும் அழியாத வண்ணம் ஓவியமாகத் தீட்டியுள்ளார். ஓரிடத்தில் இவர் ஒரு நடன அரங்கை அழகுடன் அமைத்துக் காட்டுகிறார். நாட்டியம் நடைபெறும் இடம் பூத்துக் கொழிக்கும் ஓர் அழகிய பூம்பொழில். தும்பி குழலின் இசையைப் பொருத்திக் காட்ட, இளைய வண்டினங்கள் நல்ல யாழின் இசையை முரலுகின்றன. இப்பொழிலுக்கு எதிரே வெயிலும் நுழையாத அடர்ந்த ஓர் இளமரக்கா. இயற்கையின் எழிலிலும் இசையின் இன்பத்திலும் தன் உள்ளத்தைப் பறி கொடுத்த மயிலொன்று தன்னை மறந்து அரங்கேறி ஆடி நின்றது. இந் நடனக் காட்சியை மந்திகள் கண்டு மகிழ்ந்தன. இதனைப் புலவர்,

"பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழிற்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்
மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்"

என்று கற்போர் நெஞ்சைக் கவரும் வண்ணம் பாடியுள்ளார்.

உவமை அணி, அணிகளிற் சிறந்ததும் தலையாயதும் ஆகும் என்பது நாமறிந்ததே. சாத்தனார் சிறந்த உவமைகளின் வாயிலாக தமது கருத்துக்களை நன்கு வெளியிட்டுள்ளார். அந்தி மாலைக் காட்சியைக் கூற வந்த அவர்,

"அமரக மருங்கிற் கணவனை யிழந்து
தமரகம் புகூஉ மொருமகள் போலக்
கதிராற்றுப் படுத்த முதிராத் துன்பமோ
டந்தி யென்னும் பசலைமெய் யாட்டி
வந்திறுத் தனளால்"

எனச் சிறந்ததொரு உவமையைக் கையாண்டு அருமையாக அதனை வருணித்துள்ளார்.

இலக்கியம் அழகினை வடித்துக் காட்ட வேண்டும் என்பது பலரது கருத்தாகும். அதற்குத் துணை புரிபவை சுருங்கச் சொல்லல் (Conciseness of Expression), நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல் (Felicity of Expression), ஆழமுடைத் தாதல் (Pregnany of Ideas) முதலிய பத்து அழகுகளாகும். சிறப்பாகச் செறிவுடைமை, வண்ணம் (Rhythm), எளிமை, ஒலிநயம் (Euphony) ஆகியவற்றையும் கூறலாம். இவற்றுள் வண்ணம் என்பது இருபது வகைப்படும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். பெரெட் யெங் (Brett Young) என்பவர் "வண்ணம் என்பது விளக்கப்படுவது அல்ல; உணரப் படுவதே" என்று சொல்லி உள்ளார். ஒலி நயம் செவிக்கு இனிமையைக் கொடுக்கும். அதற்கு ஓர் உதாரணம் காட்டு வாம். பித்தன் ஒருவனைப் பற்றி மணிமேகலை ஆசிரியர் நய மாகப் பாடியுள்ளார் அது வருமாறு :

"அழூஉம் விழூஉ மரற்றுங் கூஉம்
தொழூஉ மெழூஉஞ் சுழலலுஞ் சுழலும்
ஓடலு மோடு மொருசிறை யொதுங்கி
நீடலு நீடு நிழலொடு மறலு !"

இதை வாய்விட்டு ஒருமுறை படியுங்கள். ஒலி இன்பத்தைக் கேட்டு மகிழலாம்.

மேலும் மணிமேகலை ஆசிரியரது நடை எளிய, இனிய, தெளிய நடையாய் உள்ளது. எவ்வித இடர்ப்பாடுமின்றி கற்போர்க்கு எளிதாக இதன் நடை அமைந்துள்ளது. எடுத் துக்காட்டாக,

"சுதமதி யொளித்தாய் துயரஞ் செய்தனை
நனவோ கனவோ வென்பதை யறியேன்
மனநடுக் குறூஉ மாற்றந் தாராய்"

எனத் தொடங்கி,

"ஒருதனி யஞ்சுவென் றிருவே வா"

என முடியும் பகுதியைச் சொல்லலாம், இந்நூலின்கண் சொல்லழகும், பொருளழகும் நிறைந்து நிற்பது கண்கூடு. மணிமேகலையின் அழகை உரைக்க வந்த ஆசிரியர்,

"படையிட்டு நடுங்குங் காமன் பாவையை
ஆடவர் கண்டா லகறலு முண்டோ
பேடிய ரன்றோ பெற்றியி னின்றிடின்"

என்கிறார்,

"சிறையு முண்டோ செழும்புனன் மிக்குழீஇ
நிறையு முண்டோ காமம் காழ்க்கொளிற்"

என்பது பொருட் செறிவுக்கு ஒரு சிறு சான்றாகும்.

"ஒப்பற்ற தத்துவப் பேரறிஞனாக இல்லாத ஒருவன் சிறந்த கவிஞனாக இருந்ததில்லை" என்பது கோலரிட்சின் மொழியாகும். அதற்கு இலக்கியமாக நாம் காட்டக் கூடிய புலவர் சாத்தனாரே என்னலாம். சாத்தனாரின் மெய்யுணர்வுப் புலமையை 27, 29, 30, ஆகிய மூன்று காதைகள் தெள்ளிதின் காட்ட வல்லனவாம். அவற்றின் மூலம் சாத்தனாரது பிற சமயப் புலமையும், புத்த சமயத்தில் அவர் கொண்ட வித்தகத் தன்மையும் நன்கு புலனாகும்.

சில எடுத்துக் காட்டுக்கள் வருமாறு:

"அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ."

"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்க ளரும் பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே."

மணிமேகலையின் முழுமுதற் கொள்கை பசிப் பிணியை வேரோடு களைந்து எறிவதே ஆகும்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறு பகையும்
சேரா தியல்வது நாடு"

என்ற வள்ளுவரின் கருத்து சாத்தனரால் அவர் தம் நூலில்,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி"

என்று வலியுறுத்தப் படுகிறது. இதற்குத் துணையாக அமுத சுரபியின் அறிமுகம் பயன்படுகிறது. மணிமேகலையில் கதைத் தலைவி மணிமேகலைக்கு அடுத்தபடியாக சிறப்பிடம் பெறுவது அமுத சுரபியே யாகும். பரந்தநோக்கோடு உரைப்போமே யானல் மணிமேகலைக் காப்பியத்தின் சிறப்பிற்கு அமுத சுரபியே காரணம் எனலாம். அமுதசுரபி பற்றிய நிகழ்ச்சி கற்பனையே எனினும் அது கருத்தாழம் மிக்க ஒன்று; கவிஞன் கண்ட கனவுலகு. அவ் அமுத சுரபியைக் கொண்டு சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக்கிக் காட்டுகிறார் கவிஞர். அடுத்ததாக மணிமேகலை கூறும் கொள்கை தனக்கென வாழா பிறர்க்குரியாளனாகிய புத்த தேவனின் அருள் மொழிகளின் சிறப்பை எடுத்துக் கூறுவதே. சமயச் சொற்களுக்கெல்லாம் நல்ல தமிழ்ச் சொற்களைப் பெய்து தமிழின் ஆற்றலைப் புலப் படுத்திய பெருமை சாத்தனருக்கு உரியது.

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோ ருறுவது அறிக"

என்று பௌத்த சமயக் கொள்கை அந்நூலில் நன்கு வலியுறுத்தப் பட்டுள்ளது. படிக்கவும் சுவைக்கவும் நயனும் பயனும் அளிக்கும் இக்காப்பியத்தின் சிறப்பை கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாசர்,

"மந்தா கினியணி வேணிப் பிரான்வெங்கை மன்னவ நீ
கொந்தார் குழன்மணி மேகலை நூனுட்பம்"

என்று போற்றியுள்ளார்.

**சிந்தாமணி**

இஃது ஒரு சமணசமயக் காப்பியம். செந்தமிழ் மொழியிற் சிறந்து விளங்கும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாக விளங்கும் இது, பழைய உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ள சிறந்த நூல்களுள் ஒன்று. வடமொழி வான்மீகி இராமாயணம் போல் எல்லா வருணனைகளும் இதன்பால் அமையப் பெற்றிருப்பதாலும், பிற்காலத்தில் தோன்றிய தமிழ்க் காப்பியங்கள் பலவற்றிற்கும் வழிகாட்டியாய் விளங்குவதாலும் இதனை அறிஞர்கள் பெருங்காப்பியம் எனக் கொண்டனர்.

சிந்தித்த பொருள்களை அளிக்க வல்லதும் வானுலகத்தில் உள்ளதுமாகிய சிந்தாமணிபோல சைனர் வேண்டிய பொருள்களை வேண்டியாங்கு இந்நூலால் பெறுவர் என்பதனால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூல் ஏமாங்கத நாட்டு மன்னனாகிய சீவகனது பிறப்பு முதல் வீடு பேறு இறுதியாகவுள்ள முழு வரலாற்றைக் கூறுகிறது.

இதற்கு மணநூல் என்றொரு பெயருண்டு. 3145 செய்யுட்களைக் கொண்ட இப்பெருநூல் நாமகள் இலம்பகம் முதலாக முத்தி இலம்பகம் ஈறாகப் பதின்மூன்று பிரிவுகளையுடையது. இவற்றுள் 3, 4, 5, 6, 7, 8, 9, 12 ஆகிய இலம்பகங்களில் சீவகன் காந்தருவதத்தை, குணமாலை, பதுமை,

கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எண்மரைத் தனித்தனியே மணந்து கொண்ட செய்திகளும், 2ம் இலம்பகத்தில் கோவிந்தை என்ற ஆயர்குல மங்கையைச் சீவகன் தன் நண்பனுகிய பதுமுகனுக்கு மணம் புரிவித்த செய்தியும் கூறப்பட்டிருப்பதாலும், 1, 10, 11, 13-ஆம் இலம்பகங்களினும் சீவகன் முறையே நாமகள், மண்மகள், பூமகள், முத்தி மகள் என்னும் இவர்களை மணந்து கொண்டதாகவே உருவகித்திருப்பதாலும் இந்நூல் மண நூல் என்று வழங்கப்படுகின்றது. மேலும் பத்து வகை மணப்பையும், ஒன்பான் சுவையையும் சிறப்பாக இன்பச் சுவையையும் இந்நூல் கொண்டு விளங்குவதால் இந்நூலை மண நூல் என்று கூறுவது சாலப் பொருந்தும்.

சிந்தாமணியை எழுதியவர் திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவர் ஆவார். எனவேதான் சமண சமயக் கருத்துக்கள் பல இந்நூலில் தெளிக்கப்பட்டுள்ளன: இந்நூலின் காலத்தைப் பற்றி ஆராய்ந்த அறிஞர் பெரு மக்கள் இதற்கு ஒன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தை முன் எல்லையாகவும் பத்தாம் நூற்றுண்டினைப் பின் எல்லையாகவும் கூறியுள்ளனர். தனித் தமிழ் நடையில் இயங்கும் சங்க இலக்கியங்கள், காலப்போக்கில் அயலவர் படையெடுப்புக்களினுல் எல்லாத் துறைகளிலும் நிகழ்ந்த மாறுதல்களின் காரணமாய் பிற்காலத் தமிழ்மக்களுக்கு எட்டாத தூரத்தில் போய்க் கொண்டிருந்தன. எனவே மக்களுக்கு நன்கு புரியவல்ல புதுமையான இலக்கியமொன்று தேவைப்பட்டது. அச் சூழ்நிலையில் தோன்றிய முதற் பெருநூல் சீவக சிந்தாமணியாகும். "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்பதற்கு இலக்கியம் சீவக சிந்தாமணியே. இத்தகு நூலுக்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர் உரை செய்துள்ளார்.

இந்நூல் காப்பியச் சுவை பல நிரம்பி விளங்குவதாகும். கற்றவர் உள்ளங்களைக் களிப்பிக்கும் தன்மை உடையது.

செஞ்சொற் கவிதைகளாலாய சிந்தாமணியில் தமிழின் செவ்வு சுவை அனைத்தையும் காணலாம். கவியரசராகிய கம்பர் செவிக்கினிய சிந்தாமணிச் சொற்களை அப்படியே பெயர்த்து எடுத்தமைத்தும், அந்நூலில் காணும் அழகுச் சித்திரங் களைச் சிதையாது எழுதியமைத்தும் தமது காவியத்தை எழுதியிருப்ப தொன்றே இந்நூலின் சிறப்பை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது. சுருங்கக் கூறின் கம்ப இராமா யணத்திற்கும், பெரிய புராணத்திற்கும் வித்து சிந்தா மணியிலே தான் உள்ளது. விருத்தப்பாவிற்கு வித்தூன்றிய வித்தகர் திருத்தக்கத் தேவர் ஆவார். உரையாசிரியர்களால் பெரிதும் பாராட்டப் பட்ட நூல் சிந்தாமணி. விருத்தப் பாவால் தொடர்நிலைச் செய்யுளாக முதன் முதல் பெருங் காவியமியற்றிய பெருமை திருத்தக்கதேவரையே சாரும். தனக்கு முன்னர் தோன்றிய நூல்களைத் தன்னகத்தே கொண்டு பின்வந்த நூல்களின் கருவாய் விளங்கும் இப் பெருங் காவியத்தைப் பாடிய தேவரை தமிழிலக்கிய வரலாற்றில் காவிய காலத்திற்கு கால்கோள் விழாச் செய்த கவிஞர் எனக் கொள்ளவேண்டும்.

பண்டைப் பாவலர்தம் பளிங்கு நடைபயின்று இளகி ஒளிரும் வெண் பொன் ஒழுக்கும், திண்மையும் நுண்மையும் செறிந்த சிந்தாமணியின் நடை பளிங்குத் தரையிற் செல்லும் பன்னீர் போல ஒழுகிச் செல்கிறது. நாட்டு வருணனை, நகர் வருணனை, கடல் வருணனை, மலை வருணனை, முதலிய வருணனைகள் வித்தகர் திருத்தக்கதேவரின் கவிதை யின் ஆழத்தையும் கற்பனையின் செறிவையும், தமிழ் நூற் புலமையையும், தமிழின் நீர்மையையும் நமக்குத் தெற் றெனக் காட்டுகின்றன:

"செல்வர் மனத்தி னோங்கித் திருவின் மாந்தர் நெஞ்சி
னெல்லை யிருளிற் றாகிப் பூந்தா தினிதி னொழுகிச்

கொல்லு மரவின் மயங்கிச் சிறியார் கொண்ட
தொடர்பிற்
செல்லச் செல்ல வஃகு நெறிசேர் சிலம்பு சேர்ந்தான்"

என்னும் கவிதை தேவரின் கவிவினை, கைவினை முதிர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

**வளையாபதி**

இந்நூல் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகக் கூறப்படுகின்றது. இது குண்டலகேசியைப் போன்றே முற்றிலும் கிடைத்திலது. உரைகளில் மேற்கோளாகக் காட்டப்பட்ட சில பாடல்களைப் புறத்திரட்டில் காணலாம். ஒரு சாரார் இதனைப் பௌத்த நூல் என்றும், மற்றொரு சாரார் இதனைச் சமண நூல் என்றும் கூறுவர். புறத்திரட்டில் காணப்பெறும் இதனது பாடல்கள் அனைத்தும் சிறந்த அறங்களைப் பற்றியே பேசுகின்றன. இதோ ஒரு செய்யுள்!

"பொறையிலா வறிவு போகப் புணர்விலா விளமை மேவத்
துறையிலா வனச வாவி துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னர்ச்
சிறையிலா நகரம் போலுஞ் சேயிலாச் செல்வ மன்றே."

புறத்திரட்டில் காணப்படும் இதனது செய்யுட்களின் எண்ணிக்கை 66 ஆகும். யாப்பருங்கலம் என்னும் நூலின் உரையிலும் இரண்டு பாடல்கள் காணப்படுகின்றன. விருத்தப் பாவால் ஆய இக்காவியத்தின் நலன்களை ஒட்டக்கூத்தர் என்னும் புலவர்பெருமான் மிகவும் பாராட்டியுள்ளார் என்று தக்கயாகப் பரணி கூறுகின்றது. சிலப்பதிகார உரையிலும் இதனது பாடற் பகுதிகளைக் காணலாம். பிற ஆசிரியர்களைப் போன்றே இவ்வாசிரியரும் திருக்குறளினை அப்படியே தமது நூலில் கையாண்டுள்ளார் என்பதற்குப் பின்வரும் பாடலை உதாரணமாகக் காட்டலாம்.

“மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகையிவை யுள்வழிப்
பற்றா வினைபாப் பலபல யோனிகள்
அற்றா யுழலு மறுத்தற் கரிதே.”

இப்பாடலில் முதலிரண்டடிகள் திருக்குறள் அடிகளாகும். இந்நூல் கூறும் கதையை நன்கு நம்மால் அறிய முடியவில்லை. ஆனால் புரட்சிக் கவி பாரதிதாசன் ஒரு சில செய்திகளைக் கருவாகக் கொண்டு திரைப் படத்திற்கு வளையாபதிக் கதையை எழுதித் தந்துள்ளார். இந்நூல் கி. பி. 10-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் எழுதப் பட்டது என்பர்.

**குண்டலகேசி**

குண்டலகேசி என்னும் நூல் பௌத்த சமய நூல்களில் ஒன்றாகும். இன்று இந்நூல் கிடைக்கப் பெறவில்லை; இறந்தொழிந்தது. இந்நூலாசிரியர் நாத குப்தா என்பவர் ஆவார். இந்நூலிற்கு மறுப்பாக எழுதப்பட்ட சமண காவியமாகிய 'நீலகேசித்தெருட்டு குண்டலகேசிக் கதையினைப் பின் வருமாறு' கூறுகிறது.

“குண்டலகேசி என்பாள் ஒரு வைசிய கன்னிகை: இவள் ஒரு நாள் பிராசாத தலத்து விளையாடுகின்றாளாக, ஒரு வைசிய புத்திரன், காளான் என்பான் பௌத்த தரிசனம் கொண்டு, பல வழியும் சோர விருத்தி பண்ணிச் செல்வானை, அரசன் வதிக்க வென்றேவிச் சிறைப் பட்டுப் போகின்றானை, முன் சொன்ன குண்டலகேசி கண்டு காம பரவசையாக, அதனையறிந்து அவளுடைய பிதா ராஜாவைக் கண்டு யாதானும் ஓர் உபாயத்தால் மீட்டு இவனுக்குக் குண்டலகேசி யென்னும் கன்னியினை விவாக விதியாற் கொடுத்து இனிது செல்கின்ற காலத்து ஒரு நாள் பிரளய கலகத்து நர்மோக்தி முகத்தால் நீ கள்வனன்றோ என்று குண்டலகேசி சொல்லக் காளானும், தன்னுள்ளத்தே சினங் கொண்டு பின்பொருநாள் வித்தியாசாத வியாசத்தால்

இவனைத் தனிக் கொண்டு ஒரு பர்வதத் தேறி. "நீ என்னை யிவ்வாறு சொல்லுதலில் யானுன்னைக் கொல்லத் துணிந் தேன்" என, குண்டலகேசியும், "தற்கொல்வியை முற் கொல்லி யென்பதன்றே. இவனை யான் கொல்வேன்" என நினைத்து, "யான் சாகிறேனாகி நும்மை வலங்கொண்டு சாவல்" என, அதற்கிசைந்த காளானை வலங் கொள்கின்றாள்: வரையி னின்றும் வீழ நூக்கினாள். நூக்கக் காளானும் புத்தஸ்மரணத் தால் மோட்சித்தனன். குண்டலகேசியும் பர்த்ரு விரகத்துக் கொரியாமெத் துறப்பன் என நினைத்து பரசமயங்கள் எல்லாம் நாவல் நாட்டு சபித்துப் பௌத்தர் கணம் கொண்டு முத்தி பெற்றனள்". இப்பகுதி திரு சக்கரவர்த்தி நயினார் பதிப்பித்த நீலகேசியில் உள்ளது. இது மணிப்பிரவாள நடையிலானது.

வீர சோழிய உரையாசிரியர் குண்டலகேசி நூலை அகலக் கவி என்று குறிப்பிட்டுள்ளார். இன்று புறத்திரட்டு என் னும் நூலில் இந்நூலினது 19 பாடல்கள் காணப்படுகின்றன. நீலகேசி உரையிலும் 25 முழுப் பாடல்களும், 180 பாடல் களின் பகுதிகளும் ஆங்காங்கு மேற்கோளாக எடுத்தாளப் படுகின்றன.

## ஐஞ்சிறு காப்பியங்கள்

தமிழிலே வழங்கி வருகின்ற தொடர் நிலைச்செய்யுள் நூல்களைப் பெருங்காப்பியம், சிறு காப்பியம் என்று அறிஞர் கள் வகைப்படுத்துவர். சிறுகாப்பியம் என்ற நூல் வகைக் குள் அடங்குவன நீலகேசி, சூளாமணி, யசோதர காவியம், உதயண குமார காவியம், நாக குமார காவியம் என்ற ஐந்து காவியங்களாகும். இவற்றுள் உதயண குமார காவியம் காப்பிய இலக்கணங்களை உடையதன்று; நாக குமார காவி யம், யசோதர காவியம் என்ற இரண்டும் உதயண குமார காவியத்தைப் போன்றே பெயரளவிலேதான் காப்பியமாக வழங்குகின்றன. நீலகேசி என்ற நூலோ சிறந்ததொரு

தர்க்க நூலாகும். சூளாமணி ஒன்றினைத்தான் சிறந்த காப்பியம் என்று கூறலாம். ஆனால் எப்படியோ இவ்வைந்து நூல்களும் மக்களால் ஒருசேரவைத்து எண்ணப்படும் ஐஞ்சிறு காப்பியங்கள் என்று வழங்கப்பட்டன. ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும் சமண நூல்களே. இவ்வாறே தான் ஐம்பெருங்காப்பிய வழக்கும் எழுந்திருக்க வேண்டும்.

# 5. பாரோர் கண்டிலாப் பாரி வள்ளல்

## பாரியின் சிறப்பு

பாரி என்பான், அமிழ்தினுமினிய தமிழ் மொழி வழங்கும் தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தே பெரும் புகழ் பெற்று விளங்கி வரையாது வழங்கிய வள்ளல்கள் எழுவருள் தலைமைவாய்ந்தவன். 'வேள்' என்னும் பட்டம் பெற்ற உழுதுவித் துண்போர் வகையினன். முக்கனி விளையும் முந்நூறு ஊர்களையுடைய பறம்பு நாட்டிற்கும், மலைக்கும் தலைவன். இப் பறம்பு பாண்டிய நாட்டைச்சேர்ந்தது ஆகும் இவ்வுண்மை "வரிசைத் தமிழ் புனை பாரியும் பாண்டியன் மண்டலமே" என்னும் பாண்டி மண்டல சதகச் செய்யுளால் புலப்படுகிறது. இப்பாரி நிழலில்லாத நீண்ட வழியில் தனி மரம் போல நின்று முந்நூறு ஊரையும் மற்றைப் பொருள்கள் எல்லாவற்றையும் பாவலர்க்கும் நாவலர்க்கும் வழங்கி வரையா வள்ளன்மையால் இவ்வையகம் முழுதும் தன் புகழ் பரக்க இருந்தவன். இவனது வரையா வன்மை, "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப் பாரிலை" என்று சிவனைத்தவிர வேறு கடவுளரைப்பாடுவது பாவம் என்ற கொள்கையைக் கொண்ட நாவீறு படைத்த நால்வரில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாராலும் குறிப்பிடப் பட்டுள்ளது என்பதொன்றே இவனது வள்ளன்மையைத் தெள்ளிதிற் புலப் படுத்தும். மேலும் சில தனிப் பாடல்களும் பாரியைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. உள்ளத்தினைக் கிளறி உணர்ச்சியை ஊட்ட வல்ல பாடல்கள் நிறைந்த சங்க இலக்கியத்துச் சிறந்த புலவர்களில் ஒருவரும் சங்க இலக்கியத்தில் மிகுதியாகப் பாடல்களைப் பாடியவரும் பாரிக்காகவே வாழ்ந்து உயிர் நீத்தவருமாகிய கபிலராலும் அதியமானையே பாடி அளப் பெரும்புகழ் பெற்ற நல்லிசை வாய்ந்த சொல்லிசை மெல்லியராகிய ஔவையாராலும்,

சமயத்துறையில் ஈடுபட்ட சங்க இலக்கியப் புலவர்களில் தலை சிறந்தவராகிய நக்கீரராலும் பாரியானவன் பாடப் பெற்றுள் ளான். ஆனால் இற்றைத் தமிழ் நாட்டில் பாரியின் பெயர் தெரியாமலிருப்பது மிகவும் வருந்தத் தக்கதே. இதற்குக் காரணம், ஒன்று பாரியைப் பற்றிய தனிப்பட்ட இலக்கியம் இல்லாமையும், மற்றொன்று சங்க இலக்கியம் படிக்கத் தொடர்பற்றுப் போனதும் ஆகும்.

## பாரியும் பறம்புப் போரும்

இனி நாவீறு படைத்த நக்கீரர் பாடியுள்ளதைக் கொண்டு, பாரியின் வரலாற்றின் ஒரு பகுதியைப் பகர்வாம். நக்கீரர் பாரியின் வள்ளன்மையைக் "கைவண் பாரி" என்ற ஒரு தொடராலேயே நன்கு எடுத்துக் கூறியுள்ளார். மேலும் அவர் பாரியின் வீரத்தைப் பற்றியும் நன்கு விரித்துரைத் துள்ளார். பாரியும் மூவேந்தரும் இயற்றிய பறம்புப் போரைப் பற்றிக் கூறுமிடத்து பாரியின் போர் வன்மையை "வேந்தர் ஓட்டிய பாரி" என்று குறிப்பிடுகின்றார். இங்கு வேந்தர் என்ற சொல்லை நோக்க வேண்டும். தமிழ் நாட்டில் 'வேந்தர்' என்ற சொல், சேர சோழ பாண்டியரென்ற முடியுடை மூவேந்தரைத்தான் குறிக்கும். இலக்கியங்களும் அதையேதான் குறிப்பிடுகின்றன. போர் எவ்வளவு நாள் நடந்ததென்பதை ஒருவரும் திட்டவட்டமாக வரையறுத் துக் கூறவில்லை. "யாண்டு பல கழியினும்" என்று நக்கீரர் குறிப்பிடுவதிலிருந்து போர் நீண்டகாலம் நடைபெற்றிருக்க வேண்டும் என்பதை நம்மால் அறிய முடிகின்றது. அத்துடன் அவர் மக்கள் முற்றுகைக் காலத்தில் ஆம்பல் பூவையும் மலை நிலத்தில் பயிரிடப்பட்ட ஐவன நெல்லையும் உண்டு ஊக்கந் தளராது போர் புரிந்து வென்றனரென்றும், இப்போரில் பாரிக்கு 'வலது கை போல இருந்து உதவி புரிந்தவர் கபிலரென்றும் குறிப்பிடுகின்றார். கபிலர் உடனிருந்து பாரிக்கு உதவியதை அவர் "உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை வாய் மொழிக் கபிலன் சூழ" என்று கூறி யுள்ளார். தன்னோடொத்த ஒரு புலவனை மற்றொரு புலவன்

பாட வேண்டுமானுல்; உண்மையில், அப்புலவன் சிறப்புடைய வனே. நக்கீரர் உறவு முறையினுல் ஈண்டு 'கபிலன்' என்று குறிப்பிடுகின்ருர்.

பாரியைப் பாண்டியன் பெண் கேட்கப் பாரி பெண் கொடுக்க மறுத்ததே இப்போருக்குக் காரணமாகும். மேலும் முற்றுகைக் காலத்தில் பறம்பு நாட்டு மக்கள் குருவிகளைப் பழக்கி நெற் கொண்டு வரச் செய்து, ஆம்பல் பூவுடன் கலந்து உண்டு வாழ்நாளைப் போக்கி வெற்றி பெற்ருர்கள் என்ற கர்ண பரம்பரைச் செய்தி உண்டு. ஆனுல் குருவிக் கதை கற்பனையே யொழிய உண்மையில் நடந்ததன்று: நக்கீரர் போரில் குருவிகளின் உதவியைப் பற்றிக் கூறியிருப் பது முற்றிலும் கற்பனையே. ஔவையும் குருவிகளைப் பற்றிக் கூறியுள்ளார். ஆனுல் அவர்,

"வரைபுனை களிற்றொரு இரைதேர் கொப்பினவாகி
மாலை படர்தல் காண்க"

என்று காலையில் புறப்படும் குருவிகள் நெற் கதிர்கள் இருக்கு மிடம் சென்று தின்று மாலையில் பறம்பு மலைக்குத் திரும்பும் என்று கூறியிருக்கிருரே யொழிய போர்க் காலத்தே குருவிகள் உதவி செய்ததாகக் கூறவில்லை. கபிலர், ஔவையார் ஆகி யோர் தம் பாடல்களைப் படித்த தற்காலத்தவர் முடி போட்டுக் கதைகட்டி விட்டனர் போலும். எனவே குருவிக் கதைக்குத் தக்க சான்றில்லையாதலால், அது இயற்கைக்கு மாறுபாடானதால், அது கற்பனைக் கதைதான் என்று கொள்ள வேண்டும். முற்றுகை நீடித்ததினுல் மூவேந்தரும் சலிப்புற்றனர். அதுகால் கபிலர் அவர்களிடம் போந்து "பெருமை பொருந்திய முரசினையுடைய மூவேந்தராகிய நீங்கள், எத்துணைக் காலம் முற்றுகை செயினும், பறம்பு என்னும் அரணில் உள்ளார்க்கு உணவுக்குக் குறை உளதா காது. மூங்கில் நெல்லும், பலாப்பழமும், வள்ளிக் கிழங்கும், தேனும் ஆகிய நான்கு பொருள்களையும் அவ்வரண் மிகுதி யாக உடையது. இவை உழவரது முயற்சியின்றியே இயற்கை

யிற் கிடைப்பனவாகும். நீங்கள் புலந்தோறும் உங்களது தேர்களையும், மரந்தோறும் உங்களது யானைகளையும் கட்டினாலும் கூட நாங்கள் சளைக்க மாட்டோம். உங்களுக்குத் தோல்வியேதான். ஆனால் பாரியை வெல்லுவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது அவன் கலைப்பித்தனாவான். உங்களது வீரம் அவனிடம் செல்லாது. கலையால் மாத்திரம் தான் அவனை வெல்ல முடியும். பாணரும் கூத்தரும் விறலியரும் அவனது நாட்டில் எங்கும் சிறப்புடனிருக்கின்றனர். ஆதலின் நீங்கள் போர்க் கோலம் மாற்றி உங்களது துணைவர் கூத்தர் வேடம் புனைந்து ஆட நீங்கள் யாழுடன் பாணர் வேடம் புனைந்து பாடி வந்தால், தன்னுடைய குன்றை உங்களுக்குத் தருவான்'' என்று கூறுமுகத்தான்,

''அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினு
முழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே''

என்று பாரியது புரவலர்க் கருமையும் இரவலர்க் கெளிமையும் குறித்துப் பாங்குடன் பாடியுள்ளார். இக்கூற்றால்

கபிலர் பாரியைக் காட்டிக் கொடுத்து விட்டார் என்று ஒரு சிலர் கூறலாம். இது பொருத்தமற்ற தாகும். பாரியின் மீதுள்ள அளவு கடந்த அன்பால் அவனது பெருமையினையும் மலையினிடத்து அவன் கொண்டுள்ள அருமையினையும் கூறினாரேயொழிய, காட்டிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் பாடவில்லை.

பாரியின் முடிவு

இறுதியாக பாரி சூழ்ச்சியால் மூவேந்தர்களாலோ அல்லது அவர்களால் ஏவப் பட்டவர்களாலோ கொல்லப் பட்டிருக்க வேண்டும். மூவேந்தரும் சூழ்ச்சியால் பாரியை வஞ்சித்துக் கொன்றனர் என்பதனை 112-ம் புறப்பாட்டுரையில், "ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்து வஞ்சித்துக் கொன்றமையின்" என வருதலால் நாம் அறியலாம். ஆனால் இதற்கு வேறு சான்றில்லை. ஔவையார் இதைப் பற்றிக் கூறவில்லை. கபிலர் கூறியதிலும் பாரியின் கொலைக்குச் சான்றில்லை. ஆனால் ஒரேயொரு சான்றுள்ளது. பாரி இறந்த பின் கபிலர்,

> "பாரியது அருமை யறியாற் போர்
> எதிர்ந்து வந்த வேந்தர்"

என்று குறிப்பிடுவதில் காணுகின்ற இரக்கக் குறிப்பினால் பாரி சூழ்ச்சியினால் கொலையுண்டான் என்ற கர்ண பரம்பரைக் கதை எழுந்திருக்கலாம். மேலும் மூவேந்தர்கள் கொடியவர்கள் என்று குறிப்பிடப் பெறவில்லை. அவர்கள் கொலை செய்திருப்பின் கொடியவர்கள் என்று கூறப்பட்டிருப்பார்கள்.

பாரி இறந்த பின், நிலாக் காலத்தில் ஒருநாள் பாரி மகளிர் தமது அரசு நிலையிட்ட திருவுடை நகர்க் கண்ணே இனிது மகிழ்ந்து விளையாடியதும், அடுத்த நிலாக் காலத்துத் தாம் தந்தையிழந்து தண் பறம்பிழந்து தமியராய்த் துச்

லொதுங்கித்து யர்கூர நின்றதும் தம்முள்ளத்தே தோன்ற அப்பொழுது மனமுருகி,

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேமெங் குன்றும் பிறர் கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர் எங்
குன்றுங் கொண்டார்யாம் எந்தையு மிலமே"

என்னும் பாடலைப் பாடினரே தவிர பாரியின் முடிவைக் குறித்து ஒன்றும் கூறவில்லை.

பிற சங்ககாலப் புலவர்கள் பாரியின் மலை, சுனை, வீரம், கொடை முதலியவற்றைப் பற்றி பாடினரே தவிர, அவனது வாழ்க்கையின் முடிவைப் பற்றிக் கூறவில்லை. ஒருவேளை கொலையின் கொடுமையை அஞ்சி அவர்கள் பாடவில்லையோ என்ற ஐயம் எழலாம். ஆனால் அவ்வாறு அஞ்சக் கூடிய தன்மை தமிழ்ப் புலவர்களிடம் கிடையாது. சிறு குற்றத்திற்காக அஞ்சாமல் எதிர்த்து வாதாடும் தன்மையுடைய புலவர்கள் பெருங் குற்றமாகிய கொலைக் குற்றத்தை எதிர்க்காம லிருந்திருக்க முடியாது.

பாரி உண்மையாகவே கொலைசெய்யப்பட்டிருப்பின் பாரிக்காகவே உயிர் வாழ்ந்த கபிலர் கட்டாயம் அதனைப் பாடியேயிருப்பார். ஆனால் உடன் மாயத் துணிந்த கபிலரைப் பாரி தடுத்ததாகக் குறிப்பு உள்ளது. "ஒருங்கு வரல் விடாது ஒழிக" என்று பாரி தன்னைத் தடுத்ததாகக் கபிலர் பாரி குற்றுயிரா யிருக்கும்பொழுது பாடியுள்ளார். பின் அவர் பாரியின் குடும்பப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். பாரி மகளிர் இருவரையும் தகுந்த தலை வனிடம் ஒப்புவித்தற் பொருட்டு கபிலர் அரும்பாடுபட்டார். அவர் ஊர் ஊராக அலைந்தார். இளவிச்சிக்கோ என்ப வனிடம் அவர் சென்று அம்மகளிரது உயர் குடிப்பிறப்பு

முதலியவற்றை எடுத்துரைத்து அவர்களை மணஞ் செய்து கொள்ளும்படி வேண்ட, அவன் உடன்படாமையால், இருங்கோவேள் என்பானிடஞ் சென்று அவனையும் அவ்வாறு வேண்ட, அவனும் அங்ஙனமே உடம்படானாய் மறுக்க, இதற்காக அவனை முனிந்து பாடினார். இறுதியில் பாரிகுடிக்கும் மூவேந்தர்க்கும் உண்டாகிய பகைமை பற்றி அரசர் எவரும் பாரிமகளிரை மணஞ்செய்து கொள்ள இசையாமையால் கபிலர் மனம் நொந்து, அம் மகளிரைச் சில பற்றற்ற அந்தணர்களிடம் அடைக்கலப் படுத்திவிட்டு திருக்கோவலூரில் வடக்கிருந்தாரென்றும், தீக்குளித்தாரென்றும் தெரிய வருகிறது. திரு பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் எழுதிய 'கபிலரும் பாரியும்' என்ற கட்டுரையில், கபிலர் திருக்கோவலூரை அடைந்து தன் நண்பனாகிய திருமுடிக்காரியின் வழியில் வந்த எழிலும் இளமையும் வாய்ந்த ஏறனையார்க்குத் தாம் அழைத்து வந்த பூவையனைய பாவையரை அளித்தனர் என்று காணப் பெறுகின்றது. இவ்வாறு பாரிக்காகவே உயிர் வாழ்ந்த கபிலர், உயிர் நீப்பதற்கு முன் "பாரி! நீயும் நானும் கலந்த நட்பிற்குப் பொருந்த யானும் நின்னுடன் கூடப்போவதற்கு மனமியையாமல், 'நீ ஈண்டுத் தவிர்க' என்று சொல்லி இவ்வாறு மாறுபட்டனையாதலின், நினக்கு நான் பொருந்தினவனல்லேன்; அதனால் நீ எனக்கு உதவி செய்த காலங்களிலும் என்னை வெறுத்திருந்தனை போலும்; எங்ஙனமாயினும் இப்பிறப்பின்கண் நீயும் நானும் கூடி இன்புற்றிருந்தவாறு போல மறு பிறப்பினும் நின்னொடு கூடி வாழ்தலை விதி கூட்டுவதாக" என்று பாடி, உள்ளமுருகி உயிர் நீத்தமை, கபிலர் பாரியிடத்துக் கொண்டிருந்த அளவிடற்கரிய அன்பினை எடுத்துக் காட்டுகின்றது.

ஒரு சிலர் பாரிக்காகவே வாழ்ந்த கபிலர் அவனது முடிவைப்பற்றிக் காட்டாயம் பாடியிருக்கலாமென்றும், தங்கள் குலத்திற்கு இழுக்கு ஏற்படும் என்று கருதி, சங்கப் பாடல்களைத் தொகுத்த வேந்தர்கள், இது போன்ற பாக்-

களைத்தங்கள் செல்வாக்கால் தலைகாட்ட விடாது செய்திருக்காலமென்றும் கருதுகின்றனர்.

முல்லைக்குத் தேர் ஈந்தது

இனி பாரியின் வள்ளன்மையைக் குறித்து ஒரு சிறிது வரைவாம். பாரியின் வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத நிகழ்ச்சி அவன் முல்லைக் கொடிக்குத் தேர் நல்கியதாகும். பிறர் செய்யாத ஒன்றை அவன் செய்ததினால் அதனை யாவரும் மறக்காதிருக்கின்றனர். வேட்டையாடி பொற்றேர் இவர்ந்து வரும் வழியில் முல்லைக் கொடி ஒன்று படர்வதற்கு ஏற்றதொரு கொழுகொம்பு இல்லாது வெயிலாலும் காற்றாலும் துன்புறுவதைக் கண்டு இரங்கி, 'என் தேரை இம் முல்லைக் கொடி படர்வதற்கு ஆதரவாக விட்டுச் செல்வேன்' என்று அவன் கூறி முல்லைக் கொடிக்குப் பொற்றேர் கொடுத்தது புதுமையானதொன்றுதான் ஈடுபாடு வரம்பு கடந்து போகும் பொழுது இத்தகைய நிகழ்ச்சி ஏற்படுவது இயற்கைக்குப் பொருந்தியதே. இந்த உணர்வு மயமான வாழ்க்கையை உடையவர்கள் தான் பாரியின் இந்தச் செய்கையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளனர். அவர்கள் உணர்வின் எல்லையை நன்கு பதித்தனர். இந் நிகழ்ச்சியைக் கூறவந்த நத்தத்தனார்,

"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பறம்பிற் கோமான் பாரி"

என்று சிறு பாணாற்றுப்படையில் செவ்விய முறையில் சித்திரித்துக் காட்டுகின்றார்.

இதையே கபிலரும் விச்சிக்கோவிடம் பாரிமகளிர்க்காக மன்றாடும்பொழுது,

"பூத்தலை யறுஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்கு மணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரிமகளிர்"

என்று கொடிக்கு இரக்கம் காட்டியவனின் பெண்களுக்கு இரக்கம் காட்டுங்கள் என்று பாடியிருப்பது, உள்ளத்தை உருக்குவதாய் உள்ளது.

**பாரியது பறம்பு**

பாரியின் மலை, சுனை, இவற்றைப் பற்றி பல புலவர்கள் பலபடப் பாடியுள்ளனர். கபிலர் பறம்பு நாட்டைப் பிரியுங்கால், அதுகாறும் தமக்கு உறையுளும் உணவும் நல்கி யின்புறுவித்த இனிய பறம்பினது நன்றியை அவரால் மறக்க முடியவில்லை. அதனால் அவருள்ளத்தே பிரிவாற்றாமை தோன்றிப் பேதுறுத்த, நெஞ்சு கலங்கி, பறம்பினை நோக்கி நின்று,

"ஓ! பெரிய புகழையுடைய பறம்பே! முன்பு பல சிறந்த உணவையும் விரும்பியவாறே தரும் மிக்க செல்வம் முதிர்ந்து எம்முடன் நட்புச் செய்தாய். இப்பொழுது பாரி இறந்தானாகக் கலங்கிச் செயலற்று வளையணிந்த முன்கையை உடைய மகளிரின் மணங்கமழும் கரிய கூந்தலைத் தீண்டுவதற்கு உரியவரை நினைந்து நீர் வார்கின்ற கண்ணையுடையேமாய், நின்னைத் தொழுது வாழ்த்திச் செல்கின்றேம். நீ வாழ்வாயாக" என்று கூறுமுகத்தான்,

> "மட்டுவாய் திறப்பவு மைவிடை வீழ்ப்பவு
> மட்டான் றுணுக் கொழுந்துவை யூன்சோறும்
> பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி
> நட்டனை மன்னோ முன்னே யினியே
> பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
> நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்
> சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே
> கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
> நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே"

என்று பறம்பின் பண்பினைப் பாராட்டிப் பேசுகின்றார். மேலும் "தேர் வழங்கும் இருக்கையை உடைய உயர்ந்தோ

னது மலை, அவன் உள்ளுறைய காலத்துப் புகழாலுயர்ந்து. காணுதார்க்கும் செவிப் புலனாகத் தோன்றும்; இப்பொழுது பிற மலைகள் போல் கட்புலனளவிற்றாய், இவ்விடத்து நின்றோர்க்கும் தோன்றும்; சிறிது எல்லை போய் நின்றோர்க்கும் தோன்றும்" என்று இரங்கிக் கூறுமுகத்தான்,

"ஈண்டுநின் றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரை
சென்றுநின் றோர்க்குந் தோன்றும் மன்ற
களிறு மென்றிட்ட கவளம் போல
நறவு பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுகு முன்றிற்
றேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே"

என்று பாடியுள்ளார்.

# 6. எட்டுத்தொகை

### சங்க இலக்கியங்கள்

கடைச் சங்க காலத்து நூல்களே சங்க இலக்கியங்களாகும். இவற்றைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இரண்டாகப் பிரிக்கலாம். இத்தொகை நூல்கள் பல புலவர்களால் பாடப்பட்டனவாகும். இப் புலவர்கள் ஓரிடத்தில் வாழ்ந்தவரல்லர்; ஓரினத்தையோ அன்றி ஒரு சமயத்தையோ சார்ந்தவரல்லர்; ஒரு காலத்தவருமல்லர். மேலும் சில புலவர்களுடைய பெயர்கள் அறிவதற்கில்லை. ஏறத்தாழ இருபத்தைந்து ஆசிரியர்கள் புனை பெயருள்ளவர்கள். களவியல் உரைகாரர் இவர்களை நீக்கிச் சங்கப் புலவர்களைக் கணக்கிட்டு அவர்கள் நானூற்று நாற்பத்தொன்பதின்மர் என்று கூறியுள்ளார். இவர்களுள் இருபத்தேழு புலவர் பெண்பாலராவர். ஔவையார், வெள்ளிவீதியார், காக்கைப் பாடினியார், நச்செள்ளையார், பாரி மகளிர் என்போர் பெண்பால் புலவர்களில் குறிப்பிடத் தகுந்தோராவர்.

பழந்தமிழ்ப் பெருமக்கள் தங்கள் அக வாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் கூர்ந்துணர்ந்து உணர்வொழுகப் பாடிய பாடல்களின் தொகை நூல்களே அவர்தம் வழிவந்த மக்களால் பத்துப்பாட்டெனவும், எட்டுத் தொகையெனவும் கூறுபடத் தொகுக்கப்பட்டன. ஆய்ந்து நோக்குங்கால் ஊன்றிநோக்கி உணர்ந்து பாடும் புலவர் பெருமக்கள் அருகி, மக்கள் உணர்வு வற்றிய காலத்தில்தான் சிதறுண்ட பழந்தமிழ் நூல்களைத் திரட்டுதற்கான ஊக்கம் தோன்றியிருத்தல் வேண்டும். அயல்மொழி மன்னர் ஆட்சியில்தான் மக்கள் உணர்வு குறைந்து மந்தமான மனநிலை ஏற்பட்டிருத்தல் வேண்டும். களப்பிரர் என்ற ஒரு அயற்கூட்டத்தார் ஆட்சியில் இத்தகைய மந்தநிலை ஏற்பட்டிருத்தற்கு இடம் உண்டு என்று வரலாற்றறிஞர் ஊகிக்கின்றனர். எனவே அக்காலத்தில்தான் இயல்பாக உணர்வூட்டும் பாடல்கள் அருக, மக்கள்

சிதறுண்டு கிடந்த தங்கள் முன்னோர் பாடல்களைத் திரட்ட தற்கண் நாட்டமுடையராய், எட்டுத்தொகை முதலிய தொகை நூல்களைத் தொகுத்திருத்தல் கூடும். இவ்வாறுதான் கிரேக்க மொழியிலும் மிகப் பழைய காலத்தில் 'அந்தலாஜி' (Anthology) என்று வழங்கும் தொகை நூல் தொகுப்பட்டது கி.பி. 90இல் மீலிகர் என்பவரால் இது தொகுக்கப்பட்டது. பூந்துணர் என்பதே அந்தாலசி என்பதன் பொருளாகும்.

இத் தொகை நூல் பாடல்கள், தெய்வங்களையும், புகழுடன் விளங்கிய புவி மன்னர்களையும், பெரு நிகழ்ச்சிகளையும் பற்றிக்கூறுகின்றன. இவை நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல், சுருங்கச் சொல்லல், பொருள் ஆழமுடைமை முதலிய சிறந்த குணங்களைக்கொண்டு விளங்குகின்றன. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய புறநானூறும் இத்தகையதே. மீலிகருக்குப் பின்னர் நான்கு தொகை நூல்கள் தோன்றின. இறுதியில் கி.பி. 483-565 இல் அரசோச்சிய ஐச்டினியன் காலத்தில் தொகுக்கப்பட்ட நூல் சிறந்ததொரு தொகை நூலாகும். இந்நூலில் காதற் செய்யுட்கள் பல துறைகளாகப் பிரிக்கப்பட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. அகப்பொருள் நுதலும் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு போன்ற எட்டுத்தொகை நூல்கள் இத்தன்மையனவே. சுருங்கக்கூறின் தொகைநூல்கள் மக்களுக்குப் புத்துயிர் வழங்கிய அமிழ்தம் போன்றனவாகும். பழந்தமிழ்ப் பெருமக்களது பண்பு நலன்களையும், நனி நாகரிகங்களையும் நமக்கு எடுத்துக் காட்டுவன இத்தொகை நூல்களே.

காதலும் போர் முதலிய புற நிகழ்ச்களும் சங்க இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ள பொருள்களாகும். வீரமும் காதலுந்தான் நம் முன்னோரது இரு கண்களாக விளங்கின எனக் கூறவேண்டும். அவையே பழந்தமிழர் வாழ்க்கைக் குறிக்கோள்கள் என்று கூறினும் அது மிகையாகாது. காதலை அகம் எனவும், போர் முதலிய போர் நிகழ்ச்சிகளைப் புறம் எனவும்

பண்டை மக்கள் வழங்கினர்; இலத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளில் காணப்பெறும் பழம் பாடல்களும் இவ் விரண்டையுமே தான் கருவாகக் கொண்டிலங்குகின்றன.

"சுவை மிக்க சொற்கள், கருத்துக்கு ஏற்ற சொற்கள், கட்டுரைச் சுவைபட அமைந்த சொற்செறிவு, எளிமையும் இனிமையும் ஆற்றலும் படைத்த செய்யுள் நடை, செவிக் கினிய ஓசைநயம்" ஆகிய அனைத்தும் சங்க இலக்கியப் பாடல் களிலே அமைந்திருப்பதைக் காணலாம். மேலும் இயற்கை உவமைமைப் பெய்த்திப்பதில் சங்கப் புலவரை மிஞ்சுவார் எவரு மில்லை. அவர்கள் தெளிந்த அறிவுக்குப் புலனாகாத பொருள் களிலே தடுத்து, மிகைபடக் கூறுதலை மேற்கொள்ளாது, மக்கள் வாழ்விற்குத் துணையாக விளங்கும் இயற்கைப்பொருள் கள் மீது மாறாக் காதல் கொண்டு இன்புற்று இறும்பூதெய்தித் தாம் கண்டவற்றை, உணர்ந்தவற்றை அழகுத் தமிழிலே, "சுவைத்துச் சுவைத்துத் தேர்ந்தெடுத்த சொற்கள், பொருள் ததும்பும் தொடர்கள், கருத்தோடு பிணைந்து இயலும் இனிய இசை, அழகு நிரம்பிய வடிவங்கள்" ஆகிய வற்றுடன் கூடிய உணர்ச்சி மிக்க செய்யுள்களிலே வடித்துத் தந்தனர். இத்தகைய சங்க இலக்கியங்களின் இனிமையைக் கருதித்தான் வள்ளுவப் பெருந்தகை, 'நவில் தொறும் நூல் நயம் போலும்' என்று நவின்றனர் போலும்! இத்தகு சங்க இலக்கியங்கள் தமிழர்தம் கருவூலங்களாகும்; கலைச் செல் வங்களாகும்; வாழ்வின் வழிகாட்டிகளாகும். சுருங்கக் கூறின், சங்க இலக்கியங்கள், சங்கச் சான்றோர் அக்கால மக்கள் வாழ்க்கையை அகம், புறம் என்று இருதிறமாகக் கூர்ந்து நோக்கி உணர்ந்து பாடியதாக விளங்கும் வாழ்க்கை இலக்கியங்களாகும்.

### அகப்புறப் பாகுபாடு

உலக மொழிகளிலே செம்மொழிகள் ஐந்து. அவற்றிலே நாட்டு வழக்கற்று ஏட்டு வழக்கிலே மட்டும் நிலவுவன மூன்று. நாட்டு வழக்கிலும் ஏட்டு வழக்கிலும் நிலவுவன

இரண்டு. அந்த இரண்டிலும் தனக்கேயுரிய தனிஎழுத்து முறையும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து வளர்ந்து வருகின்ற இலக்கிய வளர்ச்சியும் உடையது ஒன்றே. அந்த ஒரு மொழியே தமிழ் மொழியாகும்.

செம்மொழிகள் ஐந்திலும் இலக்கியம் மிகவுண்டு; அவற்றிற்குத் தொன்மைச் சிறப்பும் உண்டு. ஆனால் செம் மொழிகளிலே ஏனைய நான்கிற்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு பெரும் புகழ் படைத்த நந்தம் செந்தமிழ் மொழிக்குண்டு. அத்தகைய பெருமையைத் தருவது பொருளிலக்கணமாகும். பிறமொழிகளிலே எழுத்துக்கு இலக்கணம் உண்டு. ஆனால் அம்மொழிகளிலே பொருளிலக்கணம் உண்டா? அம்மொழி வல்லார் வாழ்க்கையை அகம், புறம் என்றுஇருகூறாக்கினரா? அவற்றை எழுத்தில் வடித்தனரா? இலக்கியத்தில் புகுத் தினரா? அன்று, அன்று; ஆயிரம் முறை சொல்க. ஆனால் தமிழிலோ அவை இரண்டும் உண்டு. மேலும் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழ் வல்லார் வாழ்க்கையினை அகம் என்றும் புறம் என்றும் இரு கூறாக்கினர்; ஒவ்வொன்றுக்கும் இலக்கணம் வகுத்தனர்; இலக்கியம் பல பிறந்தன. இப்படிக் கூறுவதனால் பிறமொழிமக்கள் அகவாழ்வும் புறவாழ்வும் வாழவில்லை என்பது பொருளன்று; தங்கள் வாழ்வு அகம் புறம் என்று இரு வேறு வகைப்பட்டது என்பதை அம்மக்கள் அன்று உணரவில்லை; தமிழனே உணர்ந்தான்; உலகிற்கு உணர்த்தினான் என்பதே கருத்தென்க.

வாழ்க்கையின் உடல் புறம்; உயிர் அகம். புறத்தின் அடிப்படை அகம்; அகத்தின் மீது எழுப்புவது புறவாழ்க்கை. இரண்டும் சேர்ந்தது வாழ்க்கையாகும். ஒருவனுடைய அக வாழ்க்கை-வீட்டு வாழ்க்கை சிறக்கவில்லையேல் அவன்றன் புறவாழ்க்கை-நாட்டு வாழ்க்கையும் சிறப்படையாது. நாடும் வீடும் சிறக்க வாழ்வதே நல்வாழ்க்கை.

தமிழ் மக்களின் தொன்மைச் சிறப்புக்கும், வாழ்க்கை முறைகளுக்கும் ஒரு காப்பாக எழுதப்பட்ட தொல்காப்பியத்

தில் தொல்காப்பியர், அகம் என்ருல் என்ன ? புறம் என்ருல் என்ன ? அகத்தின் கூறுகள் யாவை ? புறத்தின் கூறுகள் யாவை ? என்று அருமையாகவும் ஆழமாகவும் விளக்கி யுள்ளார்.

உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்ருன் நம்முள் ஒப்புமையராய் விளங்கும் தலைவனும் தலைவியும் ஊழ்கூட்ட ஒரு தனியிடத்திலே சந்தித்துத் தம் முள் ஒத்த அன்பினராய்க் கூடும் கூட்டத்தின்கண் பிறந்த இன்பம் இந்தன்மைத்து எனக் கூறப்படாதது அகமாகும். இந்தன்மைத்து எனக்கூறுவது புறமாகும்.

அகம் என்பது மூவகைப் பெரும் பிரிவுகளை உடையது. கைக்கிளை,பெருந்திணை, ஐந்திணை என்பன அம் முப்பிரிவு களாகும். இவற்றுள் பெருந்திணை என்பது பொருந்தாக் காம மாகும். அஃதாவது காதலர் இருவருக்கிடையே வய தானும், உருவானும் பிறவாற்ருனும் பெருத்த வேறுபாடுகள் இருந்து அவர்கள் காதலிக்கத் தொடங்குதல் என்பதாம். கைக்கிளை என்பது ஒருதலைக்காமமாகும். அஃதாவது ஆண், பெண், என்ற இருவருள் ஒருவர் மட்டுமே காதல் கொள்வது ஆகும். ஐந்திணை என்பதுதான் உண்மையான அன்பின் அடிப்படையில் பிறக்கின்ற காதலாகும். எனவேதான் சான்ருேர்கள் இதனை அன்பின் ஐந்திணை எனச்சிறப்பித்தனர்.

ஐந்திணையகவொழுக்கமானதுஇருவகைத்து. ஒன்று களவு; மற்ருென்று கற்பு. களவு என்ருல் என்ன ? தலைவி தன் தோழியரோடு சோலை ஒன்றுக்கு வருவாள் ; தலைவன் வேட் டையாடத் தன் தோழரோடு வருவான் ; பின்னர் முன்னைப் பிறவியிற் செய்த ஊழ்வினைப்பயனுல் இருவரும் பொழிலின் கண்ணே தனிமையாக எதிர்ப்படுவர். பள்ளத்தைக் கண்டு பாய்ந்தோடும் வெள்ளம் போல இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்துவர். அதன் பின்னர் பெற்ருேருக்கும், உற்ரு ருக்கும் தெரியா வண்ணம் சில நாள் மறைந்து மறைந்து சந்திப்பர். இருவரும் காதற் பயிரை அன்பெனும் நீரூற்றி

மறைவாக வளர்த்து வருவர். பின்னர் தலைவன் பொருள் தேடுவதற்காகவும், கல்வியின் பொருட்டும் தலைவியினைப் பிரிந்து சில நாள் சென்ற பின்றை தலைவியை நோக்கி வருவான்; தோழி அல்லது பாங்கி, தலைவனைக் கண்டு விரைவில் தலைவியை வரைந்து கொள்க என வற்புறுத்துவாள். பின்னர் தலைவியின் பெற்றோர் இசையின் அவர் முன்னர் திருமணம் நடக்கும். இல்லையேல் அடுப்பாரும், கொடுப்பாரும் இன்றித் தலைவனும் தலைவியும் வேற்றூர் புகுந்து வதுவை முடித்து வாழ்வர்.

வதுவை முடித்த பின்னர் நடத்துவது கற்பு வாழ்க்கையாகும். இவ்வாறு தலைவனும் தலைவியும் காதல் வயப்பட்டு வாழ்க்கை நடத்துங்காலை பொருள் இல்லாத வறுமை நிலை ஏற்படும்போல் தோன்றும். அதனை அறிந்த தலைவன் இல்லற வாழ்க்கை இனிது நடக்கும் பொருட்டுப் பொருள் தேடக் காலினும், கலத்தினும் வேற்று நாட்டிற்குப் பிரிந்து செல்ல எண்ணுவான். அவ்வாறு பிரியும்முன் இருவரும் கலந்து மிகவும் மகிழ்ந்திருப்பர்; அதற்குக் குறிஞ்சி என்று பெயர்; பொருள்வயிற் பிரிதல் பாலை எனப்படும். பொருள் வயிற் பிரிந்த தலைவன் வருந்துணையும் தன் நிறை காத்து இல்லறம் இனிது நடாத்தல் முல்லை; மணந்த கணவன் குறித்த காலத்தில் வாராது போகவே தலைவிக்கு ஆற்றாமை மிகும். அவ்வாறு ஆற்றாமை மிகுந்த பொழுது வளையும் கழலும்; குழலும் சரியும்; மேனி பசலையுறும். தலைவி பெரிதும் இரங்குவாள். இதற்கு நெய்தல் என்று பெயர் கூறுவர். குறித்த காலங் கழித்துப் பின் தலைவன் வருவான்; அவன் அவ்வாறு தாமதித்து வந்தமை குறித்துத் தலைவி ஊடல் கொள்வாள். அது மருதம் எனப்படும்.

மேற்கூறிய அகவொழுக்கத்தைச் சித்திரிக்கும் சிறந்த நூல்களே, அகநானூறு, குறுந்தொகை, கலித்தொகை போன்ற சங்க நூல்கள் ஆகும்.

இனிப் புறப்பகுதியைப் பார்ப்போம். இப்பகுதிக்கண் தலைவன் செய்யும் போர் முதலிய புறச் செயல்கள் பேசப் படும். புறப்பொருளின்கண் பெரும்பாலும் போர் நிகழ்ச் சிகளே விரித்துரைக்கப்படுகின்றன. போர் செய்யக் கருதிய தலைவன் முதலில் பகை நாட்டகத்துக்கண் சென்று ஆவும், ஆனியற் பார்ப்பன மக்களும், பெண்டிரும், பிணியுடை யோரும், பிள்ளைப் பேறிலாதவரும், போர் செய்ய விரும் பாதவரும் தத்தமக்குப் புகலிடம் தேடிக் கொள்ளுமாறு பறைபறைவிப்பான். அதன்பின் அங்குள்ள ஆனிரைகளைக் கவர்ந்து வருவான். அதுகண்ட பகைநாட்டார் ஆனிரை களை மீட்க வருவர். இருவருக்கும் போர் நிகழும். இது ஒரு முறை.

மாற்றார் மண் கவர எண்ணிய மன்னன் முதலில் வஞ்சி மிலைந்து வாளும் குடையும் போக்கிப் பின் தானையொடும் போந்து மாற்றார் கோட்டையை உழிஞை சூடி முற்றுகை யிடுவான். கோட்டைக் குரியவன் நொச்சி சூடிக் கோட்டை யைக் காப்பான். இருவருள் ஒருவர் வெல்வர். வென்றவர் பின்னர் தம் வெற்றியை விழாவாகக் கொண்டாடுவர். அக் காலை பாணர்க்கும் புலவர்க்கும் பிறருக்கும் பரிசில் தரப்படும். அல்லது இரு மன்னரும் ஒருங்கு ஒழிவதும் உண்டு.

இவ்வாறு அமைந்தது புறத்திணை எனப்படும். தொல் காப்பியமும், புறப்பொருள் வெண்பாமாலையும் இதனை நன்கு விளக்கிக் கூறுகின்றன. புறநானூறு என்பது முற்றி லும் புறப்பொருள் பற்றியதே; பதிற்றுப்பத்தும் அப் படியே. இவ்வாறு வாழ்க்கையை அகம், புறம் எனப் பிரித்து இலக்கணம் வகுத்தும் இலக்கியம் பல இயற்றியும் வாழ்ந்த நம் முன்னோரின் மொழித்திறத்தை எம்மொழியால் வாழ்த்து வது? அவர்கட்கு நாம் செய்யவேண்டிய கைம்மாறு அவர் கள் இயற்றிய நூற்களின் அருமை பெருமைகளை உலகிற்கு உணர்த்துவதே ஆகும்.

## எட்டுத் தொகை

சங்ககாலப் பெருமக்களின் வாழ்க்கையின் அகப்புற உண்மைகளை நன்கு தெரிந்து கொள்ளச் சிறந்ததொரு கருவியாக விளங்குவது எட்டுத்தொகையாகும். இவ்வெட்டுத்தொகைக்கண் பழந்தமிழ்ப் பெருமக்களின் அக வாழ்க்கையைப் பாடும் அகப்பொருள் நுதலிய நூல்களும், புறவாழ்க்கையைப் பாடும் புறப்பொருள் நுதலிய நூல்களும் அடங்கியுள்ளன. பெயரளவிலேயே இத்தொகை எட்டு நூல்களைக் கொண்டதென்பது தெளிவாகிறது. இவ்வெட்டு நூல்களின் பெயர்களையும் குறிக்க,

> ''நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
> ஒத்த பதிற்றுப் பத்து ஓங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் ஏத்தும் கலியோடகம் புறமென்று
> இத்திறத்த எட்டுத் தொகை''

என்ற பழம் பாடலொன்று நிலவி வருகிறது. இவ்வெட்டு நூல்களில் புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் என்ற மூன்றும் புறப்பொருள் பற்றியனவாகும். ஏனைய ஐந்தும் அகப்பொருளை அடிப்படையாகக் கொண்டு விளங்குவன.

### நற்றிணை

நல்ல ஒழுக்கமாகிய அகத்திணையைப் பற்றி இந்நூல் கூறுவதால் இதனை மக்கள் நற்றிணை என வழங்கினர் போலும். இந்நூல் ஒரு தொகை நூல். ஒன்பது அடி முதல் பன்னிரண்டு அடி வரையிலுள்ள நானூறு பாடல்களை உடையது. நூற்றெழுபத்தைந்து புலவர்களின் பாடல்கள் இந்நூலிலே அடங்கி உள்ளன. எட்டுத்தொகை நூல்களில் முதலில் வைத்துக் கூறப்படுவது இந்நூலேயாகும். இதனைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த வழுதியாவான். குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் ஆகிய ஐந்திணை ஒழுக்கங்களைப் பற்றிய பாடல்கள் இந்நூலில் தொகுக்கப் பட்டுள்

ன. இந்நூலில் காணும் கடவுள் வாழ்த்துப் பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பட்டது. இந்நூலிலே காணும் நானூறு பாடல்களிலே ஐம்பத்தொன்று பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. சில புலவர்கள் அவர்கள் பாடிய பாடல்களினால் பெயர் பெற்றுள்ளனர். பொருள்வயிற் பிரிந்த தலைவன் ஒருவன் நடுவழியில் தலைவியைப் பற்றி எண்ணுகின்றான். தலைவியினிடத்துக் கொண்டுள்ள அன்பு அவனை வீடு திரும்புமாறு தூண்டியது; வாழ்க்கையினை வளம் பெறச் செய்ய பொருள் வேண்டும் என்ற எண்ணம் அவனை முன்னே செலுத்தியது. இவ்வாறு உள்ளத்தில் போராட்டம் நிகழவே தலைவன் செய்வது ஒன்றும் அறியாது வருந்தினான். இதனை விளக்க வந்த நற்றிணைப் புலவரொருவர் தேய்ந்த புரியையுடைய பழங் கயிற்றின் இரு புறங்களையும் வலிய இரு யானைகள் பற்றி இழுப்பதுபோலத் தலைவன் உணர்ச்சியும், அறிவும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு வருந்தினான் என்று சிறந்ததொரு உவமை வாயிலாகப் பாடிய காரணத்தால் 'தேய்புரிப் பழங்கயிற்றினார்' என்று வழங்கப்பட்டார்.

நற்றிணைப் பாடல்கள் அனைத்தும் எண்வகைச் சுவைகள் நிரம்பியனவாகும். மந்தி கடுவனோடு விளையாடுதல், பிடி தன் கன்றைப் புலினியின்று காத்தல், மலைப்பாம்பு யானையைச் சுற்றி நெருக்குதல் போன்ற இயற்கைக் காட்சிகள் புலவர்களால் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன.

ஒரு மனிதனுடைய சிறந்த செல்வம் எது என்பதைப் பின் வரும் நற்றிணைப் பாட்டு நயம்படக் கூறுகின்றது.

"நெடிய மொழிதலும், கடிய ஊர்தலும்
செல்வம் அன்று ; தம்செய் வினைப்பயனே
சான்றோர் செல்வம் என்பது ; சேர்ந்தோர்
புன் கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம், செல்வம் என்பதுவே."

இங்கு ஆசிரியர், "பிறர்படும் துன்பத்தைக் கண்டால் தமிழர் கள் பொறுக்கமாட்டார்கள்; ஓடோடியும் சென்று உதவு வார்கள்; இவ்வாறு பிறர் துன்புறுங்கால் இரக்கம் காட்டு தலே அழியாத செல்வமாகும்; இதனை விடுத்து அதட்டிப் பேசுதலும், விரைந்து செல்லும் ஊர்திகளில் செல்லுதலும் நிலைத்த செல்வம் அன்று. ஒருவன் செய்த செயலின் நல்ல பயனையே சான்றோர் செல்வம் என்று கூறுவர்" என்று பிறர் துன்பம் களைதலே மனிதத்தன்மை ஆகும் என்று கூறியுள்ளது சிந்தனைக்குரியதாகும்.

பண்டைத் தமிழ்மக்களின் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் இந்நூலிலே பரக்கக் காணலாம். இந்நூலின் துணைகொண்டு பின்வரும் பண்டை வழக்கங்களை நாம் அறிய லாம்.

௧. இடையன் எருமையின் முதுகிலேறிச் செல்லுதல்.
௨. பிரிவுத் துன்பத்தினால் வருந்தும் தலைவி தலைவன் வரும் நாளைச் சுவரில் கோடிட்டு எண்ணுதல்.

௩. தினைப் புனத்தில் மகளிர் கிளி ஓட்டுதல்.
௪. காலால் உதைத்துப் பந்து விளையாடுதல்.
௫. காதலர் வரவைப் பல்லி உணர்த்துவதாகக் கருதுதல்.

இவைபோன்ற இன்னும் பல பண்டைய வழக்கங்கள் இந் நூலில் நன்கு கூறப்பட்டுள்ளன.

**குறுந்தொகை**

குறுகிய பாடல்களின் தொகுப்பே இந்நூல். இது ஆறடிச் சிற்றெல்லையையும், எட்டடிப் பேரெல்லையையும் உடையது; நானூற்றிரண்டு பாடல்களைக் கொண்டது. பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துபாடலைப் பாடியுள்ளார். பத்துப் பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் காணப்பெறவில்லை. பூரிக்கோ என்பவன் இந்நூலை நமக்குத்

தொகுத்து அளித்தான். நற்றிணைப் பாடல்களைப் போன்றே, குறுந்தொகைப்பாடல்களும் ஐந்திணை ஒழுக்கம் பற்றிப் பேசுகின்றன. இப்பாடல்கள் மிகச் சிறந்தவையாகும். அழகான உவமைகளால் காதல் ஒழுக்கத்தைத் தூய்மையாக இந்நூலில் புலவர்கள் சித்திரித்துள்ளனர். சிறிய பாடல்களாயினும் பல அரிய செய்திகள் நிறைந்து விளங்குகின்றன. எனவே குறுந்தொகைப்பாடல் ஒவ்வொன்றும் சிந்தைக்கு விருந்தாகும். முதன் முதலில் தொகுக்கப்பட்ட நூல் குறுந்தொகை என்று ஒரு சிலர் கூறுவர். இந்நூல் அகவற்பாக்களால் ஆயது. இருநூற்று ஐந்து புலவர்களால் பாடப்பட்ட பாடல்களைக் கொண்டது. இந்நூலில் காணும் ஒவ்வொரு பாடலும் இனிமையும் எளிமையும் கொண்டு விளங்குகிறது. மேலும் பல நீதியினையும், உவமையையும், இறைச்சியையும் இப்பாடல்களிற் காணலாம்.

காதல் மணத்தின் சிறப்பினை இந்நூலில் காணும் ஒரு பாடல் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. சாதிபேதமற்ற முறையில் காதலிருவர் கருத்தொருமித்துக் களவு மணம் புரிந்தனர். ஆனால் காதலி தன்னைக் காதலன் ஒரு வேளை கைவிட்டு விடுவானோ என்று கருதிக் கவலை கொண்டாள். அதனையறிந்த தலைவன் அவளைத் தேற்றுவான் வேண்டி,

"யாயும் ஞாயும் யாரா கியரோ !
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் ?
யானும் நீயும் எவ்வழி அறிதும் ?
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (பா.40)

என்று கூறுவதாக ஆசிரியர் பாடியுள்ளார். இதில் செம்மையான நல்ல நிலத்திலே பெய்த மழை நீர்போல அன்புடைய நெஞ்சம் இரண்டும் ஒன்றாகக் கலந்து விட்டன என்று சிறந்த உவமையின் வாயிலாக உண்மைக் காதலை ஆசிரியர் உணர்த்தியிருப்பது உள்ளுந்தொறும் உவகை ஊட்டுவதாகும். இதனைப்

பாடிய புலவரை மக்கள் "செம்புலப் பெயல் நீரார்" எனச் சிறப்பித்துள்ளனர். இவரது இயற்பெயர் தெரியவில்லை.

மற்றொரு புலவர் காதல் நோயின் கடுமையைப் பற்றி சிறந்த நயந் தோன்றப் பாடியுள்ளார். பாறையிலே வைக்கப்பட்டிருந்த வெண்ணெய் ஞாயிற்றினது வெப்பக் கொடுமையால் உருகி வழிய ஆரம்பிக்கிறது. அதனைக் காவல் புரிபவனோ கையில்லாத முடவன்; முடவனால் உருகும் வெண்ணெயை எவ்வாறு வேறிடத்தில் எடுத்து வைக்க முடியும்? மேலும் அவன் ஓர் ஊமையனும் ஆவான். எனவே பிறரை உதவிக்கு அழைக்கக் குரலும் இல்லை. இத்தகைய ஊமையனைப் போன்று தலைவனால் காதல் நோயின் கொடுமையைத் தாங்கவும் முடியவில்லை; அதனைப் பிறர்க்கு உணர்த்தவும் இயலவில்லை. இதனை,

"கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற் கரிதே"

என்று குறுந்தொகை கூறுகின்றது. . குறுந்தொகையிலே பல புலவர்களின் பெயர்கள் காரணப் பெயர்களாகக் காணப்படுகின்றன. அவர்கள் பாடியிருக்கும் பாடல்களில் அமைந்திருக்கும் சொற்றொடர்களே அவர்களது பெயர்களாக உள்ளன. அவை வருமாறு:

குப்பைக் கோழியார் — 'குப்பைக் கோழி' (பா. 305)
ஓரில் பிச்சையார் — 'ஓரில் பிச்சை' (பா. 277)
மீனெறி தூண்டிலார்—'மீனெறி தூண்டிலின்' (பா. 54)
அணிலாடு முன்றிலார்—'அணிலாடு முன்றில்' (பா. 41)
விட்ட குதிரையார் — 'விட்ட குதிரை' (பா. 74)

இவ்வாறு பல பெயர்கள் குறுந்தொகையில் காணப்படுகின்றன.

## ஐங்குறுநூறு

ஐங்குறுநூறு திணை ஒழுக்கங்களை நிரலே நூறு பாடல்களால் கூறுவதாகும். ஒவ்வொரு பகுதியும், பத்துப் பாடல்கள் அடங்கிய பத்துச் சிறு பகுதிகளை உடையது. இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னர். பத்துப் பத்தாகக் கிள்ளைப் பத்து, மஞ்ஞைப் பத்து முதலிய தலைப்புக்களாகப் பிரித்திருப்பது தொகுத்த ஆசிரியரின் கூர்த்த மதியினைப் புலப்படுத்தும். இந்நூல் மூன்றடிச் சிற்றெல்லையையும் ஆறடிப் பேரெல்லையையும் உடையது. சிவபெருமானைப் பற்றிய இந் நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுளைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார். இந் நூல் அகவல் பாக்களால் ஆனது. ஐந்து திணைகளையும் பாடியவர்கள் இன்னார் என்பதை,

> "மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
> கருதுங் குறிஞ்சி கபிலன் — கருதிய
> பாலையோ தலாந்தை பனிமுல்லை பேயனே
> நூலையோ தைங் குறு நூறு"

என்ற வெண்பா எடுத்துக் கூறும். இந்நூலிற் காணும் பாடல்கள் அளவிற் சிறியவை யெனினும் அரிய இலக்கியச் சுவை நிறைந்த பாடல்களாகும்; எளிதிற் பொருள் விளங்கக் கூடியன; படிப்பதற்கு இனிமையானவை.

நாட்டிலே வறுமைப் பிணி இல்லாதிருக்க வளம் பல சுரக்க வேண்டும். மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும். அன்பினை அடிப்படையாகக் கொண்ட இல்லறம் சிறக்க வேண்டும். மக்கள் பசியும் பிணியும் இன்றி வளமாக வாழ வேண்டும். இவை நம் முன்னோரது வாழ்க்கைக் குறிக்கோள்களாகும். அவற்றைப் பின்வரும் ஐங்குறுநூற்றுப் பாடல் வரிகளால் அறியலாம்.

"மாரி வாய்க்க; வளம் பல சிறக்க".
"பசியில் லாகுக; பிணிசேண் நீங்குக".
"பால்பல ஊறுக; பகடு பல சிறக்க";
"விளைக வயலே; வருக இரவலர்".
"நெற்பல பொலிக; பொன் பெரிது சிறக்க".

ஐங்குறு நூற்றுப் பாடல்களில் பொருள் நயம் சிறந்து காணப் பெறுகின்றது. தோழியின் உதவியால் தலைவி ஒருத்தி தன் உள்ளங் கவர்ந்த கள்வனோடு ஒரு நாள் நள்ளிரவில் வீட்டைத் துறந்து சென்று விடுகின்றாள். மறுநாள் காலை இதனை அறிந்த தாய் அலமந்து மனம் நொந்து தன் மகளைத் தேடிவர ஆட்களை அனுப்பினாள். அவர்கள் தலைவியைக் காணாது திரும்பி வரவும், தாய் பலவாறு அழுது புலம்பினாள். இதனைத் தாயிரங்கு பத்திலுள்ள பின்வரும் பாடல் சுவை படக் கூறுகின்றது.

"இதுவென் பாவை பாவை, இதுவென்
பூவைக்கு இனியசொற் பூவை, எனது
அலமரு நோக்கின் நலம்வரும் சுடர்நுதல்
பைங்கிளி எடுத்த பைங்கிளி, என்றிவை
காண்டொறும் காண்டொறும் கலங்க
நீங்கின ளோவென் பூங்க ணோளே".

இந்நூலில் பல நயமிக்க உவமைகள் பொருளுக் கேற்ற வாறு பொருத்தமுற புலவர்களால் கையாளப்பட்டுள்ளன. மேலும் அவை இனிமை மிகப் பயக்கின்றன. குரங்கு தன் மேலிருந்து பாய்வதால் வளைந்து உடனே நிமிரும் சிறிய மூங்கிற் கழை மீனெறி தூண்டில் போல் நிவந்து தோன்றும் என்று கூறியிருப்பதும், அவரையினை நிரம்பத் தின்ற மந்தி பண்ட வாணிகர் பை போலத் தோன்றும் என்று கூறியிருப் பதும், தினைத் தாள்களில் இருந்த குருவிகள் பறந்து எழுவ தும் விழுவதுமாகக் கலாபம் விரித்து ஆடிச் செல்லும் மஞ்ஞையானது பந்தாடும் மகளிர் போலத் தோன்றும் என்று பாடியிருப்பதும் இன்பம் பயப்பனவாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சிறப்புடன் விளங்கிய தமிழ் நாட்டு நகரங்கள் பற்றிய செய்திகளையும், வறியோர்க்கு வரையாது வழங்கிய வள்ளல்கள், வீரமிக்க தமிழ்ப் பெரு வேந்தர்கள் ஆகியோர் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் இந்நூலிலே காணலாம்.

பதிற்றுப்பத்து

பதிற்றுப்பத்து என்ற நூல் அகவற் பாவாலான புறப் பொருள் நூலாகும். இந்நூல் பத்துச் சேர மன்னர்களைப் பற்றியது; பத்துப் புலவர்களால் பாடப்பெற்றது. சேர மன்னர் தம் வலிமையும், அவரது ஆட்சியில் சிறந்த சிறப்புடையராக வாழ்ந்த தமிழ் மக்களின் உயர்ந்த நாகரிகமும் இதன் கண் பரக்கக் காணப்பெறும். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்முன புறநானூறு உலகத்திற்கு வேண்டிய நன்மைகளைப் பாடிற்று. பதிற்றுப்பத்து நாட்டிற்கு, அந் நாட்டின் உயிர் நிலையான மன்னனுக்குப் பாடிற்று. நாட்டு வளம், அந் நாட்டு மக்களின் வாழ்க்கை, அரசரது படைவீரம், கொடைத் திறன் முதலியவற்றினைப் பற்றி இந்நூல் பெரிதும் பேசுகின்றது. இந் நூலின் முதல் பத்தும், இறுதிப் பத்தும் கிடைக்கப் பெறவில்லை. ஏனையவற்றில் பாடப்பட்ட அரசர்களும் அவற்றைப் பாடிய புலவர்களின் பெயர்களும் முறையே கீழே தரப்பட்டுள்ளன.

இரண்டாம் பத்து—இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்—
குமட்டூர்க் கண்ணனார்.
மூன்றாம் பத்து—பல்யானைச் செல்கெழு குட்டுவன்—
பாலைக் கௌதமனார்.
நான்காம் பத்து—களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல்—
காப்பியாற்றுக் காப்பியனார்.
ஐந்தாம் பத்து—கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன்
பரணர்—
ஆறாம் பத்து—ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்;
காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்.

ஏழாம் பத்து — செல்வக் கடுங்கோ வாழியாதன்—
கபிலர்,

எட்டாம் பத்து —தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை—
அரசில் கிழார்,

ஒன்பதாம் பத்து — குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை—
பெருங்குன்றூர் கிழார்

பத்துப் பத்து அகவற் பாக்களுள்ள பத்துப் பகுதிகள் சேர்ந்து அமைந்தமையின், பதிற்றுப் பத்து என்னும் பெயர் இதற்கு அமைந்தது. இப் பாடல்களைப் பிற்கால மக்கள் அடைதற்கு இயற்கை பேருதவி புரிந்தது எனலாம். சேர நாட்டைச் சூழ்ந்துள்ள மலைத்தொடர்கள் பகைவர் தாக்குதலினின்றும் இத்தகைய நூல்களைக் காப்பாற்றிக் கொடுத்தன. சேர மன்னர்களும் தங்கள் செங்கோல் பெருமையையும் கொடைச் சிறப்பினையும் காத்து வைத்தற் பொருட்டு இந்நூலைப் போற்றி வைத்தனர். எனவே இயற்கையும் மன்னர் மரபும் போற்றி வைத்த இது போன்ற நூல்கள் பிற்காலத் தமிழ் மக்களின் உள்ளம் கவர்ந்த இலக்கியங்களாயின.

பதிற்றுப்பத்தில் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும், துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பவற்றை விளக்கும் குறிப்புக்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாட்டிலும் பொருளாற் சிறப்புடைய தொடர் ஒன்றே அப்பாட்டின் பெயராகக் காணப்படுகிறது. இந்நூலில் உள்ள நாலாம் பத்துப் பாடல்கள் அந்தாதியாக அமையப் பெற்றுள்ளன. பாட்டுடைத் தலைவனுடைய பெயரும், செயல்களும், அவனைப் பாடினோர் பெயரும், பத்துச் செய்யுட்களின் பெயரும், பாடிய புலவர் பெற்ற பரிசிலும், சேர அரசர் ஆண்ட கால அளவும் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் காணப்பெறும் பதிகத்தால் அறியமுடிகின்றது. இப்பதிகம் ஆசிரியப் பாவாகத் தொடங்கிக் கட்டுரை நடையாக முடிகின்றது. கிடைக்கப் பெறாத இரண்டு பத்துக்களைச் சார்ந்த பாடல்

களில் ஒரு சில தொல்காப்பிய உரைகளாலும் புறத்திரட்டாலும் தெரியவந்தன. இந்நூலிற்குப் பழைய உரை ஒன்று உள்ளது.

கோபம், காமம், அச்சம், பொய்ச்சொல், கடுமை முதலிய குணங்கள், இவ்வுலகிலே அறநெறியிலே செல்லும் வண்டிக்கு முட்டுக்கட்டைகளாகும் என்பதை,

"சினனே, காமம், கழி கண்ணோட்டம்,
அச்சம், பொய்ச் சொல், அன்புமிக உடைமை,
தெறல், கடுமையொடு பிறவும் இவ் வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும்"

என்ற பதிற்றுப்பத்துப் பாடல் எடுத்துக் கூறுகின்றது. இதிலிருந்து, பண்டைத் தமிழ் மக்கள் நல்லொழுக்கத்திலே நாட்டமுடையவர்களாய் விளங்கினர்கள் என்பதையும், உயிரினும் சிறந்ததாய் ஒழுக்கத்தினைப் போற்றினர் என்பதையும், அறநெறிக்கு மாறாக நடப்பதை அடியோடு வெறுத்தனர் என்பதையும் நாம் நன்கு அறிய முடிகின்றது.

பரிபாடல்

'ஓங்கு பரிபாடல்' என உயர்த்திக் கூறப்படும் இந்நூல் அகப்பொருள், புறப்பொருள் ஆகிய இரு பொருள்களையும் தழுவி எழுதப்பட்ட நூலாகும். சுருங்கக் கூறின் மதுரையின் சிறப்பினைப் பாட வந்ததே பரிபாடல். திருமால், செவ்வேள், ஆகிய கடவுளரையும், பொய்யாக் குலக் கொடியாகிய வையையையும் வாழ்த்துதலாக உட்பொருள் கொண்டு, இடையிடையே மதுரை நகர்ச் சிறப்பினையும், தமிழர்தம் பண்பு, அன்பு, காதல், வீரம், அறம் ஆகியவற்றை இந்நூல் விளக்கமுறக் கூறுகின்றது. மேலும் இந்நூல் இசை நலம் வாய்ந்தது. இன்று இந்நூலில் உள்ள பாடல்கள் இருபத்திரண்டே. இவற்றுடன் பழைய உரைகளிலே மேற்கோளாகக் காட்டப் பெற்ற இரண்டு பாடல்களும் உள. ஆனல் இந்

நூல் முதலில் எழுபது பாடல்களாலானது என்று கூறப்படுகிறது. இந்நூல் சொற்சுவை, பொருட்சுவை வாய்ந்தது. இயற்கை வருணனைகள் நிறைந்தது. பன்னூலும் பயின்ற பரிமேலழகர் இதற்கு உரை எழுதி உள்ளார். பொதுவாகக் கூறின் ஓர் ஊரின் சிறப்பைப் பாட வந்ததே பரிபாடல் எனலாம். மேலும் இந்நூலின் துணை கொண்டு நம் முன்னோர் கொண்டிருந்த கடவுளைப் பற்றிய சிறந்த கருத்துக்களையும் அறிய முடிகின்றது.

> ''தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றம்நீ
> கல்லினுள் மணியும்நீ சொல்லினுள் வாய்மைநீ
> அறத்தினுள் அன்புநீ மறத்தினுள் மைந்துநீ
> வேதத்து மறைநீ பூதத்து முதலுந்நீ
> வெஞ்சுடர் ஒளியுநீ திங்களுள் அளியும்நீ
> அனைத்தும்நீ அனைத்தின் உட்பொருளும்நீ ஆதலின்
> உறையும் உறைவதும் இலையே உண்மையு
> மறவியில் சிறப்பின் மாயமா ரனையை''

என்று கடவுளியலைப் பற்றிக் கூறும் பகுதியும்,

> ''மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
> பூவொடு புரையுஞ் சீறூர் பூவின்
> இதழகத் தனைய தெருவம் இதழகத்து
> அரும் பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்
> தாதின் அனையர் தண்தமிழ்க் குடிகள்
> தாதுண் பறவை அனையர், பரிசில் வாழ்நர்
> பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
> நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
> ஏம இன்றுயில் எழுதல் அல்லதை
> வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
> கோழியின் எழாதெம் பேரூர் துயிலே''

என்று மதுரை நகர்ச் சிறப்பினைப் பற்றிக் கூறும் பகுதியும் படித்து இன்புறுதற்குரியனவாகும். மதுரை நகரைப் பற்றிக் கூறியிருக்கும் பகுதியில், திருமாலின் திருவுந்தித் தெய்வத்

தாமரையை ஒத்துத் திகழும் மதுரை மாநகரத்தே நிரலாக அமைந்துள்ள வீதிகள் அத்தாமரையின் அகவிதழ்கள் போன் றன என்றும், அவ்வீதிகள் சூழ நடுவண் அமைந்துள்ள பாண்டிய மன்னனது மாளிகை அத் தாமரை மலரின் பொகுட்டை ஒக்கும் என்றும், அந் நகரத்தே வாழும் மக்கள் அத் தாமரையினிடத்துச் செறிந்து காணும் நறுமணப் பூந்துகளை ஒப்பர் என்றும், அந்நகரத்திற்கு வரும் பரிசிலரும் பிறரும் அப்பூவை வந்து மொய்க்கும் தேன் வண்டுகளை ஒப்பர் என்றும் உவமித்திருப்பது உள்ளத்தை அள்ளுவதாய் உள்ளது.

பண்டைத் தமிழ் மக்களின் பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்தையும் அறிவதற்கு இந் நூல் பெரிதும் உதவுகின்றது. இன்று வழக்கற்றுப் போன சொல் முடிவுகள் பலவற்றை இந்நூலிலே நாம் காணலாம். பண்டு நம்மன்னர்கள் நாட்டைக் கண்ணும் கருத்துமாகக் காத்தோம்பினர் என்பதை,

> "நின்கோல் செம்மையின்
> நாளின் நாளின் நாடு தொழுதேத்த,
> உயர்நிலை உலகத்து உயர்ந்தோர் பரவ,
> அரசியல் பிழையாது செருமேந்தோன்றி
> நோயிலை ஆகியர் நீயே"

என்ற பாடலின் மூலம் நாம் அறியலாம்.

**கலித்தொகை**

கலித்தொகை என்னும் நூல் குடும்ப வாழ்க்கையின் போக்கினைச் சித்திரித்துக் காட்டுவதற்கு எழுந்ததாகும். மக்கள் வாழ்க்கையின் உயர்ந்த பண்புகளும், ஒரொரு தாழ்ந்த பண்புகளும் இதன்கண் இடம் பெற்றுள்ளன, இது அகப்பொருள் நுதலியதாயினும், பாடல் வகையால் ஏனை அகப்பொருள் நூல்களினின்றும் வேறுபட்டதாகும். இதனைத்

தொகுத்தவர் நல்லந்துவனார் என்ற ஆசிரியராக இருத்தல் வேண்டும் என்பது கலித்தொகை இறுதியில் காணப்படும் வாசகத்தாலும், 'நல்லந்துவனார் கலித்தொகை' எனவழங்கும் வழக்கச் சொல்லாலும் தெரிய வருகின்றது. நூல் முழுவதும் ஒத்தாழிசைக் கலிப்பாவால் ஆகியதால் கலித்தொகை என்னும் பெயருடையதாயிற்று. கடவுள் வாழ்த்து உட்பட நூற்றைம்பது பாடல்களால் ஆயது. கடவுள் வாழ்த்துச் செய்யுளைப் பாடியவர் மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் ஆவார். சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ, கபிலர், மருதனிளநாகனார், சோழன் நல்லுருத்திரன் என்போர் இந்நூலில் முறையே பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி இவற்றைப் பாடியுள்ளனர். நெய்தற்கலி, கடவுள் வாழ்த்துப்பாடல் நல்லந்துவனாரால் பாடப்பெற்றுள்ளது. கற்றோர் ஏத்தும் கலித்தொகையின் சிறப்பைப் பின்வரும் பாடலால் அறியலாம்:

"திருத்தகு மாமுனிசிந் தாமணி கம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்-திருக்குறளோ
கொங்குவேள் மாக்கதையோ கொள்ளேம்
நனியார்வேம்
பொங்குகலி யின்பப் பொருள்."

கலித்தொகைப் பாடல்கள் அனைத்தும், சொற்சுவை, பொருட் சுவை, இசைச் சுவை முதலியன ஒருங்கு வாய்க்கப் பெற்றுள்ளன. இந்நூலுக்கு உரை கண்டவர் நச்சினார்க்கினியர். படிப்பவர் தம் உள்ளத்தைப் பறிகொடுக்கும் அளவிற்கு இன்பம் பயக்கும் பாக்கள் பல இந்நூலில் உள்ளன.

இயற்கைக் காதல் தோன்றிய வகையினைப் பற்றி இந்நூல் அழகுறக் கூறுகின்றது. ஒரு தலைவி தான் விரும்பும் தலைவன் யார் என்பதைத் தன் தோழியிடம் பின் வருமாறு கூறுகின்றாள். வளையலை அணிந்த தோழியே! எனது மனத்தைத் திருடியவன் யார் தெரியுமா? முன்பு நாம் தெருவில் விளையாடும்போது, நாம் கட்டும் மணல் வீட்டைக் காலால்

உதைத்துக் கலைத்தும், பின்புறமாக வந்து நின்று நம் தலையில் சூடியிருக்கும் மாலையை அறுத்தும், நாம் விளையாடும் பந்தைத் தூக்கிச் சென்றும், இவ்வாறு நாம் வருந்தும்படி குறும்புத்தனம் செய்த அந்தச் சிறிய பட்டிப் பையனைத் தான் நீ அறிவாயே? முன்னொருநாள் செய்த குறும்பினைக் கேட்பாயாக! நானும் என் அன்னையும் வீட்டினுள் இருந்தோம். அதுகால் அவன் வந்து உண்ணும் நீர் வேண்டும் என்றான். என் அன்னை அவனுக்குப் பொன் தகட்டாலே செய்த செம்பிலே குடிநீரைக் கொண்டு போகும்படி என்னைப் பணித்தாள். நானும் வந்திருப்பவன் இன்னான் என்று அறியாது நீர் கொண்டு சென்றேன். என்னைக் கண்ட அவன் பெருமகிழ்வுற்று வளையலை அணிந்த என் முன்கையைப் பற்றி அழுத்தினான். நான் எதிர்பாராத இச் செயலால் "அம்மா இவன் செய்வதைப் பார்" எனக் கூச்சலிட்டேன். அன்னையும் அலறிப் புடைத்துக்கொண்டு அங்கு வந்தாள். உடனே நான் நிகழ்ந்ததை மறைக்க எண்ணி அவன் நீர் விக்கினான் என்றேன். அதனைக் கேட்ட அன்னை அவன்மீது பரிவு கொண்டு, நீர் விக்காதபடி அவன் முதுகைத் தடவிக் கொடுத்தாள். ஆனால் அக்கள்வன் மகனோ என்னைக் கொல்லுகின்றவனைப் போலே தன் கடைக் கண்ணால் பார்த்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான்". இதனைப் புலவர்,

"சுடர்த் தொடீஇ கேளாய்! தெருவில் நாம் ஆடும்
மணல் சிற்றில் காலிற்சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி; மேல் ஓர் நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே,
உண்ணு நீர் வேட்டேன் எனவந்தாற்கு ; அன்னை
அடர் பொன் சிரகத்தால் வாக்கிச் சுடர் இழாய் !
உண்ணு நீர் ஊட்டிவா என்றாள் ; என, யானும்
தன்னை யறியாது சென்றேன், மற்று என்னை
வளைமுன் கைபற்றி நலியத், தெருமந்திட்டு,
அன்னாய் ! இவன் ஒருவன் செய்தது காண்! என்றேனா;

அன்னை அலறிப் படர் தரத், தன்னையான்
உண்ணு நீர் விக்கினான் என்றேனா; அன்னையும்
தன்னைப் புறம் அழித்து நீவ, மற்று என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி, நகைக்கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன்''

என்று படிப்பவர் மனத்தை விட்டு அகல முடியாத வகையில் சுவைபடச் சித்திரித்துள்ளார். இது போன்ற பாடல்கள் பல இந்நூலில் காணப்படுகின்றன.

**அகநானூறு**

மக்களின் ஐந்திணை ஒழுக்கமும் அழகுபட இதன்கண் கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூறு பாடல்களால் கூறப் படுகின்றது. இதனைத் தொகுத்தவர் உருத்திரன் சன்மன் என்பவர் ஆவார். உக்கிரப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் தொகுப்பித்தவன் என்பர். இந்நூல் களிற்று யானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக் கோவை என்ற முத் திறப் பாகுபாடு உடையது. அகப்பொருள் நூல்களில் காலத்தால் முற்பட்டது அகநானூறு ஆகும் என்பது ஒரு சில அறிஞர் கருத்தாகும். அகம் என்று இதனை அழைத்த முறையே மக்கள் இதனைச் சிறப்பாகப் போற்றியதற்கு அறி குறியாகும். உள்ளத்தின் துடிப்புக்களை உள்ளவாறே சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அழகு இந்நாலுக்கே உரிய தனிச் சிறப்பாகும். அகநானூற்றுப் பாடல்கள் அகப் பொருளோடு புறப் பொருட் செய்திகளையும் கூறுகின்றன. எனவே தமிழர் தம் பண்டை நாகரிகத்தை அறிவதற்கும், தமிழக வரலாற்றைத் தெரிவதற்கும் இந்நூல் சிறந்ததொரு கருவி யாக விளங்குகின்றது. தமிழக வேந்தர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் இவர்களது வாழ்க்கை வரலாறு கள், அவர்கள் செய்த போர்கள், பெற்ற வெற்றிகள், பண்டு நம் பைந்தமிழ் நாட்டிலே சிறந்து விளங்கிய ஊர்கள், துறை முகங்கள் ஆகியவை பற்றிய செய்திகள் ஆகிய அனைத்தும் இந்நூலிலே காணப்பெறுகின்றன. அகநானூற்றுப்

பாடல்கள் யாவும் மிகவும் சுவையுள்ளனவாகும். குறிஞ்சி நில வொழுக்கமாகிய களவு மணத்தின் அடிப்படையான முதல் சந்திப்பைப் பற்றி இந்நூலில் காணும் பாடலொன்று,

"மலிபூஞ் சாரல் என்தோழி மாரோடு
ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழிப்
புலிபுலி யென்னும் பூசல் தோன்ற;
ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசிபோகிய சூழ்செய் மாலையன்,
பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்.
குயம் மண்டு ஆகம் செஞ்சாந்து நீவி,
வரிபுனை வில்லன், ஒரு கணை தெரிந்துகொண்டு
யாதோ மாற்றம்; மாதிறம் படர்என,
வினவி நிற்றந் தோனே; அவன் கண்டு
எம்முள் எம்முள் மெய்ம் மறைபு ஒடுங்கி
நாணி நின்றெனம் ஆகப் பேணி
ஐவகை வகுத்த கூந்தல், ஆய்நுதல்
மையீர் ஓதி மடவீர்! நும் வாய்ப்
பொய்யும் உளவோ என்றனன்; பையெனப்
பரிமுடுகு தவிர்த்ததேரன் எதிர் மறுத்து,
நின்மகள் உண்கண் பன்மாண் நோக்கிச்
சென்றோன் மன்றஅக் குன்று கிழவோனே"

என்று தோழி செவிலித்தாய்க்குக் கூறுவது போலக் காணப் படுகின்றது. இதன் பொருள் வருமாறு: "பூக்கள் நிறைந்த மலைச் சாரலிலே நாங்கள் வேங்கை மலர் கொய்வதற்காகப் போனோம். 'புலி, புலி' என்று வேடிக்கையாகக் கூறி ஆரவாரம் செய்து கொண்டே மலர் கொய்து கொண்டிருந்தோம். அதுகால் மாலையை அணிந்தவனும் கையிலே அம்பு தொடுத்த வில்லை ஏந்தியவனுமாகிய வீரனொருவன் அங்கு வந்து 'எங்கே புலி?' 'அது எத்திசையில் சென்றது?' என்று கேட்டனன். நாங்கள் நாணத்தினால் வாய் திறவாது கண் புதைத்து நின்றோம். அதனைக் கண்ட அவன் 'உங்கள் வாயினால் பொய் சொல்வதும் உண்டோ?'

என்று வினவி, பின்னர் எங்களை நேரே பார்த்தலோடமை யாது, உன் மகளின் மையுண்ட கண்களைப் பல முறை நோக் கினான். உன் மகளும் அவனை நோக்கினாள்." இதுபோன்ற சுவை மிக்க பல பாடல்களை அகநானூற்றிலே காணலாம்.

## புறநானூறு

புறப்பொருள் பற்றி எழுந்த நூற்களுள் ஒன்றான புற நானூற்றின் கண் அரசன் முதல் ஆண்டிவரையில், கிழவோர் முதல் இளையோர் ஈறாக, ஆடவரும் பெண்டிரும், குலம், தொழில் வேறுபாடின்றிப் பாடிய பாடல்கள் விளங்குகின் றன. வாழ்க்கையைப் பற்றிய ஒவ்வொரு துறையிலும் பாடல்கள் எழுந்தன. இப்பாடல்களை நோக்குங்கால், இவற்றைப் பாடிய மக்கள் எவ்விதச் செயற்கை முயற்சியு மின்றி இயற்கை உணர்வு மிக்குப் பாடிய சிறந்த வாழ்க்கைப் பாட்டுக்களாகப் புலப்படுகின்றன. மக்கள் வாழ்க்கை பாட்டிலே இயங்கிற்று. நண்பர்கள் பாட்டிலே பேசிக் கொண்டனர். அரசன் பாட்டின் மிடுக் கிலே உணர்வும் உரமும் பெற்றுப் பகைவர்களைத் தாக்கினான். வெற்றி வெறியிலே இறுமாந்து கிடந்த மன்னனை, உலக வாழ்வின் உண்மையைக் குடைந்து பார்த்த சாதாரணப் புலவன் நிலையாமையை அறிவுறுத்தி அறவழியிலே அமைதி பெறச் செய்தான். இத்தகைய உணர்வின் உயிர்ப்பு என்று ஞான்றும் வாழ்க்கையில் தொடர்ந்து இருப்பதில்லை. எனவே ஒரொருகாலை உணர்வால் உந்தப் பட்டு உண்மை பொங்கி வெளிப்படுகின்ற காலத்திலேதான் புலவன் பாடினான். எனவே அக்காலப் புலவன் உணர்வை வேண்டி அழைத்து உழன்று பாடி ஆயிரமாயிரமாகப் பாட்டுக்களைச் சொற் கோவையாக யாத்து இலக்கியம் அமைத்தானில்லை. புலவன் வாழ்க்கையிலே சாதாரணமாகக் குறைந்த பாக் களே பாடினான். எனவே பழங்கால மக்கள் வாழ்விலிருந்து இலக்கியம் திரட்ட முயன்ற மக்கள் அன்னார்தம் வாழ்க்கை யிலே நண்பர்களோடு நண்பர் அளவளாவுகின்ற அன்பிற்கும்,

அரசனையும் தம் ஆணையின்கீழ் ஆட்சி செய்த ஞானியர்களின் உண்மைக்கும், கற்புடை மடந்தையர் கனையெரி புக்க காலத்து உளமுருகிக் கனிந்த உள்ளன்பிற்கும் அறிகுறியாகக் கிடைத்த அன்னார்தம் பாக்களைத் திரட்டுதலே தங்களுக்குரிய உயரிய இலக்கியமாக அமையும் என்றெண்ணி, வாழ்க்கையைச் சிய்த்து வளமிக்க உண்மைகளைத் தொகுத்து வைத்தனர். இவ்வாறு தொகுக்கப்பட்டதே புறநானூறு என்ற புறப்பொருள் நூலாயிற்று. இதன்கண் வாழ்க்கையின் எல்லாவிதக் கூறுபாடுகளும் பாடல்களாக மிளிர்கின்றன. உலக முழுவதும் ஒருங்கே ஒப்பற்ற அன்பிற் கலந்து வாழ, அக்காலப் புலவன் அகங்கனிந்து பாடிய ஆன்மநேய ஒருமை இதன் மூலம் ஊடுருவிப் பாய்ந்து இதற்கு உயிர் நாடியாக விளங்குகிறது. எனவே உலக முழுமைக்கும் உரியதாகப் பரந்து பாய்ந்த தமிழ் மக்களின் உயரிய நோக்கத்திற்குப் புறநானூறு ஓர் அறிகுறியாகும். புறநானூற்றுப் பாடல்களைப் பாடிய புலவர்கள் நூற்றைம்பத்தேழுக்கு மேற்பட்டவர்கள். நூற்றிருபத்தொன்பது பேர் பாட்டுடைத் தலைவர்கள். இப்பொழுதுள்ள முன்னூற்றுத் தொண்ணூற்றெட்டுப் பாடல்களில் பதினான்கு பாடல்களின் ஆசிரியர் பெயர் தெரிவதற்கில்லை. சுருங்கக் கூறின், புறநானூறு தமிழர்தம் இலக்கியக் கருவூலமாகும்; தமிழ் இலக்கியத்தின் அணையா விளக்காகும். பண்டைத் தமிழர்தம் பண்பாட்டுச் சேமிப்பு என்று கூறினும் அது மிகையன்று. தமிழர் பெருமையை, வரலாற்றை, பண்பாட்டை இத் தரணிக்கு எடுத்துக் காட்டும் ஒரு தலை சிறந்த நூலாகும். பின்வரும் புறநானூற்றுக் கருத்துக்கள் இவ்வுண்மையினை நன்கு எடுத்துக் காட்டும்.

"எல்லா ஊர்களும் எம்முடைய சொந்த ஊர்கள்; எல்லா மக்களும் எம்முடைய உறவினர்கள்; நன்மையும் தீமையும் பிறரால் வருவன அல்ல; அவைபோலத்தான் இன்புறுவதும் துன்புறுவதுங்கூட; சாவு புதியதன்று. அது இயற்கையே; எனவே இவ்வுலக வாழ்வு இனிமையானது

என மகிழவும் மாட்டோம்; கொடிய சினத்தால் துன்பமுடையது என்று எண்ணவும் மாட்டோம்.'' இவைகளே தமிழர் தம் வாழ்க்கைக் குறிக்கோள்களாகும். இதனைக் கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர்,

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்,
தீதும் நன்றும் பிறர்தர வாரா,
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னாது என்றலும் இலமே''

என்று திறம்படக் கூறியுள்ளார். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று தமிழன் கண்ட உண்மை உலகெங்கணும் பரவுமாகில் உலகம் நிலைத்து வாழ முடியும்; போர்வெறி ஒழியும்; இனவெறி மறையும், சாதி வெறி நீங்கும். உலகெங்கணும் அமைதி நிலவும்; அன்பு தழைக்கும்; அறம் வளரும்; 'இன்பம்! இன்பம்! எங்கும் இன்பமே!' என்று எண்ணி இறும்பூதெய்தலாம்.

அரசியலின் சிறப்பையும், அரசனுடைய கடமையையும் பற்றி மோசிகீரனார் என்னும் புலவர்,

''நெல்லும் உயிர்அன்றே, நீரும் உயிர் அன்றே.
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் ;
அதனால் ; யான்உயிர் என்பது அறிகை
வேல் மிகுதானை வேந்தற்குக் கடனே''

என்று நமது சிந்தையைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் பாடியுள்ளார். 'நான்தான் இவ்வுலகத்திற்கு உயிர்' என்று பைந்தமிழ் நாட்டை ஆண்ட ஒவ்வொரு மன்னனும் எண்ணிய காரணத்தினால்தான் பண்டு நம் பைந்தமிழ் நாடு ஏற்றமும் எழிலும் கொண்டு இன்பப் பெட்டகமாய் விளங்கியது. மேலும் அரசாட்சியின் வெற்றி சிறந்த அறநெறியைத்தான்

அடிப்படையாகக் கொண்டிலங்க வேண்டும் என்று அவர்கள் கருதினர். இதனை,

"கடுஞ் சினத்த கொல்களிறும்,
கதழ் பரிய கலிமாவும்,
நெடும் கொடிய நிமிர்தேரும்,
நெஞ்சுடைய புகல் மறவரும், என
நான்குடன் மாண்டது ஆயினும்,
மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

என்று மதுரைமருதன் இளநாகனர் என்ற புலவர் நயம்படப் பாடியுள்ளார்.

பண்டைத் தமிழ் மன்னர்கள் அறப் போரே ஆற்றினர். தக்க காரணமின்றிப் போர் தொடுத்தலில்லை. மேலும் அவர்கள் போரால் மக்களுக்கு இன்னல் ஏதும் ஏற்படாத வாறு பாதுக்காக்கவும் செய்தனர். இதனை, பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமி என்பவனைப் பற்றி நெட்டிமையார் என்னும் புலவர் பாடிய பின்வரும் பாட்டால் அறியலாம்.

"ஆவும் ஆன்இயல் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்-
தென்புலம் வாழ்நருக்கு அரும்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறுஅதிரும்
எம் அம்பு கடிவிடுதும், நும் அரண் சேர்மின், என
அறத்தாறு நுவலும் பூட்கை, மறத்தின்
கொல்களிற்று மீமிசைக் கொடி விசும்பு நிழற்றும்
எம்கோ! வாழிய குடுமி!"

எந்த முறையில் வாழ்ந்தால் இவ்வுலகில் வாழும் எல்லா மக்களும் இன்புற்று வாழலாம் என்பதைப் பின்வரும் பாடல் கூறுகின்றது.

"உண்டால் அம்ம ! இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவு இலர் ;
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர், அயர்விலர் ;
அன்ன மாட்சி அனையராகித்
தமக்கென முயலா நோன் தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே".

எல்லோரும் இன்புற்றிருக்க வழிகாட்டும் இப்பாடலைப் பாடியவர் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி யாவார். இவை போன்ற பல உயர்ந்த கருத்துக்களைப் புறநானூற்றிலே காணலாம்.

இதுவரை எழுதியவாற்றால் பண்டைத் தமிழ் வேந்தர்களின் ஆட்சி முறை, நீதிமுறை, போர்ச் செய்திகள், வாணிகம், தொழில்கள், கலைகள், பண்டைத் தமிழ்மக்களின் மணவாழ்வு, சமுதாய வாழ்வு, அவர்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகிய பலசெய்திகளையும் உலகினர்க்கு எடுத்துக்காட்ட வல்லன எட்டுத்தொகை நூல்கள் என்பது எளிதிற் பெறப்படும். மேலும் தமிழ்ப் புலவர்களை மன்னரும் செல்வரும் போற்றிப் புரந்த செய்திகளையும், புலவர்கள் மன்னர்கள் தவறிழைத்தால் அஞ்சாது அறமுரைத்து அவர்களை நல்வழிப் படுத்திய செய்திகளையும் இந்நூல்களிலே பரக்கக் காணலாம்.

# 7. பட்டினப்பாலை

## பத்துப்பாட்டில் பட்டினப்பாலை

பவளமும் முத்தும் கொழித்த பாண்டி வளநாட்டை ஆண்ட பண்புடைப் பாண்டிய மன்னர்கள், முச்சங்கங்கள் கூட்டி முத்தமிழையும் வளர்த்தனர் என்பது நாடறிந்த செய்தியாகும். சந்தனப் பொதியநாட்டில் சங்ககாலத்திலே சான்றோர் பலர் பாட்டியற்றி, பாரோர் வியக்கும் வண்ணம் பைந்தமிழை வளர்த்தனர். சங்கப் புலவர்கள் பாடிய பாக்கள் பிற்காலத்தில், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய இரு தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டன.

பத்துப்பாட்டு என்னும் தொகை நூலில் பத்து நூல்கள் அடங்கியுள்ளன. அவையாவன: தித்திக்கும் தீந்தமிழால் ஆன திருமுருகாற்றுப்படை, பொன்றாச் சிறப்புடைய பொருநராற்றுப்படை, செந்தமிழ் நலஞ்சான்ற சிறுபாணாற்றுப்படை, பெறற்கு அருந்தொல் சீர்ப் பெரும்பாணாற்றுப்படை, முல்லைசான்ற முல்லைப்பாட்டு, மதுரத் தமிழால் ஆய மதுரைக்காஞ்சி, நெடுஞ்செழியன் புகழ்பாடும் நெடுநல்வாடை, குறிஞ்சியின் குன்றா அழகைக் கூறும் குறிஞ்சிப் பாட்டு, பட்டினத்தின் பாங்கினைக் கூறும் பட்டினப்பாலை, மலையின்கண் பிறந்த ஓசையின் மாண்பினைக் கூறும் மலைபடுகடாம். இந்நூல்களை,

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வள மதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல் குறிஞ்சி
பாலை கடாத் தொடும் பத்து"

என்று பாடலொன்று தொகுத்துக் கூறுகின்றது.

## பட்டினப்பாலை பாடிய பாவலர்

பைந்தமிழ்ப் புலவர் போற்றும் பத்துப்பாட்டில் ஒன்பதாவது பாட்டாக விளங்கும் பட்டினப் பாலையைப் பாடியவர் கன்னித் தமிழ் வளர்த்த கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆவார். பத்துப்பாட்டில் காணும் மற்றொரு நூலாகிய பெரும்பாணாற்றுப்படை ஆசிரியரும் இவரே ஆவார். தனக்குப் பாமாலையாக பட்டினப்பாலையை வனைந்த இப்பாவலரை களிறனைய கரிகாற்பெருவளத்தான், பாட்டுடைத் தலைவன் என்ற முறையில் பதினாறு நூறாயிரம் பொன்னைப் பரிசாக அளித்துப்பாராட்டினான். இதனை,

"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன்
பத்தொடாறு நூறாயிரம் பெறப்
பண்டு பட்டினப்பாலை கொண்டதும்"

என்று கவிநயமுடைய கலிங்கத்துப் பரணியும்,

"பாடிய பாக்கொண்டு பண்டு பதினாறு
கோடி பசும்பொன் கொடுத்தோனும்"

என்று சங்கரசோழன் உலாவும்,

"பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டாற் பதினாறு
கோடி பொன் கொண்டது நின்கொற்றமே"

என்று தமிழ்விடு தூதும் சுட்டிக் காட்டியுள்ளன.

## வஞ்சி நெடும்பாட்டு

பட்டினப்பாலை 301 அடிகளை உடையது. இது பெரும்பாலும் வஞ்சியடிகளால் அமைந்து, ஆசிரிய அடிகளால் முடிகிறது. வஞ்சி நெடும் பாட்டெனவும் இது வழங்கப்பெறுகிறது. உச்சி மேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் இதற்கு

நல்லதொரு உரை வகுத்துள்ளார். அத்துடன் அவர் இப்பாட்டினை வஞ்சிப்பாவின் இடையளவிற்கு எல்லையாகக் காட்டுவார்.

பட்டினம் + பாலை

பட்டினப்பாலை என்பது, பட்டினம், பாலை ஆகிய இரு சொற்களைக் கொண்ட ஒரு தொடராகும். காவிரிக்குக் கரையமைத்து, கன்னித்தமிழ் வளர்த்த சோழப் பெருவேந்தன் கரிகாலனது தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தை இது சிறப்பித்துக் கூறுகின்றது. மேலும் குறிஞ்சி, முல்லை, பாலை மருதம், நெய்தல் ஆகிய அகனைந்திணை ஒழுக்கத்தில் இடைநின்ற பாலை ஒழுக்கத்தின் உயர்வினை இது சுட்டிக்காட்டுகின்றது. எனவேதான் இப்பாட்டிற்குப் பட்டினப்பாலை என்று ஆசிரியர் பெயர் சூட்டினார். அதாவது, ஆசிரியர் இருபொருள்களைப் பற்றி இந்நூலில் பாடக் கருதினார். ஒன்று புறத்தே கட்புலனுக்கு உருவாய்த் தோன்றும் பட்டினத்தின் பாங்கு; மற்றொன்று அகத்தே உயிர் உணர்விற்குப் புலனாய் அருவாய்த் தோன்றும் பாலை ஒழுக்கம். எனவேதான் இவ்விரு பொருள்களையும் நுட்பமாக இணைத்து ஆசிரியர் இதற்குப் பட்டினப் பாலை என்னும் பெயர் சூட்டினார் போலும்!

மற்றொரு சிறப்பும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். ''வசையில்புகழ் வயங்குவெண் மீன்'' என்று நூலைத் தொடங்கி, இருநூற்றுப் பதினெட்டு வரிகளில் பட்டினத்தின் சிறப்பினைச் சித்திரிக்கும் முகத்தான் ஆசிரியர் முதலில் படிப்போர்தம் மனத்தை, அறிவை ஓர் ஒழுங்குறச் செய்து விளக்கி உள்ளார். அதன் பின்னர் அவ்வறிவின் மேம்பட்ட அகவுணர்வை,

''வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே''

என்று இரு அடிகளில் அவர் விளக்கி உள்ளார். அத்துடன் அவர் நின்று விடவில்லை. இடையிற் கருக்கொண்ட அக் கருப்பொருளை,

"வேலினும் வெய்ய கானமவன்
கோலினும் தண்ணிய தடமென் ருேளே"

என்னும் நூலின் இறுதி அடிகளோடு ஆசிரியர் இணைத்துக் காட்டியிருப்பது ஈடும் இணையுமற்றதாகும்.

நல்லிசைப் புலவரது சீரிய செயல் ஒரு வழிப்படாது சுற்றித் திரியும் நமது அறிவை ஓர் ஒழுங்குப்படுத்தி, நமக்குச் சிறந்த உணர்வு ஊட்டலே ஆகும். அதாவது உண்மைத் தன்மையினை நமது அறிவுக்கு விளங்குமாறு அவர்கள் செய்ய வேண்டும். பட்டினப்பாலை பாடிய பாவலரும் இதனை மனத்திலே கொண்டு. நமது அறிவினை அங்குமிங்கும் செல்லாது தடுத்தற்பொருட்டு, புறப்பொருள்களுள் சிறந்த காவிரிப்பூம் பட்டினத்தை—அதன் வளத்தை — அதன் எழிலை — அதன் சிறப்பை—நமது அறிவு விரும்பிக் கொள்ளும் வண்ணம் கவினுற எடுத்துக் காட்டியுள்ளார். பொதுவாக வரம்பின்றிப் பல உலகியற் பொருள்களிடத்துச் சென்று, சென்று பழக்கப்பட்ட அறிவினை ஒரு சிறந்த பொருளினை நாம் பற்றுமாறு செய்யின், அது அடங்கி, ஒடுங்கி, ஓரளவு ஆற்றலுடன் விளங்கும். அதுகால், ஒரு பொருளைப் பற்றிக் கொள்ளும். இந்நிலையில்தான் ஆசிரியர், புறப்பொருளை முதலில் கூறி, நமது அறிவை இழுத்துச் சென்று, அடுத்து அகப்பொருள் ஒழுக்கத்தை,

"வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே"

என்று இரண்டடிகளில் சுருக்கிக் கூறி, அதனிடத்துப் பதிய வைத்துள்ளார். இங்கு காணும் ஆசிரியரது உளவியல் திறம்

உளமாரப் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி ஆசிரியர் முதலில் சிறந்த புறப்பொருளாகிய பட்டினத்தின் பாங்கினைப் பாடியதோடு, நூற்பெயரின் முதற் பகுதியைப் "பட்டினம்" என்றும் அமைத்துள்ளார்.

இப்பாடலில் பேசப்படும் அகவொழுக்கம், அன்பினைந் திணையுள் ஒன்றாகிய பாலை ஒழுக்கமாகும். பாலை என்பது பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகும். தனது மனத்திற்கு இனியாளை மணந்து, இல்லிருந்து, இனிய இல்லறத்தை மேற்கொண்ட தலைவன் பொருளீட்டுவதற்காக வேற்று நாட்டிற்குச் செல்லக் கருதி, அதனைக் குறிப்பால் தலைவிக்கு உணர்த்த, அவள் கலங்கி, கண்ணீர் உகுத்து, அலைகடல் துரும்பென அவநியுற்றாள். அதனைக் கண்ட தலைமகன் தனது நெஞ்சை நோக்கி,

"கண்டோர் காமுறும் காவிரிப்பூம் பட்டினத்தைப்

பெறுவோனெனினும், தண்ணளி செய்யும் தலைவியைப் பிரிந்து, "செந்நெருப்பினைத் தகடு செய்து பார் செய்த தொக்கும்" பாலை நிலத்தைக் கடந்து வாரேன்" என்று கூறித் தான் பிரிந்து செல்லுதலைத் தவிர்த்தான். ஆனால் இவ்வாறு செலவினை மேற்கொள்ளாதது, இப்போது ஆற்றாளான தலைவியைப் பலதிறத்தானும் அறிவுறுத்தி ஆற்றிப் பின் பிரிதற்கே ஆகும். எனவே தலைவன் இப்போது பிரிந்து செல்வதை நீக்கியது பின் பிரிந்து செல்வதற்குக் காரணம் ஆதலின், இந்நூல் பிரிதல் நிமித்தத்தின் கண் வந்து பாலை ஒழுக்கத்தைக் கூறுவதாயிற்று. எனவே இந்நூலின் பெயரின் பிற்பகுதி 'பாலை' என்ற சொல்லைக் கொண்டுள்ளது. இவ்வாறாக நூலின் பெயர், பாட்டின் பெயர், பட்டினப்பாலை ஆயிற்று. இப் பெயர் இந்நூலிற்கு மிகமிகப் பொருந்தி உள்ளது.

பாலை என்னும் அகவொழுக்கத்தோடு தொடர்புடைய புறவொழுக்கம் வாகையாகும் இதனை,

"வாகைதானே பாலையது புறனே"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் நாம் அறியலாம். வாகை என்பது, ஒருவரின் திறத்தை, சிறப்பை விளக்குதல் ஆகும். பாலை என்பது, தலைமகன் தலைவியிடத்து வைத்துள்ள அன்பினை வென்று, பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்தோரிடத்திற்குச் செல்வதை உணர்த்துவது ஆகும். எனவே அகத்தே நிகழும் அன்பை வெற்றிகாணும் பாலையும் புறத்தே நிகழும் பகைவர் ஆற்றலை வெற்றி காணும் வாகையும் தம்முள் ஒப்புமையுடையனவாக விளங்குவதை நாம் காணஇயலும். அத்துடன் பாலை ஒழுக்கத்தைப் பேசும் இந்நூலின்கண் கரிகாற்சோழன் தனது பகைவர் அனைவரையும் அடியோடு அழித்து, வெற்றி வேந்தனாய்ச் செங்கோல் செலுத்திய வாகை என்ற புறவொழுக்கம் கூறப்பட்டிருப்பது இங்கு எண்ணுவதற்கு உரியது ஆகும். இவ்வாறு பாலையின் பண்பும், வாகையின் ஒழுக்கமும் பொருத்தமாக இப்பாடலில் இணைக்கப்பட்டு விளக்கப்பட்டிருப்பதால், அதாவது புறமும் அகமும் இயைபுபட எடுத்தோதப் பட்டிருப்பதால், இப்பாட்டிற்குப் பட்டினப்பாலை என்னும் பெயர் அமைந்துள்ளது முற்றிலும் பொருந்துவதாகும்.

## நூலில் பேசப்படும் பொருள்கள்

ஆற்றுச் சிறப்பு (காவிரி), நாட்டுச் சிறப்பு (சோழநாடு), நகரச் சிறப்பு (காவிரிபூம் பட்டினம்)—புறநகர்ச் சிறப்பு. காவிரித்துறையின் காட்சி, செம்படவரின் வாழ்க்கை, அங்காடியின் சிறப்பு. வாணிகவளம், மக்களது பண்பட்ட வாழ்க்கை— நகரத்தலைவனது சிறப்பு(கரிகால் வளத்தான்)— பெருமை, வீரம், கொடை, ஆற்றிய நாட்டுப்பணிகள்—ஆகியன இப்பாட்டில் பேசப்படும் பொருள்கள் ஆகும்.

### சோழநாட்டின் செவிலி

"சோழநாடு சோறுடைத்து" என்பதொன்றே சோழ நாடு எஞ்ஞான்றும் வளம் படைத்த நஞ்சை சூழ் நாடென்பதை இனிது விளக்கும். இத்தகைய வளமார்ந்த சோழநாடு முதலில் ஆசிரியரால் காட்டப் பெறுகின்றது.

சோழநாட்டின் வளத்திற்குக் காரணம் அதற்கு அருள் சுரந்து அதனைப் புரக்கும் செவிலியாகிய காவிரி ஆறே ஆகும். வெண்மீன் தான் இருப்பதற்குரிய வடதிசையில் இருக்காது, மாறாக வடக்கேயிருந்து தெற்கே சென்றாலும், தானே பாடித் திரியும் மழைத் துளியை உணவாகக் கொள்ளும் வானம்பாடி வருந்தும்படி வான் பொய்த்துவிட்டாலும், அக்காவிரியாறு தான் பொய்யாது மேற்கே உள்ள குடகு மலையில் பிறந்து, கிழக்குக் கடலிலே கலக்கும். இதனைப் பாட்டின் பாவலர்,

"வசையில் புகழ் வயங்குவெண்மீன்
றிசை திரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான் பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி"

என்று பாராட்டி உள்ளார்.

### சோழநாட்டின் வளம்

வற்றாத காவிரியின் புனல் பரந்து எங்கும் பொன் கொழிக்கும். கழனிகளில் கரும்பு செழித்து ஓங்கி வளரும். அக் கரும்பினை மக்கள் வெட்டிச் சாறு பிழிந்து ஆலைகளில் காய்ச்சுவர். கரும்பு ஆலைகளினின்று எழும் புகை நெய்தற் பூக்களை வாடச் செய்யும்.

கழனிகளிலே விளைந்திருக்கும் செந்நெற் கதிர்களை மேயும் பெரிய வயிற்றையுடைய எருமையின் கன்றுகள்

வயிரூரத் தின்று நெற்களஞ்சியங்களின் நிழலிலே இனிமையாக உறங்கும். இதனை,

"காய்ச் செந்நெற் கதிரருந்தி
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில் வதியும்"

என்று ஆசிரியர் நகைச்சுவை ததும்பும் வண்ணம் எடுத்துக் காட்டியுள்ளார்.

மேற் கூறியவாறு குறைபாத வளமுடைய குறும் பல்லூர்களைக் கொண்டது சோழநாடு. அவ்வூர்களிலுள்ள கழனிகளில், குலையினையுடைய தெங்கினையும், குலைவாழைகளையும், காய்க் கமுகினையும், மணநாறும் மஞ்சளினையும், இனமான மாமரங்களினையும், குலைகளையுடைய பனையினையும், அடிபரந்த சேம்பினையும், முளை இஞ்சியினையும் செழிக்கக் காணலாம்.

## பட்டினத்தின் பாங்கு

### செல்வ வளம்

நாட்டின் நலத்தினைக் கூறிய நல்லாசிரியர் அடுத்து பட்டினத்தின் பாங்கினைக் கூறியுள்ளார். முதலில் பட்டினத்தின் பாக்கங்களில் வாழும் மக்களின் செல்வச் சிறப்பு ஆசிரியரால் கூறப்பட்டுள்ளது. ஒளிநுதலினையும் மடநோக்கினையும் பொன்னாற் செய்த பூணினையும் உடைய மகளிர் செல்வம் அகன்ற மனையினது முற்றத்தில் உலருகின்ற நெல்லைத் தின்னுங் கோழியை பொன்னாற் செய்த மகரக் குழையை எறிந்து ஓட்டினர். அக்குழையானது பொற்பூண் அணிந்த தாளினையுடைய சிறார், குதிரை பூட்டாமல் கையால் உருட்டும் மூன்று உருளைகளையுடைய சிறு தேரினது வழியிற் கிடந்து அதனை மேலே செல்லாதவாறு தடுக்கும். அத்துடன் கோழியைத் துரத்தக் குழையை அந்நாட்டு மகளிர்

எறிந்தனர் எனில், அந்நாட்டு மக்களது செல்வ வளத்தை என்னென்று கூறுவது? இதனை,

"...வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கி
னேரிழை மகளி ருணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டு
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்"

என்று ஆசிரியர் நயம்படக் கூறியுள்ளார்.

**சோலைகளும் நீர்நிலைகளும்**

பந்தியிலே நிற்கும் குதிரைகளைப் பிணித்துள்ளது போல உப்பு வணிகரின் படகுகள் தறிகள் தோறும் கட்டப்பெற்ற உப்பங்கழிகளைச் சூழ்ந்த சோலைகளும், பார்ப்பவர்களுக்கு மகிழ்ச்சியும், புதிய வருமானமும் தருகின்ற தோட்டங்களும், அவைகளின் பக்கங்களிலே பூஞ்சோலைகளும் எங்கும் காணப்பட்டன. அத்துடன் மழை மாசு நீங்கின ஆகாயத்திடத்து மதியைச் சேர்ந்த மகமாகிய வெள்ளிய மீனினது வடிவு பொருந்தின வலிமையயுடைய உயர்ந்த கரையையுடைய பொய்கைகளும் அங்கு காணப்பட்டன. இதனை ஆசிரியர்,

"மழை நீங்கிய மாவிசும்பின்
மதி சேர்ந்த மகவெண்மீ
னுருகெழுதிற லுயர் கோட்டத்து
முருகமர் முரண் கிடக்கை
வரியணி சுடர் வான்பொய்கை"

என்று கூறியுள்ளார். இந்த மதியினையும் மீனையும் பொய்கைக்கும் கரைக்கும் உவமிக்கும் பொருள்களாக ஆசிரியர் கையாண்டிருப்பதும், மணம் பொருந்தின பூ நிறக்கால் தம்முள் மாறுபட்ட பரப்பாலே பலநிறமணிந்த ஒளியினை யுடைய பொய்கைகள் என்று கூறியிருப்பதும் இலக்கிய இன்பம் பயப்பனவாகும்.

மேற்கூறியவை தவிர, இம்மையிலும் மறுமையிலும் காம இன்ப நுகர்ச்சியினை நல்கும் இணைந்த ஏரிகளும் பட்டினத்தில் இருந்தன.

**அறம் நிலைஇய அட்டிற்சாலைகள்**

அறம் நிரம்பிய அந்நகரில் வாழ்வோர், வருவோர்க்கு எல்லாம் உணவு இட்டனர். இதற்காகவே அட்டிற் சாலைகள் பல அந்நகரிலே நிரம்ப இருந்தன. அவ்வட்டிற்சாலைகளின் கதவுகளில் புலிச் சின்னம் பொறிக்கட்பட்டிருந்தது. இரு கதவுகளும் இடைவெளியின்றிப் பொருத்துவாயைப் பெற்று விளங்கின. மேலும் அவ்வட்டிற் சாலைகள் திருமகள் தங்கும் மதிலினைக் கொண்டிருந்தன.

அட்டிற்சாலைகளில் வடித்த சோற்றிலிருந்து வெளிப் படும் கொழுகஞ்சி ஆற்றின் வெள்ளம்போல் எங்கும் பரவி நின்றது. அக்கஞ்சியைப் பருகுவதற்குச் சென்ற இடபங்கள் ஒன்றோடொன்று தாக்கிப் பொருதமையினால், அக்கொழு கஞ்சி மண்ணோடு கலந்து சேறாகியது. அத்துடன் பல தேர்கள் ஓடுகையினாலே அச்சேறு தூளியாயிற்று. அத்தூளி சிறந்த சித்திரங்களை உடைய வெள்ளிய கோயில்களை மாசு படுத்தியது. அந்நிலையில் அக்கோயில்கள் புழுதியை மேலே பூசிக்கொண்ட யானையைப்போல அழுக்கேறி விளங்கின. இக்காட்சியை,

"அறநிலைஇய வகனட்டிற்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
யேறு பொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயின் மாசூட்டும்"

என்று பட்டினப்பாலை பகர்கின்றது.

குளிர்ந்த சிறிய குளங்களை உள்ளே அடக்கின முற்றத்தினை உடைய மாட்டுக் கொட்டில்களும், தவப் பள்ளிகளும் பட்டினமெங்கணும் காணப்பட்டன. அத்துடன் முனிவர்களது வேள்விச் சாலைகள் அமைந்த சோலைகளும் ஆங்காங்கே காணப்பட்டன. அச்சோலைகளில் சடைமுடி தரித்த முனிவர்கள் வேள்வி செய்ததால் எழுந்த புகையை மேகம் என்று கருதிய கருங்குயிற் சேவல்கள் அதற்கு அஞ்சி அச்சோலைகளில் இருத்தலை வெறுத்துத் தம் பெடைகளோடு அவற்றை விட்டு நீங்கின. பூதங்கள் காவல் செய்யும் காளி கோட்டத்திற்குச் சென்று, அங்கு ஏற்கெனவே தங்கி இருந்த புறாக்களோடு ஓர் ஒதுக்கிடத்தே தங்கின.

## பரதவர் குப்பம்

பழமையான மரத்தினைக் கொண்ட மேடுபள்ளமான இடங்கள் பல பரதவர் குப்பங்களில் இருந்தன. அகன்ற மணல்மேடுகளில் இளைஞரும் சுற்றத்தவருமாகக் குடியிருந்த அப்பரதவர், உண்டும் ஆடியும் மகிழ்ந்தனர், கடல் இறாமீனை சுடப்பட்ட இனிய இறைச்சியையும், வயல் ஆமையைப் புழுக்கின இறைச்சியையும், அவர்கள் உண்டனர். மணலிலே படர்ந்த அடப்பம் பூவைத் தலையிலே சூடினர். அத்துடன் நீரில் நின்ற ஆம்பற் பூவையும் பறித்துச் சூடினர். அகன்ற இடத்தையுடைய ஊர் வெளியிடத்தே பலரும் திரண்டு நின்றனர். அவ்வாறு அவர்கள் திரண்டு நின்ற காட்சியினை,

> "நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
> நாண்மீன் விராய கோண்மீன் போல"

என்று நீலநிறத்தையுடைய ஆகாயத்தே வலமாக எழுந்து திரியும் நாள்களாகிய மீன்களோடே கலந்த கோள்களாகிய மீன்கள் போல அவர்கள் குழீஇ நின்றனர் என்று ஆசிரியர் கூறியுள்ளார். அவர்கள் அவ்வாறு கூடி நின்றதற்குரிய காரணம் மன்றிலே மேழகக்கிடாயோடே சிவலையுங்கொண்டு பொருவித்து விளையாடுதற்காகும். அத்துடன் அவர்கள்

கையொடு கை பிணைந்தும், படைக்கலங்களோடு படைக் கலம் தாக்கியும், உடம்பொடு உடம்புபட உராய்ந்தும் பொருது நின்றனர். இத்தகைய பகை ஒன்றே அங்கு நிலவியதே தவிர, செருக்கினையுடைய பலகுடி கலங்கி எழுந்திருத்தற்குக் காரணமான பகை அங்கு ஒருபோதும் நிலவியது இல்லை.

## புறச்சேரி

பட்டினத்தைச் சுற்றிலும் ஏழைமக்கள் வாழும் புறச் சேரிகளும் இருந்தன. அப்புறச்சேரிகளில் பல குட்டிகளை யுடைய பன்றிகளும் பலசாதிக் கோழிகளும் திரிந்தன. உறை வைத்த கிணறுகளும் புறச்சேரியில் காணப்பட்டன.

## பரதவர் இருக்கை

நீண்ட தூண்டிற்கோலைச் சார்த்தி வைத்திருக்கும் குறுகிய கூரையையுடைய குடியிருப்புகளின் நடுவில் மீன்வலை உலரும் வெள்ளிய மணல் பரந்த முற்றத்தின்கண் ஆடவரும் பெண்டிரும் உண்டு ஆடி மகிழ்ந்தனர். நட்ட கல்லில் தெய்வமாக நின்றவனுக்கு அரணாக நிறுத்தி வைத்த வேலும் கேடயமும் போலக் கூரையின்மீது சார்த்திய தூண்டிற் கோலும், மீனிடும் புட்டிலும் காணப்பட்டன. மீன்வலை உலரும் வெண்மணல் பரப்பு, நிலவின் இடையே பரவிய இருளைப் போலக் காட்சியளித்தது. இதனை,

"நிலவடைந்த விருள்போல
வலையுணங்கு மணல்"

என்ற பட்டினப்பாலை வரிகளால் நாம் அறியலாம்.

இத்தகைய மணலையுடைத்தாகிய முன்றிலினையுடைய மனையிடத்தே முழுமதி நாளன்று புன்தலை இரும்பரதவர் பசிய தழையினையும் கரிய நிறத்தினையும் உடைய தம் மகளிரோடு கூடி, சினையினையுடைய சுறவின் கொம்பை நட்டு, அதற்குத் தெய்வத் தன்மை ஏற்றி, அதனைக் கடல்

தெய்வமாக வழிபட்டனர். அத்துடன் அவர்கள் வெண்டாளியினது தண்ணிய பூவாற் செய்த மாலையினையுடையராய், மடல் தாழை மலர் மலைந்தும், இனிய பனையிற் கள்ளை உண்டும், நெற்கள்ளை உண்டும் விளையாடி மகிழ்ந்தனர்.

கரியமலையைச் சேர்ந்த செக்கர் போலவும் தாய்முலை தழுவிய குழவி போலவும் தெளிந்த கடலினது திரைபோடே காவிரி ஒன்றுபடுகின்ற இடம் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் விளங்கியது. இதனை ஆசிரியர்,

"மாமலை அணைந்த கொண்மூப் போலவும்
தாய் முலை தழுவிய குழவி போலவும்
தேறு நீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும்"

என்று சிறந்ததோர் ஓவியமாகவே தீட்டிக் காட்டுகின்றார். இங்கு ஆசிரியர், கரிய உயர்ந்த திரையின் மீதே சிவந்த ஆற்று நீர் பரந்ததற்கு முதல் உவமையினையும் கடலும் காவிரி யாறும் ஒன்றுபட்டதற்கு இரண்டாவது உவமையினையும் மிகப் பொருத்தமாகக் கையாண்டிருப்பது, பட்டினப்பாலை ஆசிரியர் உவமைகளின் கருவூலமாக விளங்குகிறார் என்பதற்குச் சிறந்த சான்றாகும்.

கடலோடு காவிரி கலக்கும் புகார்முகத்தே, பரதவர்கள் தீது நீங்கக் கடலாடியும், மாசு போகப் புனல் படிந்தும், ஞெண்டுகளை ஆட்டியும், எழுந்துவரும் திரையினை உழக்கியும், பாவைகளைப் பண்ணியும், ஐம்பொறிகளால் நுகர்வனவற்றை நுகர்ந்து மயங்கியும், ஒருவரை ஒருவர் நீங்காத காதற்கிழமை பூண்டவராய்ப் பகற் பொழுதெல்லாம் விளையாடி நின்றனர். பகற்பொழுது நீங்கி மாலையும் வந்தது.

**இன்ப இரவு**

இரவுப்பொழுது அனைவர்க்கும் இன்பத்தைத் தந்தது. பெறற்கு அரும் துறக்கம் ஒக்கும் நெடிய கால்களையுடைய மாடத்தே மக்கள் இருந்து இனிய இசை கேட்டும், நல்ல

நாடகம் கண்டும் வெள்ளிய நிலவிற் பெறும்பயனை நுகர்ந் தனர். கள்ளுண்டலை நீக்கிக் காமபானத்தை உண்டு மகிழ்ந் தனர். பட்டு நீக்கி இரவுக் காலத்திற்குரிய மெல்லிய வெள்ளிய ஆடையை அணிந்து மகளிர் கணவரைக் கூடி. கங்குல் வந்ததும் கண்துயின்றனர். அத்துடன் இன்பமயக் கத்தினால் மைந்தர் கண்ணியை மகளிர் சூடினர். மகளிர் கோதையை மைந்தர் பெற்றனர். இஃது இவ்வாறிருக்க, பரதவர் கட்டுமரத்திலிருந்து கொண்டு மாடங்களில் எரியும் விளக்குகளை எண்ணி மகிழ்ந்தனர்.

## உல்கு செய்வோர்

கடையாமப் பொழுதில் சுங்கங் கொள்வோர் தம் கடைமையினின்றும் வழுவாமல் அரசனுக்குச் சேரவேண்டிய சுங்கவரியினைச் சுணங்காது பெற்றுத் தம் பணியினைப் பாங்கு டன் செய்தனர். காவிரியாறு புத்தம் புதிய பூக்களின் மணத்தைத் திரட்டிக் கொண்டு வந்து, தூய எக்கர் மணலில் சேர்த்தது. அம்மணலில் அவர்கள் சிறிது நேரம் கண்ணு யர்ந்து பின் தம் கடமையில் கருத்தூன்றினர். வெள்ளிய பூங்கொத்துக்களையுடைய தாழையினையும் கடற்கரையினை யும் உடைய பண்டசாலைத் தெருவில் அரசனது பொருளைப் பிறர் ஏய்த்துச் செல்லாமல் சுங்கப் பொருள் பெற்றுத் தம் காவல் தொழிலைச் செய்தனர். கதிரவன் தேரில் கட்டிய குதிரையைப் போல சுறுசுறுப்பாகச் சுற்றி வந்து இயங்கி அவர்கள் தங்களது கடமையை ஆற்றினர்.
இதனைப்பட்டினப்பாலை,

> "தொல் இசைத் தொழில் மாக்கள்
> காய் சினத்த கதிர்ச் செல்வன்
> தேர் பூண்ட மா போல
> வைகல் தொறும் அசைவு இன்றி
> உல்கு செய"

என்று எடுத்துக் காட்டுகின்றது.

**பட்டினப் பண்ட முற்றம்**

"வான் முகந்த நீர் மலைப் பொழியவும்
மலைப் பொழிந்த நீர் கடற் பரப்பவும்
மாரி பெய்யும் பருவம் போல"

பிற நாடுகளிலிருந்து சோழநாட்டில் இறக்குமதியாகிய பொருள்களும், ஏற்றுமதியாவதற்கு அங்குக் குவிக்கப்பட்ட பொருள்களும் வரம்பில்லாமல் பண்டசாலையில் வந்து நிறைந்தன. சிறந்த பாதுகாப்பும் பெரிய காவலையும் உடைய சுங்கச் சாவடியில் இருந்த சுங்கக் காவலர், வலி யுடைய பகைவர்களை இமையால் வருத்தும் கரிகாலனது புலி இலச்சினையைப் பொறித்து அவற்றை வெளிப் போக் கினர். அத்துடன் பண்டசாலை முன்றிலில் காணப்பட்ட பண்ட மூட்டைகளின் மீது கூரிய நகங்களையுடைய ஆண் நாய் ஆட்டுக்கிடாவோடு குதித்து விளையாடியது. இக்காட்சி மழை உலாவும் சிகரத்தையுடைய மூங்கிலையும் பக்க மலை யினையும் உடைய மலையிடத்தே உலாவும் வருடைத் தோற் றம் போல புலவருக்கு விளங்கியது. எனவே அவர்,

"மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போல"

என்று பாடியுள்ளார்.

**அங்காடித் தெரு அழகு**

அங்காடித் தெருவில் சுற்றுத் திண்ணைகளும், பல பகுதி களும், குறுவாயில் பெருவாயில்களும், இடைகழிகளும் பொருந்திய பெரிய வீடுகள் இரு மருங்கினும் இருந்தன. அவ்வீட்டுத் திண்ணைகளில் ஏறுவதற்குப் படிகள் அமைந்த ஏணிகள் சார்த்தி வைக்கப்பட்டிருந்தன. மேகம் தவழும் உயரிய மாடங்கள் அவ்வீடுகளை அழகு படுத்தின. சிவந்த அடிகளையும், நெருங்கிய துடைகளையும், பசும் பொன்னால் ஆகிய அணிகலன்களையும், மெல்லிய ஆடையினையும், பவளம்

போன்ற மேனியையும், மயிலின் இயலினையும், மான் நோக்கினையும், கிளி மழலையினையும், மென் சாயலினையும் உடைய அழகிய பெண்கள் வீட்டுச் சாளரத்தின் அருகில் வந்து நின்றனர். ஒரு சில மகளிர் தமிழ்க் கடவுள் முருகனுக்கு வெறியாட்டு எடுத்தனர். அதுகால் குழல் அகவியது; யாழ் முரன்றது; முழவு அதிர்ந்தது; முரசு இயம்பியது. வீட்டுச் சாளரங்களில் நின்ற மகளிர் பலை மகரந்தத்தைச் சிந்தும் காந்தளின் அழகிய கணுக்களிலே நிறைந்த மொட்டுக் கொத்தைப் போல வளைபலை அணிந்த முன் கைகளைக் கூப்பிச் செவ்வேளுக்கு எடுத்த வெறிபாட்டினைத் தொழுதனர். இவ்வாறு ஆடலும் பாடலும் இயைந்த இனிய விழாக்கள் அங்காடித் தெருவில் நிகழ்ந்ததால், அத்தெரு எப்பொழுதும் ஆரவாரம் மிக்கதாக விளங்கியது.

**கொடிகளின் கோலம்**

இல்லத்தில் உறைகின்ற தெய்வம் மகிழும்படி மலரணிந்த மனைவாசலிற் கட்டின கொடிகளும், வருகின்ற புனல் கொண்டுவந்த வெள்ளிய மணலையுடைய காட்டாற்றுக் கரையில் நின்ற அழகிய கரும்பினது ஒள்ளிய பூப்போல கடைத்தெருவிற்கு இரண்டு புறத்திலும் எடுத்த துகிற் கொடிகளும் பட்டினமெங்கும் பறந்தன. இதனை நூலாசிரியர்

"மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்
வருபுன றந்த வெண்மணற் கான்யாற்
றுருகெழு கரும்பி னொண்பூப் போல
........................................
மேலூன்றிய துகிற்கொடியும்"

என்று கவினுறக் காட்டுகின்றார். அந்துடன் வால் அரிசிப் பலி சிதறி ஊன்றிய மஞ்சிகையிற் கவிந்த சட்டங்களின் மேலே நட்டுவைத்த வெள்ளிய கொடிகளும், பல்கேள்வித் துறைபோகிய தொல் ஆணை நல்லாசிரியர் வாதிடுவதற்காகவேண்டி உயர்த்திய கொடிகளும், புகார்த்துறையில் நின்ற அசையாத

கப்பத்தினை அசைக்கும் யானைபோல நிற்கும் நாவாய்களின் மேல் கட்டிய கொடிகளும், மீன், இறைச்சி ஆகியவற்றைப் பொரிக்கும் முற்றத்தினையும், தெய்வத்திற்குக் கொடுக்கும் பலிபீடத்தினையுடைய வாசலினையும் உடைய கள்ளுண்பார் பலரும் செல்லும் மனைகளில் கள்ளின் விலைக்குக் கட்டின கொடிகளும் பட்டினமெங்கும் காணப்பட்டன. இவ்வாறு வண்ணக் கொடிகள் வகைவகையாக அமைந்து வானை எட்டியும் நகரை வளைந்தும் நிழலைத் தந்தன. இதனால் ஞாயிற்றின் கதிர்கள் பட்டினத்தின் உள்ளே நுழைய முடியவில்லை.

**பொருள் வளம்**

கடலின் வழியாக வந்த நிமிர்பரிப் புரவியும், கருங்கறி மூடையும், வடமலைப் பிறந்த மணியும் பொன்னும், குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும், தென்கடல் முத்தும், குணகடல் பவளமும், கங்கையாற்றில் உண்டாகிய பொருளும், கடாரத்தில் உண்டான நுகரும் பொருளும், சீன முதலிய இடங்களினின்று வந்த கருப்பூரம், பனிநீர், குங்குமம் முதலிய வேறு பல அரிய பொருள்களும் நிலத்தின் முதுகு நெளியும் படி வந்து குவிந்தன. சுருங்கக் கூறின் பட்டினத்தின் தெருக்கள் பல அரிய பெரிய பண்டங்களைக் கொண்டு விளங்கின. அத்துடன் அத்தெருக்களில் சோனகர், சீனர் முதலிய பல மொழி பெருகிய மக்கள் பண்புடைய பட்டின மக்களோடு பழகித் திரிந்தனர். இதனை ஆசிரியர்,

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமு
மரியவும் பெரியவு நெளிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்"

என்று அழகுறக் கூறியுள்ளார்.

## வேளாண்மை புரியும் வேளாளர்

பட்டினத்தில் தங்களது வேளாண்மையால் வீறு பெற்று விளங்கிய வேளாளர் கொலை கடிந்தும், களவு நீக்கியும், அமரர்ப் பேணியும், ஆவுதிகளை அவர் நுகரப் பண்ணியும் நல்ல பசுக்களோடு எருதுகளை ஓம்பியும், அறவோர் பேணியும், அறங்கள் பல வளர்த்தும், வறியோர்க்கு அரிசியும் கறியும் கொடுத்தும், இவ்வாறு அறத்தொழில்கள் பலவற்றைப் புரிந்து அருள்மிகு இல்லற வாழ்க்கையை இனிதாக நடத்தி நன்னெஞ்சினராக விளங்கினர்.

## வடு அஞ்சி வாய்மொழியும் வாணிகர்

வளைந்த மேழியால் உழவுத் தொழிலைச் செய்யும் உழவரது நெடிய நுகத்திற் பொருந்திய பலகாணிபோல நடுவுநிலை என்னும் பண்பினைக் கொண்டவராய் இங்கு உறையும் வாணிகப் பெருமக்கள் விளங்கினர். தம்முடைய பொருள்களையும் பிறரது பொருள்களையும் ஒப்பநாடி, வடு அஞ்சி வாய்மொழிந்து, தாங் கொள்ளுஞ் சரக்கை மிகையாகக் கொள்ளாது, தாங் கொடுக்கும் சரக்கைக் குறையக் கொடாமல், வாணிபத்தை அவர்கள் ஒழுங்காக நடத்தி உயர்ந்து விளங்கினர். அத்துடன் அவர்கள் தமக்குக் கிடைக்கும் ஊதியம் இஃது என்று வெளிப்படையாகச் சொல்லியே தம் பொருள்களை விற்றனர். இவ்வாறு நேர்மையான வழியிலே தான் அவ்வாணிகர் பொருள் திரட்டினர்.

இவ்வாறுகக் காவிரிப்பூம்பட்டினம் வளத்தாலும், நலத்தாலும், வாழ்வு நெறியாலும், பொருட் சிறப்பாலும் பொலிவும் உயர்வும் பெற்று விளங்கியது.

## திருமாவளவனின் வேலின் வெம்மை

கூர்மையான நகத்தினையும், கொடுவரியினையும் உடைய புலிக்குட்டி கூட்டினுள்ளே அடைபட்டு வளர்ந்தாற்போல

பகைவரால் பிணிக்கப்பட்டு சிறையில் இருந்து, வீரம் வயிர மேறி வளர்ந்து, அதன் பின்னர் தன்கோட்டால் அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று தன் பெண் யானையோடு சேரும் பெருங்கை யானையைப் போன்று, பெருமையும் உரனும் கொண்ட திருமாவளவன் பகைவர் சிறையினின்றும் தப்பித் தனது ஆட்சி உரிமையைப் பெற்ருன். இதனைப் பட்டினப் பாலை ஆசிரியர்,

> ' கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
> பிறர் பிணியகத் திருந்து பீடுசாழ் முற்றி
> யருங்கறை கவியக் குத்திக் குழி கொன்று
> பெருங்கை யானை பிடிபுக் காங்கு
> நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
> செறிவுடைத் திண்காப் பேறி வாழ்கழித்
> துருகெழு தாய மூழிஞெய்தி''

என்று பாங்குடன் கூறியுள்ளார்,

ஆட்சி உரிமையைப் பெற்ற அவன் தன்பகைவரை அடியோடு அழித்தற் பொருட்டு, தன் யானைப்படையோடும் குதிரைப்படையோடும் சென்று பகைவீரர்களை அழித்து, பூளையும் உழிஞையும் சூடி, முரசம் முழங்க முனைகெடச் சென்று, முதற் போரிலேயே பகைவர்களை முற்றிலும் அழித்தனன். பகைவர் தம் அரண்கள் தரைமட்டமாயின. மருதநில ஊர்கள் மண்ணோடு மண்ணாயின. கரும்பும் செந்நெல்லும் மயங்கிய வயல்களும், குவளையும் நெய்தலும் மயங்க, முதலைகள் கலித்த பொய்கைகளும் பாழ்பட்டன. அவ்விடங்களில் நீரற்றுப் போனதால் அறுகும் கோரைப் புற்களும் அடர்ந்து பெருகின. வயலும் வாவியும் வேறுபாடற்ற நிலையில் நீரற்று முல்லைக்காடுகளாக மாறின. அக்காடுகளில் இரலையும் மானும் விளையாடித் திரிந்தன,

பகைவர் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பெண்கள் நீரில் மூழ்கித் தூய்மையோடு அந்திப்பொழுதில் நந்தா

விளக்கை ஏற்றி வைத்து, மலர்தூவி, மெழுகி அழகுபடுத்திய கோயில்களுக்கு மக்கள் வந்து தொழுது சென்றனர். அத்தகைய சிறப்பு வாய்ந்த கோயில்களின் தூண்களில் இப்பொழுது பெரிய நல்ல களிறுகளுடனே பிடிகள் கூடித் தங்கின. இவ்வாறு தெய்வம் உறையும் அம்பலங்கள் யானைகள் தங்கும் சாலைகளாக மாறின.

நறிய பூக்களைத் தெருவில் தூவிக் கூத்தர் ஆடவும், அதற்குத் துணையாக முழவும் யாழும் இசைக்கவும் நடந்த பெருவிழாக்கள் ஒழிந்தன. அவ்விழாக்கள் நடந்த மன்றங்கள் பாழ்பட்டன. நெருஞ்சி முள்ளும் அறுகம் புல்லும் அம்மன்றங்களில் செறிந்தன: கூத்தர் ஆடிய அம்மன்றங்களில், நரிகளும் ஆந்தைகளும் ஆண்டலைப் பறவைகளும் கூவி ஓலமிட பேய்கள் துவன்று ஆடின.

வருகின்றவர்க்கு வற்றுது சோறு அளித்த வளம் நிறைந்த அட்டிற் சாலைகளில் உயரமான திண்ணைகளில் பைங்கிளிகள் மிழற்றின. மக்கள் அவற்றிற்குப் பால் ஊட்டி வளர்த்தனர். அத்தகைய வளமிக்க இடங்கள் எல்லாம் தற்பொழுது பாழ்பட்டுப் போயின. செருப்பணிந்த போர் வீரர்கள் அவ்விடங்களை மிதித்துப் பாழ்படுத்தினர். வில்லைத் தாங்கிய கொள்ளையர் அவ்விடங்களில் புகுந்து நெல்லை எல்லாம் வாரி எடுத்துச் சென்றனர். இவ்வாறெல்லாம் பகைவர் தம் ஊர்கள் பாழ்படுத்தப்பட்டன.

பகைவர்தம்மைப் பதை பதைக்கச் செய்த திருமாவளவன் மலையை மண்ணாக்குவான்; கடலைக் கட்டாந்தரையாக்குவான்; வானத்தைக் கீழ்வீழ்த்தலைச் செய்வான்; காற்றை இயங்காமல் விலக்குவான். இவற்றையெல்லாம் ஆசிரியர்,

"மலை அகழ்க்குவனே கடல் தூர்க்குவனே
வான் வீழ்க்குவனே வளிமாற்றுவன்"

என்று சுட்டிக்காட்டியுள்ளார், சுருங்கக் கூறின், இவன் முன்னிய துறைகளில் எல்லாம் வினைகளை வீரமுடன் முடித்து வெற்றியே கண்டான். இவனைக் கண்டு அஞ்சி ஒளிநாட்டார் ஓடி ஒழிந்தனர். அருவாளர் அஞ்சி ஒடுங்கினர். வடவர் வாடி நின்றனர். குடவர் கூம்பி நின்றனர். பாண்டியன் பதைத்து நின்றான். இருங்கோவேள் இருந்த இடம் தெரியாது மறைந்தான். ஆனால் திருமாவளவனே பகைவர் மதிலைத் தரைமட்டமாக்கும் யானைப்படையைக் கொண்டு விளங்கினான். அவன் கண் சிவந்து சினந்து நோக்கிய பொழுதெல்லாம் பகைவர் பட்டொழிந்தனர்.

## திருமாவளவனின் கோலின் செம்மை.

திண்ணிய தோளுடைய திருமாவளவன் தன் நாடெங்கணும் திருவிளங்கச் செய்தான். காட்டினை அழித்து நாடாக்கினான். நீர் நிறைந்த குளங்களைத் தொட்டு வளம் பெருக்கினான். உயர்ந்த மாடங்களை உடைய உறந்தை நகரை உயர்வுடன் விளங்கச் செய்தான். கோயில் பல கட்டினான். பழங் குடிகளை நிலைக்கச் செய்தான். வாயிலும் புழையும் அமைத்து ஞாயில் தோறும் அம்புக் கட்டுக்களைக் கட்டினான். அவனுடைய தலைநகர் வெற்றித் திருமகள் நிலைபெற்ற மதிலுடன் விளங்கியது. அம் மதிலின் ஒளியைக் கண்ட மாத்திரத்தே பகைவர் முகஒளி மங்கியது.

இரத்தினங்களை உரசிய மிகுந்த வலிமை பொருந்திய வீரக் கழலைத் தரித்த கால்களை உடைய திருமாவளனது மார்பில் பொற்றொடிப் புதல்வர் தவழ்ந்து விளையாடிய காரணத்தாலும், மெய்ம்முழுதும் அணிந்த அணிகலன்களை உடைய அவனது அழகிய மகளிர் அவனது மார்பைத் தழுவிய காரணத்தாலும் அவன் மார்பில் அணிந்திருந்த சந்தனம் அழிந்தது.

இவ்வாறாக அரிமா அன்ன அணங்குடைத்துப்பினை உடையவனாகத் திருமாவளவன் திகழ்ந்தான். அவன் வேல்

பகைவர்க்கு வெம்மையைத் தந்தது. அவன் கோல் குடிகளுக்கு வளத்தையும் நல்வாழ்வையும் தந்தது.

பாலைத்திணையின் பொருள்

திருமாவளவன் பகைவரை ஒழிப்பதற்கு உறுதியிட்டு வைத்த வேலினும் வெய்யதாக கானம் விளங்கியது. அவன் கோலினும் தண்ணியதாகத் தலைவியின் தடமென் தோள்கள் விளங்கின.

இதனை ஆசிரியர்,

"திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே"

என்று பாராட்டியுள்ளார். காட்டின் கடுமையினைக் கருதியும், தலைவியின் தண்ணிய தோளினை எண்ணியும்தான் பிரிவினை மேற்கொள்ள இருந்த தலைவன் அதனை மேற்கொள்ளாது,

"முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்" பிரிவை மேற்கொள்ள மாட்டேன் என்று உறுதி கூறி தலைவியின் அச்சத்தை நீக்கினன்.

இதுவரை கூறியவாற்றால், பத்துப்பாட்டில் ஒன்றான பட்டினப்பாலை பண்டை நாகரிகம் பகரும் பைந்தமிழ் நூல் என்பது இனிது பெறப்படும்.

பரணி & பரணி அச்சகம், இராயப்பேட்டை, சென்னை.